ஜனவரி 08 - 14, 2006 January 08 - 14, 2006 28 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



# கொலைகளின் நகரம்





# பொங்கி எழும் தமிழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெந்த புண்ணில் வேல்

**யுத்த காலத்தில் வீட்டை விட்டு வெளியேறினால் நாம் வீடு வந்து சேருவோமா என்ற பயம் மக்களை ஆட்கொண்டு இருந்தது. இன்று யுத்த நிறுத்தத்தின் போதும் இதே அச்சம் வடக்கு-கிழக்கு மக்களின் மனங்களை சூறையாடி இருக்கிறது. ஒன்றுமறியாத அப்பாவிகளின் உடல்களை துப்பாக்கிச் சன்னங்கள் துளைப்பதும் வீதி தோறும் ஒப்பாரிக் குரல்கள் கேட்பதும் இப்போது தமிழர் தாயகத்தின் நாளாந்த கதையாகி விட்டது.**

வடக்குக் கிழக்கில் வன்முறைச் சம்பவங்கள் புத்துயிர் பெற்று கட்டு மீறிச் செல்வது குறித்து மக்கள் மத்தியில் பேரதிர்ச்சியும் அச்சமும் நிலவுகிறது. யுத்தநிறுத்தம் காரணமாக கடந்த மூன்றரை ஆண்டுகளாக நிம்மதியாக வாழ்ந்து வந்த மக்களை இன்றைய யுத்த சூழல் அச்சம் கலந்த விரக்தி நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று நாற்பது நாட்கள் மட்டுமே கடந்த நிலையில் 43 படைவீரர்கள் உட்பட நூறு பேருக்கு மேல் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மஹிந்தவின் கௌரவமான சமாதான அணுகுமுறை இதுதானா என்று மக்கள் இப்போது கேட்க ஆரம்பித்து விட்டனர்.

**மாமனிதர்**

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரும்வரை வீட்டை விட்டு வெளியேறினால் நாம் வீடு வந்து சேருவோமா என்ற பயம் மக்களை ஆட்கொண்டு இருந்தது. இன்று மீண்டும் இதே அச்சம் வடக்கு-கிழக்கு மக்களின் மனங்களை சூறையாடி இருக்கிறது. ஒன்றுமறியாத அப்பாவிகளின் உடல்களை துப்பாக்கிச் சன்னங்கள் துளைப்பதும் வீதி தோறும் ஒப்பாரிக் குரல்கள் கேட்பதும் இப்போது தமிழர் தாயகத்தின் நாளாந்த கதையாகி விட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பேரினவாதத்தின் அடக்கு முறைக்குள் சிக்குண்டு அல்லல்படும் மக்களின் விடுதலைக்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்டவருமான மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் கிறிஸ்மஸ் தினத்தன்று தேவாலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த போது எட்டப்பர் கூட்டத்தின் துப்பாக்கிக் குண்டுகள் அவரின் உயிரைக் குடித்தன.

இவ்வாறு தமிழ்த் தேசியத்தை நோக்கி கொடூர அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்த ஒப்பந்த மீளாய்வு என்றெல்லாம் பிதற்றிக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை ஆயுதமுனையில் அடக்கிவிடுவதற்கான முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டு இருக்கிறதே அன்றி உருப்படியாக இது வரை எதையும் சாதிக்கவில்லை.

**கடும்போக்கு**

தமிழீழ விடுதலைப் புலிகளை ஒடுக்கிவிட வேண்டும் என்ற தனது இலக்கை அடைவதற்காக ஆயுதப் படைகளின் தளபதியாக மஹிந்தவினால் நியமிக்கப்பட்ட கடும் போக்காளரான சரத்பொன்சேகா இராணுவ கட்டமைப்பை புனரமைத்து யுத்தத்துக்கு தயாராவதற்கு மூன்று மாதகால அவகாசம் கோரி இருக்கிறார்.

பொலீஸ்விவகாரங்களுக்கான ஆலோசகரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொருளாளருமான முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் கொட்டகதெனிய ஸ்ரீலங்கா படைகள் இருபத்து நான்கு மணிநேரமும் போருக்கு ஆயத்தமான நிலையில் இருப்பதாகவும் போர் நிறுத்த உடன் படிக்கை திருத்தப்பட்டு மீண்டும் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலாக்கப்பட வேண்டும் என்றும் கூறித் தமிழ் மக்களை பயமுறுத்துகிறார்.

வடக்கு கிழக்கு தாயகத்தில், இராணுவத்தினரால் காட்டுத் தர்பார் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. குருவி சுடப்படுவது போல வயது வேறுபாடின்றி தமிழர் என்ற காரணத்தால் அப்பாவிகளை துப்பாக்கிக் குண்டுகள் துளைக்கின்றன.

இராணுவத்தினரின் இவ்வாறான போர் சன்னதத்தின் மத்தியில் நாட்டின் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவோ இன்னும் ஒரு படி மேலே போய் புலிகளின் ஒவ்வொரு நகர்வையும் அரசாங்கம் அவதானித்துக் கொண்டே இருப்பதாகவும் அவர்கள் அரசாங்கத்தின் பொறுமையைச் சோதிக்கிறார்கள் என்றும் கூறியிருப்பதுடன் அரசு போர் புரிவதற்கு தயாரான நிலையிலேயே இருக்கிறது என்றும் கூறி போர் முரசம் அறைந்திருக்கிறார்.

எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் உயிரைக் கபடத்தனமாக பறித்தது விடுதலைப் புலிகளே என்று சிறிதும் தயக்கமின்றி அரசாங்கம் குற்றம் சாட்டுகிறது.



**அபாண்டமான பழி**

மாமனிதர் ஜோசப் நாடாளுமன்றத்துக்கு உள்ளும் புறமும் தமிழீழ விடுதலைக்காக விடுதலைப் புலிகளின் குரலாக ஒலித்தவர், ஆயுதம் ஏந்தாத விடுதலை வீரர் அவர் என சர்வதேசமும் தெரிந்துவைத்திருக்கும் நிலையில் அரசாங்கம் இவ்வாறானதொரு அபாண்டமான பழியை தமிழீழ தலைமையின் தலையில் சுமத்தி இருப்பது தமிழ் மக்களை கோபாவேசம் கொள்ளச் செய்துள்ளது. மாறிமாறி வந்த சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கைகளினால் நிர்கதியாகி வெந்து புண்ணாகி போயுள்ள தமிழ் நெஞ்சங்களில் வேல் பாய்ச்சுவதைப் போல் அமைந்துள்ளது இந்த பொறுப்பற்ற குற்றச்சாட்டு. சர்வதேசத்தின் முன் தமது தோலை உரிப்பதற்கு அரசாங்கத்தால் மேற் கொள்ளப்பட்ட கபடத்தனமான முயற்சி இது என்பதை விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் நன்கு அறிவர்.

தமிழர் தாயகம் எங்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உட்பட அனைத்து மக்களும் தமிழ்த் தாயின் அன்புப் புதல்வனுக்கு மாமனித பட்டம் வழங்கி கௌரவித்ததுடன் தமது கண்ணீரை அவருக்கு காணிக்கையாக்கி அஞ்சலி செலுத்தி தமது இறுதி மரியாதையை தெரிவித்துக் கொண்டனர். கட்சி பேதமின்றி தமிழ்த் தலைவர்கள் அனைவரும் இணைந்து கண்ணீரால் விடைகொடுத்து அவரது பூதவுடலை அனுப்பிவைத்தனர். அதனால் உலகம் உண்மையை உணர்ந்து கொண்டது.

தமிழ்மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள 125 அமைப்புகள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய சர்வதேச தமிழர் சம்மேளனம் (INTERNATIONAL FEDERATION OF TAMILS) மாமனிதர் பரராஜசிங்கத்தின் கொலைக்கு ராஜபக்ஷவின் அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறி இருப்பதுடன் குற்றவாளியான இலங்கை அரசைக் கண்டிக்குமாறு சர்வதேச நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

திட்டமிட்டு மிருகத்தனமாக இந்தக் கொலையைப் புரிந்த மஹிந்த அரசாங்கத்தின் அங்கமான இரகசியப் புலனாய்வுப் பிரிவும் அதன் வழிநடத்தலில் இயங்கும் ஒட்டுப்படைகளுமே இந்தக் கொலைக்குப் பொறுப்பு என இவ் அமைப்பு ஓங்கிக் குரல் கொடுத்தள்ளது.


**களநிலைமை**

அரசாங்கமோ தனது சுட்டுவிரலை தமிழீழ விடுதலைப் புலிகளை நோக்கித் நீட்டி தனது குற்றச்சாட்டை தொடர்ந்த போதும் மாமனிதரின் கொலைக்கு உரிமை கோரியுள்ள 'சென்னன் படை' தமிழ் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமது பதவிகளைத் துறக்க வேண்டுமெனவும் தவறும் பட்சத்தில் மாமனிதர் பரராஜசிங்கத்துக்கு நேர்ந்த கதியே அவர்களை அரவணைக்கும் எனவும் எச்சரித்துள்ளது.

இந்த எச்சரிக்கையையும் களநிலைமையையும் அவதானித்துப் பார்க்கும் போது தற்போது இடம் பெறும் வன்முறைகள் மேலும் விரிவடைவதற்கான சமிக்ஞைகளே தெரிகின்றன.

இங்கே நம் கண்களுக்கு நன்றாகத் தெரியும் விடயம் ஒன்று உண்டு. தீவிர சிங்கள-பௌத்த பேரினவாதத்தில் குளிர்காய்ந்து ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மஹிந்த ராஜபக்ஷ, கடும்போக்குள்ள தளபதிகளை முப்படைகளுக்குமான கட்டமைப்பில் இணைத்துக் கொண்டதை அடுத்தே வன்முறைகள் வடக்கு கிழக்குத் தாயகத்தில் கட்டு மீறின.

**-சுபாஷ்-**



தமிழ் மக்களின் தேசியத் தலைவர் பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையிலான தீர்வொன்றை வழங்கு வதற்கு அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கி இருந்தார்.

ஆனால் அரசாங்கமோ, தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் கட்டி எழுப்பி இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை தீவிரப்படுத்துவதை விடுத்து

*தமிழீழ விடுதலைப் புலிகளை மேற்கு நாடுகளில் எப்படித் தடை செய்யலாம் என்பது பற்றியும்.

*அவர்களுக்கு வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடம் இருந்து கிடைக்கும் பெருந் தொகை நிதியை எவ்வாறு தடுத்து நிறுத்தலாம் என்றும்

*இராணுவத்தை எவ்வாறு நவீன மயப்படுத்தி, பலப்படுத்தலாம் எனவும்

*சமாதான அனுசரணைப் பணியில் இருந்து எரிக் சொல்ஹேய்மை எப்படி வெளியேற்றலாம் என்றும்

*இந்தியாவினூடாக தமிழீழ விடுதலைப் புலிகளை எவ்வாறு மட்டம் தட்டலாம் என்றும்

சிந்தித்து செயற்படுகிறதே அன்றி சமாதானதீர்வு முயற்சிகளை முன்னெடுப் பதற்கான ஆக்க பூர்வமான முயற்சிகள் எதிலுமே இது வரை அது ஈடுபடவில்லை.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹெக்ரப் ஹொக்லண்ட் வன்முறைகள் தொடருமானால் யுத்தம் வெகு தூரத்தில் இல்லை என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். சர்வதேசமும் இதையே தான் தினமும் கூறி வருகின்றது. ஆனால் அரசாங்கத்தால் உஷார் படுத்தப்பட்டுள்ள இராணுவத் தரப்போ 'போர், போர்' என்றே முழக்கமிடுகிறது. ஆனால் விடுதலைப் புலிகளும் அவர்களின் பின்னால் அணிதிரண்டு நிற்கும் தமிழ்மக்களும் பொறுமை காத்து வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன், தமிழ் மக்கள் பொறுமையின் விளிம்புக்கு தற்போது தள்ளப்பட்டு இருப்பதாகத் தெரிவித்து அவர்களின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என எச்சரித்திருப்பது அடுத்து என்ன நடக்குமோ என்று அனைவரையும் ஏங்கவைத்துள்ளது. ஆம், யுத்தம் ஒன்று வெடிக்குமானால் அதன் விளைவுகள் பயங்கரமானவையாகவே இருக்கும். 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பதை ஜனாதிபதி உணர்ந்து அதற்கேற்ற வகையில் தனது காய்களை நகர்த்துவது நல்லது.

**நாடுபற்றி எரிகிறது**

இங்கே நாடுபற்றி எரிகிறது. ஜனாதிபதி மஹிந்தவோ நாடுபற்றி எரியும் போது பிடில் வாசித்த ரோமாபுரியின் 'நீரோ' மன்

(27 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் ஆழ ஊடுருவித் தாக்குதல்!

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள், ஆழ ஊடுருவித் தாக்கும் அணியினர் ஊடுருவியுள்ளனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

எல்லைப் புறப் பாதுகாப்புக்கு சவால் விடும் வகையில் இந்த அணியின் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

முதலாவது சம்பவம் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவிய ஆழ ஊடுருவித்தாக்கும் அணியினர் கிளைமோர் தாக்குதல் ஒன்றை நடத்திவிட்டுத் தப்பி விட்டனர் என்ற தகவல் கசிந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தின் நிதிப் பொறுப்பாளரை இலக்கு வைத்து, அவர் பயணம் செய்த 'ஹைஏஸ்' வாகனத்தை நோக்கி இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர் பயணம் செய்த வாகனம் இத்தாக்குதலில் சிக்காததால் அவர் தப்பினார்.

இத்தாக்குதல் விடுதலைப் புலிகளின் வட்டாரங்களில் பெரும் ஆச்சரியத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியது.

தற்போது இடம் பெற்றிருப்பது இரண்டாவது சம்பவம். இதில் மேஜர் ஜெயானந்தனும் நாட்டுப்பற்றாளர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவங்களை அடுத்து விடுதலைப் புலிகள் பாதுகாப்பைப் பலப் படுத்தியுள்ளனர். ரோந்துப் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. ஊடுருவியிருப்பவர்களைக் கண்டு பிடிப்பதற்காக தேடுதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

மொத்தத்தில் பாதுகாப்பு இறுக்கமாக்கப்பட்டு விட்டது.

வெளிமாவட்டங்களில் இருந்து வன்னி வந்து திரும்புபவர்களின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. அவர்கள் திரும்பிச் செல்லும் காலம், தங்குமிடம் போன்றவற்றை அறிந்துகொள்ள விசேட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

2000 ஆம் ஆண்டில் இருந்து 2002 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் ஆழ ஊடுருவித் தாக்கும் அணியினர் வன்னிக்குள் ஊடுருவி முக்கிய தளபதிகள், அரசியல்துறைப் பொறுப்பாளர்களை இலக்கு வைத்துத் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

மல்லாவியில் நோர்வேக் குழுவினரைச் சந்திப்பதற்காக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச் செல்வன் தலைமையிலான குழுவினர் சென்ற வாகன அணி மீது கொக்காவில் வீதியில் வைத்து முதலாவது தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. இத்தாக்குதலில் தமிழ்ச்செல்வன் தப்பினார். ஆனால் அந்த அணியில் பாதுகாப்புப் பணியில் சென்ற வெள்ளை என்ற போராளி வீரச்சாவடைந்திருந்தார்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தொடர் தாக்குதல்களில் பலர் வீரச்சாவடைந்திருந்தனர். அக்கராயனில் நடந்த தாக்குதலில் கடற்புலிகளின் துணைத் தளபதியான லெப்.கேணல் கங்கை அமரன் உயிரிழந்தார். அதைத் தொடர்ந்து முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் நடந்த தாக்குதலில் விடுதலைப் புலிகளின் விமானப்படையின் பிரதான தளபதியும் விடுதலைப் புலிகளின் 'மூளை' என சிங்கள ஊடகவியலாளர்களால் வர்ணிக்கப்பட்ட கேணல் சங்கர் உயிரிழந்தார்.

மன்னாரில் இரு தடவைகள், வடமுனைத் தளபதியான கேணல் ஜெயம் மீதும் நெடுங்கேணியில் பால்ராஜ் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தோல்வியில் முடிவடைந்தன. அவர்கள் மயிரிழையில் உயிர் தப்பி இருந்தனர்.

விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள், அரசியல் துறைப் பொறுப்பாளர்கள் ஆகியோரை இலக்கு வைத்துத் தான்இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்பது கவனிக்கத் தக்க விடயம்.

இதே பாணியில் கிழக்கிலும் அந்தக்காலப்பகுதியில் ஆழ ஊடுருவும்படையினரின் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத் தாக்குதல்களில் ஒன்றில் விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதியான நிசாம் கொல்லப்பட்டிருந்தார்.

2002 ஆம் ஆண்டில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்தான பின்னர் இந்த ஆழ ஊடுருவல் படையினரின் தாக்குதல்களும் நின்று போயின.

கிழக்கில் மட்டக்களப்பில், திருகோணமலையில், அம்பாறையில் ஊடுருவல் தாக்குதல்கள் கடந்த ஒரு வருட காலத்தில் நடைபெற்றுள்ளன. இத்தாக்குதல்களை அரசின் புலனாய்வுப் பிரிவும் ஒட்டுக் குழுக்களும் இணைந்து மேற்கொள்கின்றன என்று விடுதலைப் புலிகளால் குற்றச்சாட்டு வெளியிடப் பட்டிருந்தது.

இத்தாக்குதல்கள் திட்டமிடப்படாத நிலையில் திடீர் தாக்குதல் பாணியில் தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய தாக்குதல்கள் பல விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டும் உள்ளன. சில தாக்குதல்களில் பொதுமக்கள் சிக்கியும் உள்ளனர். போராளிகள் சிலரும் இத்தாக்குல்களில் உயிரிழந்தனர்.

தற்போது நடந்திருக்கும் தாக்குதல்கள் மீண்டும் புதிய முகாம் அமைத்து அணி ஒன்று செயற்பட திரைமறைவில் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின் படைத்தலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக புதிய அணுகுமுறையை புதிய தலைமைகள் எடுத்துள்ளனவா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை நெருக்கடி நிலைக்குள் சிக்கி, அடுத்த கட்டத்துக்கு நகருமா என்ற சந்தேகம் சகல தரப்பினர் மத்தியிலும் எழுந்துள்ளது.

இந்த நிலையில் புதிய வடிவில் விடுதலைப் புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்களைத் தீர்த்துக்கட்டுவதற்கான தாக்குதலில் மேஜர் ஜெயானந்தனும் நாட்டுப் பற்றாளர் ஒருவரும் கொல்லப்பட்டமை இதனை உறுதி செய்கிறது.

அத்துகிரியவில் அமைந்திருந்த 'மிலேனியம் சிற்றி' என்ற முகாமில் இந்த ஆழ ஊடுருவித் தாக்கும் அணி செயற்பட்டதாகவும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு 2001 இல் பதவியேற்ற போது அந்த முகாம் கலைக்கப்பட்டதாகவும் அப்போது தகவல்கள் வெளியாகியிருந்தன.

நன்கு திட்டமிடப்பட்டு ஊடுருவி தளபதிகள், பொறுப்பாளர்களை இலக்கு வைக்கும் நோக்குடனான தாக்குதல்களாக இவை

**- குகன் -**

அமையாத போதும் இடைக்கிடையே இத்தகைய தாக்குதல்கள் தற்போதும் தொடர்கின்றன.

கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை மன்னாரில் சோதனை நிலையத்துக்கு சமீபமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இடம்பெற்றுள்ள தாக்குதல் மீண்டும் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி உயிர்பெற்று விட்டதா என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்திருந்தது. இப்பொழுது மற்றொரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ஒரு பக்கம், மக்கள் மீதான நெருக்குவாரங்களைத் தீவிரப்படுத்திக்கொண்டு மறுபுறத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளை தீவிரமாக்குவது சமாதான சூழலைத் தக்கவைக்க உதவமாட்டாது. மாறாக பெரும் யுத்தம் ஒன்றுக்கான வழியைத் திறப்பதாகவே அமையும்.

இத்தகைய யுத்த நிலை ஒன்றைத் தவிர்ப்பதற்கு உடனடியாக அரசும் - விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

நெருக்கடி நிலையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையை சீராக - செம்மையாக - நடைமுறைப்படுத்தக் கூடிய வழிமுறைகளை ஆராயும் நேரடிப் பேச்சே உடனடித் தேவை.

இந்தப் பேச்சை எவ்வளவு விரைவாக நடத்தலாமோ அவ்வளவு விரைவாக நடத்தி சுமுக நிலை ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதே சகல தரப்பினரின் விருப்பமும் எதிர்ப் பார்ப்புமாகும்.

நேரடிப் பேச்சை ஆசிய நாடு ஒன்றில் நடத்த வேண்டும் என்ற ஜே.வி.பியின் விடாப்பிடியான போக்கை கணக்கில் எடுக்காமல், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ துணிந்து முடிவு எடுத்து, விடுதலைப் புலிகளின் நிலைப் பாட்டை ஏற்று நேரடிப் பேச்சை நடத்துவாராக இருந்தால் நிச்சயம் அமைதிச் சூழலை உருவாக்க முடியும். அதன்மூலம் அவரின் ஆட்சியும் ஸ்திரமாகும். அதன் மூலம் நாடும் 'மஹிந்தவின் சிந்தனை'யின் அடிப்படையில் பொருளாதாரத்துறையில் முன்னேற்றமடையும்.

விடைபெற்றுச் சென்ற ஜனாதிபதி சந்திரிகா 11வருடங்கள் ஆட்சி செய்த போதும், எதையும் சாதிக்காமல் வீடு சென்றது போல் அல்லாது, புதிய ஜனாதிபதி துணிந்து தமது ராஜதந்திரச் செயற்பாடுகளை முன்னெடுப்பாரானால் அவர் பெயர் நிலைபெறும்.

தற்றுணிவுடன் அவர் செயற்படுவாரா? அல்லது பேரினவாதச் சக்திகளின் கைப் பொம்மையாகச் செயற்பட்டு நாட்டைக் குட்டிச்சுவராக்கப் போகிறாரா? பொறுத்திருந்து பார்ப்போம். *



மேஜர் ஜெயானந்தன்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் மீண்டும் ஊடுருவித் தாக்குதல் நடத்தும் சம்பவம் இடம்பெறக் கூடும் என இந்தப் பத்தியில் எச்சரிக்கைக் கட்டுரை வரையப்பட்ட வேளையிலேயே 3 ஆம் திகதி மீண்டும் ஒரு தாக்குதல் மன்னாரில் அரங்கேறியிருகின்றது.

புலிகள் மீது இத்தகைய தாக்குதல்கள் தொடரும் என்பதற்கு கட்டியம் கூறுவது போல் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

புலிகளின் மன்னார் மாவட்ட நிதிப்பொறுப்பாளரை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியிலேயே இத்தாக்குதலும் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளின் வவுனியா மேற்குப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மேஜர் ஜெயானந்தன், நாட்டுப்பற்றாளர் தேவராஜா வினோதன் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர்.

## மன்னார் தாக்குதல்



இத்தகைய தாக்குதல்கள் தொடரும் என்பதற்கான அறிகுறிகள் நிறையவே தென்படுகின்றன. அதற்கான பதில் தாக்குதல்களையும் விரைவில் எதிர்பார்க்கலாம். இதேபகுதியில் ஊடுருவிய மூன்று ஸ்ரீலங்கா பொலீஸார் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு தமிழீழ நீதிமன்றத்தால் கடந்த சில மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொலைகளின் நகரம்

**ராஜ்** வழமைபோன்றே காலையில் அலுவலகத்திற்குப் புறப்பட்டான். வீட்டில் இருந்து சைக்கிளில் கிளம்பி, பிரதான வீதிக்கு வந்து பஸ் ஏறவேண்டும் அவன். அலுவலகத்தில் அவனது பிரிவுக்கு புதிதாய் வந்திருக்கும் பொறுப்பதிகாரி நேரத்திற்குச் செல்லவில்லை என்றால் ஏன்? எதற்கு? என்று கேள்விகள் கேட்டுக்கொண்டிருப்பார்.

வேகமாகச் சைக்கிளை உழக்கி வந்து, அவசர அவசரமாக வீதியோரக் கடையருகே நிறுத்தி விட்டு, வந்து நின்ற பஸ்ஸில் தாவினான் ராஜ்.

பரவாயில்லை! பஸ்ஸைத் தவறவிடவில்லை. நேரத்திற்கு அலுவலகம் போய்ச் சேர்ந்து விடலாம் என்று தன்னையே ஆசுவாசப்படுத்திக் கொண்டான். வழமையான பயணம். ஆங்காங்கே 'வர்ணங்கள்' தென்பட்டன. என்றாலும் இராணுவக் கெடுபிடிகளுக்குப் பிறகு கண்ணுக்குக் குளிர்ச்சியாக அதிகம் பார்க்கவே முடிவதில்லை.

யன்னலோரம் இருந்து வெளியே தலையை நீட்டி, வீதி வழியே போகும் 'வர்ணங்களை'யும் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

'பல்ஸர்' ரக மோட்டார் சைக்கிள் ஒன்று பஸ்ஸைக் கடந்து வீதியோரம் நின்றிருந்தது. இந்த ரக மோட்டார் சைக்கிள்கள் இப்போது ஆபத்துக்குரியவை என்ற சிந்தனையுடனேயே அவனது கவனம் அதன் மீது இயல்பாகப் படர்ந்தது.

நீண்ட தொலைவிலேயே அதன் மீது அவன் கண் வைத்து விட்டான். ஏனோ கண்களை அதிலிருந்து அகற்ற முடியவில்லை. வழமையிலும் பார்க்க மாறுபட்ட அம்சம் எதுவோ அவனை அந்த மோட்டார் சைக்கிளையும் அதிலிருந்தவர்களையும் கண்களாலேயே பின்தொடரத் தூண்டியது.

இருவர் அதில் இருந்தனர். வாட்டசாட்டமாக இருந்தார்கள். பின்னால் இருந்தவர் இடுப்பில் கை வைத்திருந்தார். யாரையோ எதிர்பார்த்திருப்பார்கள் போலும். அவர்களைப் பார்க்க அப்படித்தான் தெரிந்தது. அவனிடமும் ஒரு ஹிறோ ஹொண்டா இருக்கிறது. ஆனால் அதனை இப்போது அவன் பயன்படுத்துவதேயில்லை. யாழ்ப்பாணத்து நிலைமைகளால் ஏற்பட்ட பயம் காரணம்.

அவனது சிந்தனையைக் கலைத்தபடியே பஸ்ஸைத் தாண்டிப் போகிறது 'மேற் -90' ரக மோட்டார் சைக்கிள் ஒன்று. அதன்பின்னேயே கண்களை ஓடவிட்டவன் 'பல்ஸர்' புறப்படவும் அதற்குத் தாவினான்.

இப்போது முன்னால் 'மேற்' பின்னால் 'பல்ஸர்'.

திடீரென 'பல்ஸர்' வேகமெடுத்து, 'மேற்றின்' அருகே சென்றது.

'பல்ஸரின்' பின்புறம் இருந்தவரின் கைகள் மெதுவாக 'மேற்' நோக்கி நீள்கின்றன. ராஜ்ஜின் நெஞ்சு நடக்கப் போகும் விபரீதத்தை உணர்ந்தது. 'திக்' 'திக்' என அடிக்கிறது.

"டீர்" "டீர்" எனத் தொடர்ச்சியாகக் கேட்ட சத்தங்கள் அந்தப் பகுதியின் அமைதியைக் குலைத்துச் சிதறித்தபடி குரூரமாய் சிரிக்கின்றன.

குருதி ஒரு கணம் உறைந்துபோன அதிர்ச்சி ராஜ்ஜினுள். பயத்தில் உடல் நடுக்கமெடுக்கிறது.

சுட்டவர்கள் சிறிது தூரம் சென்றபின்னர் மீண்டும் திரும்பி பலாலி வீதி வழியாகவே இவர்களின் பஸ் நோக்கி வருகிறார்கள்.

"என்ன செய்யப் போகிறார்களோ? யாரைச் சுடப்போகிறார்களோ?" ராஜ்ஜின் இதயம் எகிறி வெளியே தெறிக்கும் அளவிற்குப் பதறுகின்றது. அவனது 'லப்-டப்' வெளியே கேட்கிறது. ஆனால், எந்தச் சலனமும் இன்றி அந்த மோட்டார் சைக்கிள் பஸ்ஸைக் கடந்து செல்கிறது.

தன்னைக் கண்டு கொண்டாலும் என்ற அச்சத்தில் தலையைச் சற்றே உள்ளே எடுத்துக் கொண்டான் ராஜ். அவர்கள் கடந்து சென்ற பின்னே அவசரமாக வெளியே எட்டி, சூடு பட்டவரின் நிலையைப் பார்த்தான்.

மோட்டார் சைக்கிளில் இருந்தபடியே வீதியில் சரிந்து கிடந்தார். 6 லீற்றர் இரத்தமும் வெளியேறி வீதியில் பரந்து சிவப்புக் கம்பளம் விரித்திருந்தது.

இளைஞராய்த் தெரிந்தார். திடகாத்திரமாக இருந்தார். அவரது உயிரின் கடைசி கணங்கள் பிரிந்து கொண்டிருந்தபோது அவனது பஸ் அந்த இடத்தைக் கடந்து அமைதியாகச் சென்று கொண்டிருந்தது.

"யார் இவர்? ஏன் சுட்டார்கள்?" மனதிற்குள் மட்டுமே கேள்விகள் கேட்டன. "நாளை காலை பத்திரிகை பார்த்தால்தான் இனி விடை தெரியும்."

அன்று அவன் சரியான நேரத்திற்கு அலுவலகம் வந்து சேர்ந்துவிட்டான். பதிவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டபோது நாளை நானும் கூட இவ்வாறு சுடப்பட்டால் இந்தப் புத்தகத்தில் யார் கையெழுத்திடுவார்கள் என்று உள்ளே கேட்ட கேள்வியை அவசர அவசரமாக மறக்கப் பார்க்கிறான். ஆனால், விடாமல் அது அவனுள் ஒலித்துக் கொண்டே இருக்கிறது....!

யாழ்ப்பாணத்தில் கடந்த 31ஆம் திகதி, பலாலி வீதியில் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கும் பிரதேச சபை அலுவலகத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் இடம்பெற்ற கொலையை நேரில் கண்ட ஒருவரின் அவதானிப்பு இது. வயாவிளான் குட்டியபுலத்தைச் சேர்ந்த தச்சுத் தொழிலாளியான யோகலிங்கம் ஜெயசீலன் (வயது 27) என்ற நபரே இவ்வாறு பலர் பார்த்திருக்க சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இந்தக் கொலையுடன் படையினருக்குத் தொடர்புகள் இருக்கின்றன என்றே யாழ்ப்பாணத்தில் பேசப்படுகின்றது.

தாவடியில் உள்ள தச்சு வேலைத் தளத்திற்குச் செல்வதற்காக காலையில் பயணித்துக் கொண்டிருந்த சமயத்திலேயே ஜெயசீலன் சுட்டுக் கொல்லப்பட்டார். வீதியில் பயணிப்போர் இவ்வாறு எப்போது கொல்லப்படுவார்கள் என்று தெரியாத பீதியில் உறைந்து போய் இருக்கிறார்கள் யாழ். மக்கள்.

கொலைகளின் நகரமாக மாறி நிற்கும் யாழ்ப்பாணத்தில் இப்போது நாளுக்கு ஒரு கொலையாவது நடக்காமல் விடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

**- பிரம்மா.**



# கொள்ளைகளாலும் மூச்சுத் திணறும் யாழ்ப்பாணம்

**- அபிமானன் -**

யாழ். குடாநாட்டில் கொலைகள், கைதுகள், காணாமற்போதல்கள், சுற்றிவளைப்புகள், வன்முறைகள் எனச் சிக்கித்தவிக்கும் பொதுமக்கள் தற்போது கொள்ளையடிப்பவர்களிடமும் சிக்கித்திணறுகின்றனர்.

வீதியில் பகலில் நடமாடினால் மீண்டும் உயிருடன் வீடு திரும்புவோமா என்ற அச்ச உணர்வில் தினம் காலத்தைக் கழிக்கின்றனர். இந்த நிலையில் இப்போது இரவு வேளையில் வீடுகளுக்குள் யார் நுழைவார்கள் என்று தெரியாது அந்தரிக்கின்றார்கள். உயிர் பறிக்கப்படுமா? சொத்து சூறையாடப்படுமா? என்ற ஏக்கத்தில் தூக்கம் இன்றித் தவிக்கின்றனர்.

கடந்த முதலாம் திகதி புத்தாண்டு உதயமாகி சில மணித்தியாலங்களில் - யாழ் நகரில் வண்ணார் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள இரு வீடுகளிலும், தட்டாதெரு சந்திக்கு அண்மையில் உள்ள வீடொன்றிலும் முகங்களை மறைத்து ஆயுதங்களுடன் பிரவேசித்த கும்பல் தம்மை இராணுவம் என்று கூறி கொள்ளையிட்டுள்ளது.

வீட்டார் கூக்குரலிட்ட போதும் வீட்டின் கூரைகளைப் பிரித்து உள்நுழைந்து அங்கிருந்தவர்களை ஆயுத முனையில் இருத்திவிட்டு மிகவும் அவதானத்துடன், பொறுமையாக இருந்து வீடுகளையெல்லாம் சோதனையிட்டு அங்கிருந்தவற்றையெல்லாம் சுருட்டிச் சென்றுள்ளனர்.

நகரில் மானிப்பாய் வீதியில் உள்ள இரண்டு வீடுகளில் கத்திகள், பொல்லுகள், வாள்கள் சகிதம் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை ஒரு கும்பல் இறங்கியுள்ளது. அந்தக் கும்பலும் தம்மை இராணுவம் என்று அறிமுகம் செய்துவிட்டுத்தான் இரண்டு வீடுகளில் கொள்ளையிட்டுள்ளது. பச்சிளம் குழந்தைகளை வாள்முனையில் வைத்து தமது கைவரிசையை மிகவும் புத்திசாதுரியமாகக் காட்டியுள்ளனர். இதில் யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஒருவரின் வீடும் இலக்கானது.

5 மாதங்களுக்கு முன்னர் இவருடைய வீட்டில் 35 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன. மீண்டும் வந்து அந்தப் பொருள் எங்கே இந்தப் பொருள் எங்கே என்று கேட்டுக் கேட்டும் கொள்ளையிட்டுள்ளது அக்கும்பல். சிங்கள மொழியிலும் அவர்கள் சரளமாக உரையாடுகின்றனர் என்று கொள்ளையிடப்பட்ட வீட்டின் உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

இத்தகைய கொள்ளைச் சம்பவங்களுக்கு யார் பொறுப்பு?

இன்றைய யாழ்ப்பாணச் சூழ்நிலையினைப் பொறுத்தவரை மாலை 5 மணியோடு வீதிகளெல்லாம் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

இரவில் மக்கள் வீதிக்கே இறங்கத் தென்பில்லாமல் வாழ்கின்றனர் என்பது அனைவரும் அறிந்ததே. அப்படி நேரம் தாமதித்து வீதியில் நடமாடினால் இராணுவத்தினர் கடுமையாகச் சோதனை செய்கின்றனர். பொல்லுகளாலும் போட்டுத் தாக்குகிறார்கள். இல்லையேல் சுட்டுக் கொல்கின்றனர்.

அண்மையில் நீர்வேலி, ஈவினைப் பகுதியில் பிறந்த நாள் கொண்டாட்டம் ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு நள்ளிரவு வீடுதிரும்பிக் கொண்டிருந்த இரண்டு குடும்பஸ்தர்கள் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர்.

இப்படிப்பார்க்கையில் இந்தக் கொள்ளைக் கும்பல் நள்ளிரவிலும், அதிகாலையிலும் வீடுகளில் புகுந்து அராஜகம் புரிவது எப்படி? படையினரின் கண்களில் இவர்கள் படுவதில்லையோ? கொள்ளையடித்தபின் எப்படித் தப்பித்துக்கொள்கிறார்கள்? என்ற கேள்விகள் விடை தெரியாதவை.

இந்தக் கொள்ளைகளுக்குப் படையினரின் உதவி எந்த வகையிலோ நிச்சயம் கிடைக்கின்றது என்பது தெட்டத்தெளிவான உண்மை.

பொலிஸாரின் சிவில் நிர்வாகம் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறும் போது யாழ். பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசியில் தகவல் கொடுத்தாலும் "விடிந்ததும் இது பற்றி முறைப்பாடொன்று செய்யுங்களேன்!" என்ற பதில்தான் கிடைக்கிறது.


இத்தகைய சூழ்நிலையில் யாழ். மக்கள் தமது துயரங்களை யாருக்குக்கெடுத்து உரைப்பார்கள்? யாரிடம் முறையிடுவார்?.

மானிப்பாய் வீதியில் கொள்ளையிடப்பட்ட வீட்டில் உள்ள 89 வயது முதிய பெண்மணி ஒருவர் "நாங்கள் இனி வாழ்வதில் எந்தவித அர்த்தமுமில்லை யார்தான் எங்களுக்குப் பாதுகாப்பு? பகலில் வீதியில் செல்ல முடியவில்லை இரவில் வீட்டில் நிம்மதியாய்த் தூங்க முடியவில்லை!" என்று மனவேதனையுடன் கூறுகின்றார்.


இத்தகைய காட்டுமிராண்டித்தனமான கொள்ளைகள் இனிமேலும் தொடராமல் இருக்க 'உரியவர்கள்' உரிய நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்பதுதான் மக்களின் தற்போதைய அவா!. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.ஜே.பிக்கு கடும் சவால்கள்



அத்வானி



ராஜ்நாத்சிங்

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் அத்வானி எதிர்பார்த்தபடியே தனது தலைவர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். அவரது இடத்துக்கு புதிய தலைவராக ராஜ்நாத் சிங் இவ்வாரம் பொறுப்பேற்றார்.

ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் கோபத்தால் மனக்கசப்புற்றிருந்த அத்வானி மிகவும் வற்புறுத்தி தனது பதவியை துறந்தது குறிப்பிடத்தக்கது. மத்தியில் கட்சி ஆட்சியை இழந்துள்ள நிலையில் தலைவர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் அத்வானியே என்பதில் சந்தேகமில்லை. எனினும், வாஜ்பாய் மற்றொருதரம் பிரதமராவதற்கு உடல் நிலை வலுவானவர் அல்ல என்பதால் பி.ஜே.பியின் அடுத்த பிரதமர் வேட்பாளர் தானே என்பதை உணர்ந்த அத்வானி தனது அதி தீவிர இந்துத்வ முகத்தை மறைத்து நடுநிலையாளராக தம்மை காண்பிக்க முயன்று ஆர்.எஸ்.எஸ் இன் கோபத்துக்கு ஆளானார். ஒரு காலத்தில் ஆர்.எஸ்.எஸ்இல் இருந்து பி.ஜே.பிக்கு வந்த அத்வானி அதே ஆர்.எஸ்.எஸ் இன் கோபத்துக்கு இலக்காக நேர்ந்தது அவரது துர்பாக்கியமே. மேலும், தாம் பதவியை விட்டு விலகுவது ஆர்.எஸ்.எஸ்இற்கு ஒரு அடியாக இருக்குமெனவும் அவர் கருதியிருக்கக்கூடும். ஆனால், ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தைப் பொறுத்தவரை எவரது தலை உருண்டாலும் கவலையில்லை, இந்து த்வத்தை நடைமுறைப்படுத்துவதே முதற்கடன் என்று கருதுகிறது. இதன் பின்னணியில் தான் பி.ஜே.பியின் மூத்த தலைவர்கள் பலர் விரும்பாத ஒரு நிலையிலும் அத்வானி விடாப்பிடியாக விலகியுள்ளார்.

2004ஆம் ஆண்டு மத்தியில் ஆட்சியை இழந்த பின் பி.ஜே.பி கடும் சவால்களை எதிர்கொள்ள வேண்டி நேர்ந்துள்ளது.

எதிர்பார்த்ததை விட சிறப்பாக காங்கிரஸ் கட்சி கூட்டணி ஆட்சியை ஜாம் ஜாம் என்று நடத்தி வருகிறது. கம்யூனிஸ்ட் கட்சியோ காங்கிரஸ் என்ன ஊழல் செய்தாலும் பரவாயில்லை மதவெறி பி.ஜே.பியை ஆட்சிக்கு வர விடக்கூடாதென்ற ஒரு நோக்கில் காங்கிரஸை ஆதரித்து வருகிறது. போகிற போக்கில் எங்கே காங்கிரஸ் முழு ஐந்தாண்டு காலமும் பதவியில் இருக்குமோ என்ற பயம் பி.ஜே.பி தலைவர்களின் வயிற்றைக் கலக்குகிறது. அப்படி நடந்தால் வாஜ்பாய், அத்வானி, ஜோஷி, ஜஷ்வந் சிங் என மூத்த கட்சித் தலைவர்கள் பலர் வயோதிபத்தில் வீழ்ந்து விடுவார்கள். இளைய தலைவர்களோ இந்த விஷயத்தை விளங்கிக்கொண்டு தலைமைப் பதவிக்காக தங்களுக்குள் இப்பொழுதே அடித்துக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். உமாபாரதி பெரும் புயலை கிளப்பிவிட்டு வெளியேறிவிட்டார். பி.ஜே.பிக்கு சவாலாக மிகத் தீவிர இந்து வெறி கட்சியொன்றை அவர் ஆரம்பிக்கலாமென்பது பி.ஜே.பிக்கு புதிய தலைவலி. சென்ற வாரம் லஞ்சம் வாங்கியதாக கட்சியின் எம்.பிக்கள் 6பேர் லோக்சபாவிலிருந்து நீக்கப் பட்டனர். இதனால் கட்சியின் பலம் 134 இலிருந்து 128 ஆக குறைந்து விட்டது. நடந்து முடிந்த பி.ஜே.பி வெள்ளிவிழா மாநாட்டில் முன்னாள் மூத்த ஆர்.எஸ்.எஸ் தலைவரான சஞ்சய் ஜோஷி பி.ஜே.பியில் தான் வகித்துவந்த பொதுச்செயலாளர் பதவியை ராஜினாமாச் செய்து மற்றொரு சிக்கலைக் கிளப்பியுள்ளார். ஆக கட்சிக்குத் தொல்லை மேல் தொல்லை வந்து குவிகிறது.

புதிய தலைவராகும் ராஜ்நாத்சிங் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவர். உத்தரப் பிரதேசத்தில் முன்னர் முதலமைச்சராக இருந்தவர். கடந்த லோக்சபா தேர்தலில் தனது கோட்டையான உத்திரப்பிரதேசத்தில் பி.ஜே.பி படுதேல்வி கண்டது. கட்சியை வலுப்படுத்த வேண்டுமானால் உத்தரப்பிரதேசத்தை வலுப்படுத்திக் கொள்ள வேண்டுமென கட்சி முடிவு செய்துள்ளதையே ராஜ்நாத் சிங் நியமனம் காட்டுகிறது.

எனினும், லேக்சபாவில் எதிர்க்கட்சித் தலைவராக அத்வானியே தொடர்வார் என முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பதவியை இராஜினாமாச் செய்வதற்கு அத்வானியும் உள்ளூர விரும்பவில்லை என்றே தெரிகிறது. அமைச்சரவை அந்தஸ்துள்ள அரசாங்கப் பதவியான எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் உள்ளவரே அடுத்த பிரதமர் என ஜனநாயகத்தில் உள்ள மரபின்படி அத்வானி அடுத்த பிரதமர் பதவிக்கு தயாராக்கப்படுகிறார். ஏதேனும் காரணத்தால் மன்மோகன் அரசு கவிழ்ந்து தேர்தல் வந்தால் அத்வானி பிரதமராகலாம் என்பதையே இந்த நடவடிக்கை காட்டுகிறது.

இதற்கிடையில் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் சோபை இழந்த நிலையில் சென்ற வாரம் மும்பையில் நடந்து முடிந்தது. எனினும், அதில் எடுக்கப்பட்ட ஒரு முக்கிய முடிவு கவனிக்கத் தக்கது. மீண்டும் பி.ஜே.பி இந்து த்வக் கொள்கைக்கு திரும்பும் என பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிக்கல் மேல் சிக்கலை கட்சி சந்தித்து வந்த நிலையில் அவற்றிலிருந்து மீள கட்சிக்கு வேறு வழியே இல்லை என்பது தெளிவான உண்மை.

இந்தப் பின்னணியில் பி.ஜே.பி பழைய இந்து வெறிக்குத் திரும்பும் என்பது பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். ஆனால், வாஜ்பாயின் கூட்டணியில் ஆட்சியில் பங்கேற்ற நடுநிலைக் கட்சிகள் இந்த மதவெறியை ஏற்கா. வாஜ்பாயுடன் கூட்டணி அமைத்த போது பி.ஜே.பியின் இந்து த்வக் கொள்கையை தற்காலிகமாக கைவிடுவதாக அறிவிக்கப்பட்டது. இனி கூட்டணிக்கு என்ன நடக்கும் என்பது கேள்விக்குரிய விடயமே.

**எஸ்.சுரேந்திரஜித்**


Study in UK, Cyprus Malaysia, Singapoor

(O/L) 3C, 3S தகமையுடன்

All College Applications free of charge

Free Consulting

Canada, Australia போன்ற நாடுகளில் குடியுரிமை பெறுவதற்கான இலகுவான வழிவகைகள் செய்து தரப்படும்.

Tel: 0773175767

Diploma & Undergraduate Courses...

- Architecture, Art, Fasion Design & Music
- Business Management, Accounting & Finance
- Law, Law with Business
- Engineering Design - Aerospace, Automotive, Mechanical
- Biological, Chemical & Pharmaceutical Science
- Computer Information Systems Design
- Information Systems, Electronic Commerce.
- Software Engineering, Computer Science
- Arts, Social Science and Humanities - Psychology
- Foundation Degree in Aircraft Engineering
- Engineering Systems Management
- Education - Primary Teaching
- Mechanical Engineering
- Information Technology

தற்போது 2006 January, February பதிவுகள் இடம்பெறுகின்றன.

SKY LINE TRAVELS & SERVICES

PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS

No. 7-1/2, W.A.De Silva Mawatha, (Facing Galle Road) Colombo 06. Sri Lanka.

Mobile: 0773175767





COLLEGEVIEW International

Your VISA to the World

Basic Qualification G.C.E. (O/L)

STUDY IN LONDON

CANADA, MALAYSIA, SINGAPORE CYPRUS & INDIA

Special coaching for IELTS & Spoken English

Available Courses

| | |
|---|---|
| Management | Hotel Management |
| Business Ad. (BBA, MBA, Phds) | Travel & Tourism |
| Marketing | Engineering (Aerospace, Electrical & Electronical etc. ) |
| HRM | Medicine |
| Law | Dental |
| Computer Science | Fine Arts |
| IT Networking. | Beauty Culture |
| Pattern Designing & Textile | Shipping Courses. |
| Nursing etc. | |

All Courses are available in any field

- September Semester க்கான பதிவுகள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
- 15 % விலைக்கழிவுடன் விமானச்சீட்டு, பகுதிநேர வேலைவாய்ப்பு, இலகுவாக செலுத்தக்கூடிய தங்குமிட வசதிக்கட்டணம்.
- 1000 £ Scholarship for UK University

COLLEGEVIEW International

(Professional Overseas Educational Consultants & Promoters)

No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo 06, Sri Lanka.

Tel : 0 115 672131, 0114 512175 Fax : 0114 512175

Hotline : 0714 245166, 0773 113156

Email : collegeview@visualnet.lk



O/L பரீட்சையில் சித்தி பெற வாழ்த்துக்கள் | தபால் மூலம் ஆங்கிலம் கறகலாம்.

வீட்டிலிருந்தவாரே ஆங்கிலம் கற்று 90 நாட்களில் 2 Diploma சான்றிதழ்களை பெறலாம்.

சரளமாக ஆங்கிலத்தில் எழுத, பேச, வாசிக்க தபால் மூலம் பயிற்சி அளிக்கப்படும்





இலவசம் ஆங்கில தமிழ் அகராதி, அரபு பேச்சு பயிற்சி புத்தகம், அழகிய Bag

மேலதிக விபரங்களுக்கு உங்கள் பெயர் முகவரியை ஒரு தாளில் எழுதி உங்கள் நண்பர்களின் விபரத்தையும் எழுதி அனுப்புங்கள். அல்லது SMS செய்யுங்கள்.

SMS 0777-806 606

J.E.I. INSTITUTE, P.O.BOX.119 .KANDY- TEL. 0812-201 433




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

ஜனவரி 08 - 14, 2006

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com


## திருமலை படுகொலைகள்

புத்தாண்டு பிறந்து அடுத்த நாளான திங்கட்கிழமை இரவு திருகோணமலையில் நடைபெற்ற சம்பவம் அப்பட்டமான, மிகவும் மோசமான யுத்த நிறுத்த மீறல் ஆகும். ஐந்து அப்பாவி மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு இனவாதிகளின் கூட்டுடன் பதவி ஏற்ற பின்னர் தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக பொது மக்கள் மீது படையினரால் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்படியான ஒரு கொடூரமே திருகோணமலையில் கடந்த திங்கள் இரவு அரங்கேறி உள்ளது.

திருகோணமலைச் சம்பவம், இந்த ஆண்டு எப்படி இருக்கப் போகிறது என்பதைக் கட்டியம் கூறுகிறது. அரச பயங்கரவாதத்தில் இருந்து தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் இந்தச் சம்பவம் மூலம் மற்றொரு தரம் இடித்து உணர்த்தப்பட்டிருக்கிறது.

திருகோணமலை சம்பவத்தில் உயிரிழந்தவர்கள், காயம் அடைந்தவர்கள் அனைவருமே அடையாளம் காணப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருப்போர், பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருப்போர், மற்றும் உயர்தரப் பரீட்சை எழுதியோர் என அனைவரும் மாணவர்களே.

அதுவும் அனைவரும் காதுக்கு அருகில் துப்பாக்கியால் சுடப்பட்டே கொல்லப்பட்டுள்ளனர். கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ருப் ஹொக்லண்ட்டும் இதனை உறுதிப்படுத்தி இருக்கிறார்.

இந்த அப்பாவி மாணவர்களைத்தான் புலிகள், பயங்கரவாதிகள் என்கிறது இராணுவம். படையினரைத் தாக்குவதற்கு சிலர் எடுத்து வந்த கிரனேட் ஒன்று தவறுதலாக வெடித்ததிலேயே அதனை எடுத்துவந்த ஐவரும் உயிரிழந்தனர் என்று அப்பட்டமாகப் பொய் கூறப்பட்டிருக்கிறது. சம்பவத்தில் உயிரிழந்த மொரட்டுவை பல்கலைக்கழக மாணவனுக்கு சக மாணவர்கள் அஞ்சலி செலுத்த முடியாத அளவுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

ஆட்டோ ஒன்றில் வந்தவர்கள் கிரனேட் ஒன்றை வீசிவிட்டு கோட்டைப் பக்கம் தப்பிச் சென்றதைப் பலரும் கண்டுள்ளனர். அதன் பின்னர் இந்தக் கொலைகள் அரங்கேறி இருப்பது நன்கு திட்டமிடப்பட்டதொன்று என்பது புலனாகிறது.

பதவி ஏற்றுள்ள ராஜபக்ஷ அரசு சமாதானத்தில் தான் ஆர்வம் கொண்டிருப்பதாக வெளிநாடுகளுக்கு காட்ட முயற்சிக்கிறது. ஆனால், உள்நாட்டில்- வடக்குக் கிழக்கில் மட்டுமல்ல அதற்கு வெளியிலும்-தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுகிறது.

அப்பாவிப் பொதுமக்களைக் கொலை செய்துவிட்டு கொல்லப்பட்டவர்கள் புலிகள் என்கிறது. ஒட்டுப்படைகள் செய்யும் கொலைகளுக்கு எல்லாம் புலிகள் மீது குற்றம் சுமத்துகிறது அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், வடக்கு கிழக்கிற்கு வெளியேயும் சுற்றி வளைப்பு என்ற போர்வையில் தமிழ் மக்கள் படையினரால் இம்சைப்படுத்தப்படுகின்றனர்.

இப்படியான நிலைமை போரை வலிந்து இழுக்கவே உதவும். சமாதானத்தில் அரசு உண்மையில் ஆர்வம் கொண்டிருந்தால் முதலில் அதற்கான சூழ்நிலையை வடக்குக் கிழக்கில் மட்டுமல்ல தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்குக் கிழக்கிற்கு வெளியே உள்ள பகுதிகளிலும் ஏற்படுத்த வேண்டும். தற்போதைய நிலைமை தொடருமானால் அது யுத்தத்துக்கான பாதையையே திறந்து விடும்.

# பொங்கி எழும் தமிழகம்

**நேதாஜி**



நாட்டை யுத்த மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட இந்திய விஜயம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததொன்று என இலங்கை கருதிய போதிலும், வெறும் கையுடனேயே அவர் இலங்கைக்குத் திரும்ப வேண்டி இருந்தது.

### கூட்டறிக்கை

பேரினவாதிகளுடன் உடன்பாடு செய்து, தேர்தல் மேடைகளில் பச்சை இனவாதத்தைக் கக்கி ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றிய மஹிந்த ராஜபக்ஷ இனப் பிரச்சினைக்கு ஒற்றையாட்சியின் கீழ் புதிய அணுகுமுறையை கையாண்டு தீர்வு காணப்போவதாகக் கூறி வருகிறார். தனது இந்த முயற்சியில் இந்தியாவையையும் உள்வாங்கிக் கொள்வதில் அவர் அதீத ஆர்வம் காட்டி வந்த போதும் இலங்கை பிரச்சினையில் எட்ட நிற்கும் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள இந்தியா தயாராக இல்லை என்பதையே இவரது இந்திய விஜயத்தின் முடிவில் இரு நாட்டுப் பிரதமர்களும் வெளியிட்ட கூட்டறிக்கை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அளித்த அரச விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட மஹிந்த, ஒற்றையாட்சியின் கீழ் அதிக பட்ச அதிகாரப் பரவலாக்கத்தின் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிப்பதாகக் கூறியிருந்தார். ஆனால், குறிப்பிட்ட கூட்டறிக்கை 'ஒற்றையாட்சி' என்ற பதத்தைத் தவிர்த்து பிளவுபடுத்தப்படாத ஐக்கிய இலங்கைக்குள் பரந்தளவிலான அதிகாரப்பரவலாக்கல் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றே கூறுகிறது. அத்துடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் பலப்படுத்தப்பட வேண்டும் என்று அது கூறுகிறதே அன்றி திருத்தி அமைக்கப்படவேண்டுமென்றோ அல்லது மீளாய்வு செய்யப்படவேண்டுமென்றோ கூறவில்லை.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இணைக்கப்பட்ட வடக்கு- கிழக்கு தமிழர் தாயகம் என்ற நிலைப்பாட்டிலிருந்து விலகவும் இந்தியா விரும்பவில்லை. இந்தக் கோட்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லாமல் பன்முகத் தன்மை கொண்ட ஐக்கிய இலங்கைக்குள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றை பேச்சுவார்த்தையினூடாக விடுதலைப் புலிகளும்- இலங்கை அரசாங்கமும் இணைந்து காண வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாகும்.

### மஹிந்தவின் எதிர்பார்ப்பு

பெரிய எதிர்பார்ப்புகளுடனேயே தனது பரிவாரங்களுடன் இந்தியா சென்றார் ஜனாதிபதி மஹிந்த. ஆனால், அவர் வெறும்கையுடனேயே திரும்பி வந்திருக்கின்றார்.

தனது விஜயத்தின் போது,

*இங்கு யுத்தமொன்று வெடிக்குமானால் இந்தியாவிடம் இருந்து பாதுகாப்பு உதவிகளை நேரடியாகப் பெற்றுக் கொள்ளுவதற்கு

*இணைத் தலைமை நாடுகளில் ஒன்றாக இந்தியாவையும் இணைத்துக் கொள்வதற்கு

* இனப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தனது உத்தேச ஒற்றையாட்சி அணுகுமுறைக்கு இந்தியாவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு

* உத்தேச இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு [illegible] படுத்துவதற்கு

ஜனாதிபதியும் அவரது குழுவினரும் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியிலே முடிந்திருக்கின்றன. மஹிந்த விரித்த வலைக்குள் மாட்டிக் கொள்ளாமல் நாசூக்காக இந்தியா விலகிக் கொண்டுள்ளது.

இந்தியாவும் தனது தீர்வு யோசனைகளுக்கு ஆதரவு தருகின்றது என்று சர்வதேசத்துக்குக் காட்டிக் கொள்வதற்காகவே இனப்பிரச்சினைக்குள் இந்தியாவை இழுத்து விடுவதற்கு பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளது இலங்கை. இந்தியா தனது நிலைப்பாட்டை ஒருதடவை அல்ல பல தடவைகள் இலங்கைக்கு பட்டவர்த்தனமாக தெரிவித்திருந்தபோதும் அது தனது அழுங்குப் பிடியைத் தளர்த்த விரும்பவில்லை.

### உள்நாட்டுத் தடைகள்

இங்கே ஒன்றைக் கூறியாக வேண்டும். இலங்கைப் பிரச்சினையில் முற்றுமுழுதாக தமிழர் தரப்பை மத்திய அரசு ஆதரிக்கிறது என்றும் கூறிவிட முடியாது. எமது பிரச்சினையில் அது இருவழிப் போக்கை கடைப்பிடிக்கவே விரும்புகிறது. இலங்கைக்கு இந்தியாவின் வெளிப்படையான ஆதரவுப்போக்கைக் கட்டி வைத்திருக்கும் காரணிகளை நாம் பார்க்க வேண்டாமா?

இந்தியாவின் மத்திய அரசு முன்னரைப் போல பலமான நிலையில் இல்லை. இந்தியாவில் இன்று கூட்டாட்சி என்பது நிலைபெற்று விட்டதோர் அம்சம். மத்தியில் மாநிலக் கட்சிகளின் ஆதரவின்றி அரசாங்கம் ஒன்றை அமைக்கவோ/ அமைத்த அரசாங்கத்தை நடத்தவோ முடியாத ஒரு நிலையே காணப்படுகிறது. இப்போது அங்கு அமைந்திருப்பதும், எதிர்காலத்தில் அமையப் போவதும் கூட்டாட்சியே.

தற்போது இந்திய மத்திய அரசின் பிரதான கட்சியான காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள கட்சிகளுள் முக்கியமானதொரு [illegible]வின் ம.தி.மு.க விளங்குகிறது.

> ஜெயலலிதாவைப் போல் ஈழப் பிரச்சினையில் மனம் உருகி நிற்கும் ஆறு கோடி தமிழ் மக்களின் உணர்வுகளை உதாசீனப்படுத்த முடியாத நிலை இருப்பதாலேயே இலங்கையின் எதிர்பார்ப்புகளுக்கு வளைந்து கொடுக்க முடியாத நிலையில் இந்தியா இருக்கின்றது.



அத்துடன், ஆளும் கூட்டணியில் டாக்டர் ராமதாஸின் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சிக்கும் பங்குண்டு. இவர்களின் கருத்துகளையும், உணர்வுகளையும் புறம் தள்ளி செயற்பட முடியாத நிலைக்கு மத்திய அரசு தள்ளப்பட்டுள்ளது. வைகோ இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் பேசியதை அடுத்து இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தை இந்திய அரசாங்கம் மறந்து விட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி பலாலி விமானத்தள விஸ்தரிப்பு வேலைகளும் முன்னெடுக்கப்படமாட்டாதென்றே தெரிகிறது.

தவிர பொடா சட்டம் நீக்கப்பட்டதை அடுத்து தமிழ் நாட்டில் ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவான ஆவேச உணர்வலைகள் பொங்கி எழ ஆரம்பித்து இருக்கின்றன. தமிழ் நாட்டு நாளேடுகள், சஞ்சிகைகள், ஏனைய ஊடகங்கள் ஈழத் தமிழர்களது உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், சிங்கள தேசத்தின் இனவெறிப் போக்கைக் கண்டித்தும் மீண்டும் குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கின்றன. புங்குடுதீவில் அண்மையில் நடைபெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவம் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் மிகப் பெரிய செய்தியாக பரபரப்புடன் பேசப்பட்டது.



தமிழகத்தின் தலைநகர் சென்னையில் கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டின்போது தலைமை தாங்கிய திராவிட கழகத் தலைவர் கி.வீரமணி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் எஸ். ராமதாஸ் ஆகியோர் உரையாற்றுவதை இங்கு காண்கிறீர்கள்.

தவிர, தமிழீழத்தின் கதையை தமிழகத்தின் பிரதான கட்சிகளில் ஒன்றான கலைஞர் தலைமையிலான தி.மு.க அடக்கி வாசிக்க முற்பட்டாலும், ஏனைய கட்சிகள் சிங்களத்தின் அடக்கு முறைக்கும், இன அழிப்புக்கும் எதிராக மீண்டும் கடும் தொனியில் பேச ஆரம்பித்திருக்கின்றன. அ.தி.மு.கவும் இதற்கு விதிவிலக்காக உள்ளது. சரித்திரம் மீண்டும் திரும்பும்(History Repeats itself ) என்று ஆங்கிலத்தில் சொல்வது போன்று தமிழகத்தில் ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்த வரை சரித்திரம் மீண்டும் திரும்பி இருக்கிறது.

கடந்த 29.12.2005 வியாழக்கிழமை தமிழகத்தில் நடைபெற்ற பெருந்திரளான ஆதரவாளர்கள் கலந்து கொண்ட ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் பேசிய ம.தி.மு.க தலைவர் வைகோ,

"ஈழத்திலே உள்ள தமிழர்கள் வதைக்கப்பட்டால், ஒடுக்கப்பட்டால் நயவஞ்சகத்தனமாக இந்தியாவைத் தனது பொறிக்குள் அகப்படுத்தலாம் என சிங்கள அரசு சிந்தித்தால் அது ஒரு போதும் நடைபெறப் போவதில்லை" என்று முழங்கியிருக்கிறார்.

திராவிடர் கழகத்தின் சார்பில் அதன் தலைவர் ச.வீரமணி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், இலங்கை அரசுக்கு எந்த வித உதவியையும் எக்காரணத்தை முன்னிட்டும் இந்திய அரசு வழங்கக் கூடாது என்ற தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை வீரமணி முன்மொழிய வைகோவும், டாக்டர் ராமதாஸும் வழிமொழிந்துள்ளனர்.

தவிர, மிக மோசமாக புலிகளை எதிர்த்து வரும் தமிழக முதல்வர் ஜெயலலிதா, ஜனாதிபதி மஹிந்தவுக்கு வரவேற்பளிப்பதற்கான முன்னேற்பாடுகள் தடல்புடலாக நடைபெற்றன.

தமிழகத்தில் பொங்கி எழும் ஈழத் தமிழ் உணர்வுகளுக்கு ஈடுகொடுக்க முடியாத தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தாம் அவருக்கு அளிக்க இருந்த வரவேற்பை இறுதி நேரத்தில் ரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவுக்கு ஆதரவளித்த முஸ்லிம் கூட்டமைப்புக்கு ஆப்பு...

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு இப்போது மிகவும் மன வேதனையுடன் காணப்படுகின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கையே இதற்கு காரணம் எனத் தெரிய வருகிறது.

தேர்தல் காலத்தில் மஹிந்த இவர்களைப் பார்த்துக் கொண்ட விதம் - இவர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்த விதம் எல்லாமே மஹிந்த மீது இவர்களை நம்பிக்கை கொள்ள வைத்தன. இப்போது அவரது நடவடிக்கைகளெல்லாம் இவர்கள் முன்வைத்த கோரிக்கைகளைப் புறக்கணிக்கும் வண்ணம் அமைந்துள்ளனவாம்.

அண்மையில் நடந்த ஒரு சம்பவம் இதற்கு சான்றாய் அமைந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும், மஹிந்தவின் வெற்றியில் பங்காற்றிய சுமார் 30 கட்சிகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக அலரி மாளிகையில் ஜனாதிபதிக்கும் இக்கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க அல்லாமல் அவருடன் சார்ந்து நிற்கின்ற சிலரின் அழுத்தங்கள் காரணமாகவே ஜனாதிபதி இச்சந்திப்புக்கு ஒத்துக் கொண்டாராம். அலரி மாளிகையில் இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்றவர்கள் அதிக எதிர்பார்ப்புகளுடன் சென்றனர். மஹிந்தவின் வெற்றிக்கு தாமே காரணம் என்பதால் அவர் தமக்கு புகழ் மாலைகள் சூட்டுவார், நாம் சொல்வதைச் செய்வார், தேர்தலுக்கு முன் நாம் முன்வைத்த கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவார் என்ற பல எதிர்பார்ப்புகளுடன் அவர்கள் அலரி மாளிகைக்கு போயிருந்தனர்.

சிலர் தேர்தலுக்கு முன்வைத்த கோரிக்கைகள் போதாதென்று இன்னும் பல கோரிக்கைகளை அள்ளிக்கொண்டு போயிருந்தனர். இவ்வாறு போயிருந்த கட்சிகளுள் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பும் ஒன்று. இவர்கள் அனைவரினது எதிர்பார்ப்புகளிலும் விழுந்தது இடி.

இவர்கள் அனைவரும் நீண்ட நேரம் காத்திருந்த நிலையில் திடீரென வந்தாராம் ஜனாதிபதி. வந்தவர் முதலில் சொன்ன வார்த்தை "எனக்கு நேரமில்லை. அதிக வேலை உண்டு. உங்கள் அனைவருக்கும் நன்றிகள்."

இவ்வாறு கூறிவிட்டு நடையைக் கட்டினாராம் ஜனாதிபதி. போனவர்கள் அனைவருக்கும் பேரதிர்ச்சி. கடும் ஏமாற்றம்.

அங்கு சென்றிருந்த சிலர் தொடுத்த பொதுவான கேள்விகளால் உடனே நடையைக்கட்ட ஆயத்தமான ஜனாதிபதி சுமார் 10 நிமிடங்கள் வரை தாமதிக்கப் பட்டார். அதன் பிறகு அவர் போய்விட்டார்.

போன கட்சிகளின் பிரச்சினைகள் பற்றியோ அல்லது ஜனாதிபதி எங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்றோ ஜனாதிபதி ஒரு வார்த்தை கூட பேசவில்லை.



தேர்தலுக்கு முன் மஹிந்தவின் தலையில் அமர்ந்தவர்கள் இப்போது அவரின் கால் தூசியாக மதிக்கப்பட்ட நிலையில் மனம் நொந்து போய் அலரி மாளிகையை விட்டு வெளியேறினார்.

இதில் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் நிலைதான் மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது. தனக்கும் தனது சமூகத்திற்கும் ஏதேதோவெல்லாம் கிடைக்குமென இதன் தலைவர் ஹாபீஸ் நஸீர் அஹமட் மனக்

**எம்.ஐ.முபாறக்**

கோட்டை கட்டியிருந்தார். இறுதியில் எல்லாம் ஏமாற்றப்பட்டுவிட்டன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இரு வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை எடுக்கும் முயற்சியில் இறங்கியது ஏழு முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பான முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு.

பல கோரிக்கைகளை அள்ளிக்கொண்டு போய் ரணிலிடமும் மஹிந்தவிடமும் முன்வைத்து தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எழுத்து மூலம் உறுதியளிக்கும் வேட்பாளர்களுக்கு முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு கிடைக்கும் என அவர்கள் தெரிவித்தனர்.

இவற்றை நிறைவேற்றுவதாக இரண்டு வேட்பாளர்களும் கூறினர். ஆனால் எழுத்து மூலம் உறுதியளிக்க மறுத்துவிட்டனர். இதனால் முஸ்லிம் தேசக் கூட்டமைப்பு தனித்துப் போட்டியிடத் தீர்மானித்தது அதன் சார்பில் அதன் தலைவர் நஸீர் அஹமட் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

வேட்பாளர் மனு தாக்கல் செய்யப் படுவதற்கு முதல் நாள் ரணில் விக்கிரமசிங்க முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பை மீண்டும் அழைத்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எழுத்துமூலம் உறுதியளித்தார்.

அதனையடுத்துத் தனித்துப் போட்டியிடும் முடிவைக் கைவிட்டு ரணில் விக்கிரமசிங்காவை ஆதரிக்க முஸ்லிம் தேசியக் கூட்மைப்பு முடிவு செய்யது. ஆனால், இது இடம்பெற்று அடுத்த வாரமே அந்த முடிவு மாற்றப்பட்டு விட்டது. ரணில் விக்கிரமசிங்க எழுத்துமூலம் உறுதியளித்தும் கூட ஏதோ ஒரு எதிர்பார்ப்பில் யாரிடமும் சொல்லாமல் (தனது கட்சிகளிடம் கூட) - தனியாகச் சென்ற மஹிந்தவின் பக்கம் இணைந்து கொண்டார் நஸீர் அஹமட்.


ரணிலால் மாத்திரமே முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுத்தர முடியும் என்றும் - மஹிந்தவால் அப்படியான வேலைகளைச் செய்யமுடியாது என்றும் கூறிவந்த நஸீர் அஹமட் பிறகு மஹிந்தாவை ஆதரித்துப் பிரசாரம் செய்தார். வேறு வழியின்றி கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளும் அவருடன் ஒத்துப் போயின.

மஹிந்த வெற்றி பெற்றதன் பின் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பே மஹிந்தவின் வெற்றியை தீர்மானித்தது என்று எல்லாக் கட்சிகளையும் போல் கூறிவந்தார் அவர். இதனால் தனக்கு நல்லதொரு பதவி கிடைக்கும் என்றும் - தான் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்றும் நம்பியிருந்தார்.

ஆனால் ஜனாதிபதியுடனான இந்தச்சந்திப்பில் எல்லாம் பொய்யாகிவிட்டன. முஸ்லிம்களின் உரிமைகளை முதன்மைப் படுத்தி இந்தக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் ஜனாதிபதியால் நிராகரிக்கப்படும் நிலையே தென்படுகிறது என அவர்கள் புலம்புகின்றனர்.

இந்தச் சந்திப்பில் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பினரையோ அல்லது நஸீர் அஹமட்டையோ ஜனாதிபதி கணக்கில் எடுக்கவில்லை. மஹிந்த இப்படிச் செய்வார் என சிறிதேனும் நினைக்கவில்லையென்றும் - ரணிலுக்கே ஆதரவு வழங்கியிருக்கலாம் என்றும் நஸீர் அஹமட் உள்ளிட்ட முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பினர், புலம்புகின்றனர்.

# வியட்நாமில் மதுரை வீரன்!



வியட்நாமில், ஹோசிமின் சிட்டியில் மாரியம்மன் கோவில் ஒன்று இருக்கிறது.

இதில் என்ன விசேஷம் என்று கேட்கிறீர்களா? பொதுவாக, வெளிநாடுகளில் இருக்கின்ற இந்தியர்களின் வசதிக்குத்தான் கோயில்கள் இந்துக் இருக்கும். மற்றவர்கள் வேடிக்கை பார்க்கத்தான் வருவார்கள். ஆனால் இங்கு வருபவர்கள் கிட்டத்தட்ட எல்லோருமே வியட்நாமியர்கள்தான். இவர்கள் யாருமே இந்துக்கள் இல்லை என்றாலும் பயபக்தியாய் வந்து சாமிகும்பிடுவார்கள். அதுவும் கொத்தாக சாம்பிராணிதிரிகளை கையில் வைத்துக்கொண்டு, சீனக் கோயில்களில் தலைக்குமேல் தூக்கிக் கும்பிடுவார்களே... அதுபோல இங்கே மாரியம்மனுக்கும், மதுரை வீரனுக்கும் கும்பிடு!

உள்ளே ஒரு தமிழர்( பூர்வீகம் மதுரையாம்) சாமி பக்கத்தில் நின்றுகொண்டிருப்பார். மக்களுக்கு பிரசாதம் கொடுப்பார். அவரிடம் பேச்சு கொடுத்தால், அவருக்குத் தமிழ் அவ்வளவாகத் தெரியாது. பிறந்ததில் இருந்தே இங்கேதான் இருக்காராம். வியட்நாம் போருக்கு முன்னால் இங்கு நிறைய இந்தியர்கள் இருந்தார்களாம். போர்நடக்கும் போது கிட்டத்தட்ட எல்லோரும் ஊருக்கு போய்விட்டார்களாம். விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுதான் இப்போது இந்தியர்கள் இருக்கிறார்களாம்.

வெள்ளிக்கிழமைகளில் மாலை, வாகன நெரிசல் ஆகிற மாதிரி கோயிலில் கூட்டம். எல்லாம் உள்ளூர் மக்கள்தான்! பாதிப்பேருக்கு இந்துக் கோயிலெனத் தெரியவில்லை. கேட்டால், கம்போடியா கோயில் என்று சொல்கிறார்கள். அடப்பாவிகளா!


## பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். வாழ்வு வீணாகிவிட்டதே என்று பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...

ஜனவரி 20 – 27 வரை
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 2368427
Hot Line: 0777 569205

வவுனியாவில்...

2006 பெப்ரவரி 04 - 05
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...

ஜனவரி 5 -11
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பற்றி எரிகிறது தமிழர் தலைநகரம்

திருகோணமலையில் அரச படைகளின் அடாவடித்தனங்கள் வலுத்த வண்ணம் உள்ளன. ஐந்து அப்பாவி மாணவர்களைக் கொடூரமாகக் கொலை செய்ததன் மூலம் அவர்களின் செயற்பாடு மீண்டும் அரங்கேறியிருக்கிறது.

எதிர்காலக் கனவுகளுடன் சிறகடித்த ஐந்து [illegible]டுக்களின் வாழ்க்கை இருபது வயதுடன் முடிவடைந்தது வேதனையிலும் வேதனை.

2006ஆம் ஆண்டு புதுவருடம் பிறந்து இரண்டு நாட்கள் செல்லவில்லை; படையினர் குருதிப்புனலில் கை அலம்பப் புறப்பட்டுவிட்டனர். அதுவும் அஹிம்சை போதித்த அண்ணல்மகாத்மா காந்தியின் சிலை அருகே ஆயுத வேட்டுக்களைத் தீர்த்து ஆவி குடித்துள்ளனர்.

திருகோணமலை டொக்கியாட் வீதியின் அருகே பரந்து கிடக்கும் கடல் பகுதியைப் பெரிய கடற்கரை என்று அழைப்பர். கொழும்பில் காலி முகத்திடலில் பொழுதைக் கழிக்க பொதுமக்கள் கூடுவதைப் போன்று, திருகோணமலை பெரிய கடற்கரைப் பகுதியிலும் காற்று வாங்கி இயற்கை அழகையும், இந்து சமுத்திரத்தின் அழகையும் ரசிக்க மூவினத்தவர்களும் மாலை வேளையில் கூடுவது வழக்கம்.

அவசரகாலச்சட்டம் மீண்டும் அமுலுக்கு வந்த பிறகும், இராணுவக் கெடுபிடிகள் மலிந்த பின்னும் அது சற்று குறைவாகவே காணப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளாகம், சமூக சேவைகள் நிலையம், பொது நூலகம் என மக்கள் கூடும் அலுவலகங்கள் இப்பகுதியில் உள்ளன. கடற்கரைக்கு முன்பாக டொக்கியாட் வீதியில் கடற்படையினரின் சோதனைச்சாவடியும் உள்ளது. இப்பகுதிக்கு காற்று வாங்க வந்த மாணவர்களே துப்பாக்கி வேட்டுக்குப் பலியாகி இருக்கிறார்கள்.

கடந்த 2ஆம் திகதி இரவு 7.50மணிக்கு அவ்வழியாக ஆட்டோவில் சென்றவர்கள் இவர்கள் பக்கம் கைக்குண்டு ஒன்றை வீசிவிட்டு தப்பிச் சென்றனர்.

குண்டு வெடித்ததில் சென்.சூசையப்பர் கல்லூரி மாணவன் யோகநாதன் பூங்கலலோகன் படுகாயங்களுக்கு உள்ளானார். இவர் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கு அனுமதி பெற்றிருந்தார்.

குண்டு வெடித்த அதிர்ச்சியில் இருந்து பொது மக்கள் மீளவில்லை. அங்கு விரைந்த படையினர் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கினர். சுமார் பத்து நிமிடங்கள் நீடித்த இந்த வேட்டோசையில் கிலி கொண்ட பொதுமக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினர்.

படுகாயமடைந்த தமது சகாவைக் காப்பாற்றும் முயற்சியில் காந்தி சிலை அருகே நின்ற மாணவர்களைக் கைது செய்து தடுத்து வைத்து மிகவும் மோசமான முறையில் படையினர் விசாரித்தனர்.

மாணவர்கள் நிலத்தில் படுக்க வைக்கப்பட்டனர். சப்பாத்துக் கால்களை தலையில் வைத்து கைக்குண்டு வீசியது யார் எனக் கேட்டு படு மோசமான முறையில் தாக்கினர். அதன் பின்பே துப்பாக்கிச் சூடு இடம் பெற்றுள்ளது.

அனைவருக்கும் துப்பாக்கி வேட்டு தலையில் அதுவும் காதில் வைத்து தீர்க்கப்பட்டுள்ளது.

* சண்முகராஜா சஜேந்திரன் (மருத்துவ பீட மாணவராகத் தெரிவானவர்)
* தங்கத்துரை சர்வானந்தா (மொறட்டுவை பல்கலையில்... மணல்நில அளவையியலாளர் - முதலாம் வருட மாணவன்)
* மனோகரன் ரஜிகரன் (உயர்தரம் சித்தி)
* லோகிதராஜா ரொகான் (உயர்தரம் சித்தி)
* யோகராஜா ஹேமச்சந்திரன் (உயர்தரம் சித்தி)

ஆகிய ஐந்து ஜீவன்கள் ஸ்தலத்திலேயே காற்றோடு சங்கமமாயின.

பரராசசிங்கம் கோகுலராஜ் (மோட்டார் பொறியியலாளர் - திறந்த பல்கலைக்கழகம்) படுகாயங்களோடு துடித்துக் கொண்டிருந்தார்.

மேற்குறிப்பிட்ட அனைவரும் திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

**படையினரின் கபட நாடகம்**

இச்சம்பவத்தில் சிக்குண்டவர்களை இரவு 8.30 மணி வரை படையினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவில்லை. அங்கு விரைந்த பெற்றோரே திருமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். படுகாயமடைந்த இருவரும் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். யோ.பூங்கலலோகன் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டார். பா.கோகுலராஜைக் காப்பாற்றும் முயற்சியில் வைத்தியர்கள் போராடி வருகின்றனர்.

தமிழனை, அவன் கல்வியை-தமிழனின் பொருளாதாரத்தைத் திட்டமிட்டு அழிக்கும் சிங்கள தேசத்தின் சிந்தனை மற்றுமொரு வகையில் நிறைவேற்றப்பட்டது. பாதிப்புக்குள்ளானோர் நல்ல குடும்பப் பின்னணியையும், கல்விசார் சமூகத்தையும் சேர்ந்தவர்கள் என்பது சுட்டிக்காட்டத் தக்கது.

மற்றுமொரு வகையில் திருமலையில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் வேண்டுமென்றே செயற்பட்டிருப்பதும் புலனாகிறது. படையினரே குண்டு வீச்சு நாடகத்தை நடத்திவிட்டு குற்றவாளியைத் தேடி மாணவர்களைத் தாக்கியது கேலிக்கூத்தாக இருக்கின்றது.

**முகத்திரை கிழிந்தது**

ஆட்டோவில் வந்தவர்கள் சுமார் இரண்டு சோதனைச் சாவடிகளைத் தாண்டியே வந்திருக்க வேண்டும். அப்போது படையினர் சோதிக்கவில்லையா? குண்டு வீசிவிட்டு தப்பிச் சென்ற கோட்டைப் பாதையிலும், நுழைவாசலிலும் பொலிஸ் மற்றும் படையினர் காவலில் உள்ளனர். பாரிய சத்தம் கேட்டதும் வேகமாக வந்த ஆட்டோவை இடைமறித்து சோதனையிட்டிருக்கலாம். மேலும், ஸ்தலத்திலேயே படையினர் காவல் நின்றுள்ளனர். நூறு யார் தொலைவில் கடற்படையினரின் சோதனை அரங்கு உள்ளது. எனினும், எவரும் குற்றவாளிகளை மடக்கிப் பிடிப்பதற்கு முயலவில்லை. அதுவே சூத்திரதாரியை நன்கு இனம் காட்டுகிறது.

திருமலைப் படைத்தரப்பும், கொழும்பு இராணுவப் பேச்சாளரும் பாதிக்கப்பட்டவர்களை பயங்கரவாதிகள், விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்று கூறியது வேடிக்கையாக இருக்கின்றது. பாதிக்கப்பட்டோர் படையினருக்கு வீசுவதற்குக் கொண்டு வந்த கைக்குண்டே வெடித்தது என்பது படைத் தரப்பின் வாதம்.

படையினருக்கு குண்டு வீச வேண்டும் என்றால் பொது மக்கள் நிறைந்த பகுதிக்குச் செல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. படையினர் செறிந்து காணப்படும் இடங்கள் எவ்வளவோ உள்ளன.

மாணவர்களின் கையிலிருந்த குண்டு தற்செயலாக வெடித்திருந்தால் சின்னாபின்னமான முறையில் மாணவர்களை அது தாக்கியிருக்க வேண்டும். மாறாக ஒருவரின் காலில் மட்டும் காயம் வந்தது எப்படி? அவசரமாக வீசிச் சென்றதாலேயே அவ்வாறு நிகழ்ந்துள்ளது.

இவற்றை விட குண்டு வெடிப்புக் காயங்கள் ஏனையோருக்கு இருக்கவில்லை. மேலும், அனைவருக்கும் தலையிலேயே (காதில்) துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருக்கின்றன. மிக அண்மையில் துப்பாக்கி வைத்துச் சுடப்பட்டுள்ளமை தெட்டத் தெளிவாகப் புரிகின்றது. இதனையே வைத்தியப் பரிசோதனை அறிக்கையும் சுட்டிக் காட்டுகின்றது. இவற்றுக்கும் மேலாக படையினரின் காட்டுமிராண்டித்தனமான செய்கையை நேரில் கண்டவர்களும் உள்ளனர். பாதிக்கப்பட்டோரும் இதை மறுக்கவில்லை.

படையினர் அவசர புத்தியுடன் கொலை புரிந்து விட்டு பயங்கரவாதியைத்தான் சுட்டோம் எனக் கூறியதோடு மட்டுமல்லாது, புலிகள் என்று தெரிவித்து கையொப்பம் இட்டு உடல்களைப் பெறவேண்டும் எனக் கட்டளையும் இட்டனர். தன் மகன் ரஜீரனைப் பிரேத அறையில் சென்று பார்ப்பதற்கு டாக்டர் மனோகரனுக்கே படையினர் அனுமதி வழங்கவில்லை. இது இவர்களின் கபட நாடகத்தை இனம் காட்டுகிறது.

பெற்றோர், பொது மக்களின் எதிர்ப்பு, மாணவர்களின் எதிர்ப்பு, க.துரைரெட்ணசிங்கம் எம்.பியின் பேச்சு வார்த்தை என்பனவே எவ்விதநிபந்தனையும் இன்றி சடலங்களை உரியவர்களிடம் ஒப்படைக்க வழிவகுத்தன.

**அறுவடைக்கு முன் அறுக்கப்பட்டனர்**

மாணவர்களைப் பயங்கரவாதிகள் என்று சிங்கள தேச[illegible] வாறே பொய் சொல்லி முக்குடைபடுவதும் புதிதல்ல.

சம்பவத்தில் சிக்குண்ட அனைவரும் இருபது வயதையுடையவர்கள். கடந்த வருடம் பாடசாலையை விட்டு வெளியேறியவர்கள். இவர்களில் சிலர் பல்கலையில் பயில்கின்றனர். சிலர் பல்கலைக்குத் தெரிவானோர். சிலர் கணினி பயிற்சி நெறியை மேற்கொள்வோர். இவர்கள் படிப்பதற்கே நேரமின்றி சுதந்திர வாழ்வை ஒறுத்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றினர். ஒரு புள்ளியைப் பெறுவதற்கு எத்தனை முயற்சியை செய்திருப்பர். விதைத்தவர்கள் அறுவடை செய்ய முன்னமே அவர்களின் உடல்களைப் புதைத்துவிட்ட சிங்களதேசமே எப்போது நீ சிந்திக்கப் போகிறாய்?



**பொங்கி எழுந்தது தமிழினம்**

பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் மாணவர்கள் என்பதை பாடசாலை அதிபர்கள், சம்மந்தப்பட்ட பல்கலை உபவேந்தர்கள், பல்கலையின் மானியங்கள் ஆணைக்குழுவினர் நிரூபிக்கத் தயாராகவுள்ளனர். மேலும், திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனும் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் தமது இயக்க உறுப்பினர்கள் அல்லர் என்றும் அவர்கள் மாணவர்கள் என்றும், கடற்படையினர் நிலத்தோடு வைத்து அண்மித்த முறையில் துப்பாக்கியால் சுட்டுள்ளனர் என்றும், ஆட்டோவில் வந்தோரே கைக்குண்டை வீசிவிட்டு கோட்டைப் பக்கம் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் எழிலன் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். துப்பாக்கிச் சூடு விடயத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் இக்கருத்தை ஏற்றுள்ளது.

படையினரின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்கானவர்கள் மாணவர்கள் என்றும், இது தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அரச படையினரின் பயங்கரவாதம் என தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்களான இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம் ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ள அதே வேளை கோழைத்தனமானதும், இழிவானதுமான படையினரின் இச்செயலை அவர்கள் கண்டித்துள்ளனர்.

படையினரின் அராஜகத்தால் கொதித்தெழுந்த பொதுமக்களும், மாணவர்களும் செவ்வாய்க்கிழமை திருகோணமலை நகரின் வீதிகளில் இருந்த படையினரின் காவலரண்களை பலாத்காரமாக சேதமாக்கி, எரியூட்டியுள்ளனர். இவற்றை மீண்டும் அமைக்கவோ, மீண்டும் வரவோ இல்லை. அதேவேளை, சில இடங்களில் இரவோடு இரவாக சிறிய காவலரண்களை விட்டு அகன்றவர்களும் மீளவரவில்லை.

மாணவர்கள் தாக்கப்பட்டது மற்றும் கொல்லப்பட்டதைக் கண்டித்தும், படையினரை அகற்றவேண்டியும் கோரி பூரண கதவடைப்பு, அரச நிர்வாக ஸ்தம்பிதத்துக்கு திருகோணமலை பொங்கு தமிழ் சமூகம் அழைப்பு விடுத்ததற்கு அமைய செவ்வாய் முதல் திருமலை நகரம் முடங்கிக் காணப்படுகிறது.

**விருட்சமாவதற்காய் விதைக்கப்பட்டனர்**

புதன்கிழமை காலை ஐவரது உடல்களும் திருகோணமலை இந்துக் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின் வியாழன் மாலை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டன.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டதோடு, சடலங்கள் மீதான பிரேத பரிசோதனைக்கும் உத்தரவிட்டார் திருகோணமலை மாவட்ட நீதிபதி வி.இராமகபிலன் என்பது குறிப்பிடத்தக்கது.

படையினரின் அடாவடித்தனங்கள் மாணவர்களை ஆயுதமேந்தத் தூண்டுவதாகவும், திருமலையிலும் கிளைமோர் வைக்கக் கோருவதாகவும் இருக்கின்றதென கல்விசார் சமூகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

எது எப்படியோ, அப்பாவிகள் எவரும் பலியாகக் கூடாது என்பதில் இரண்டு கருத்தில்லை.

- ரஹ்மான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஸ்ரீ பொறிக்கப்பட்ட வாகனங்களில் தந்தை செல்வா, ஜீ. ஜீ. யாழ் நகரில் பவனி



தந்தை செல்வா



ஜீ.ஜீ. பொன்னம்பலம்

**பிரதமர் பண்டாரநாயக்கா பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைத்தபொழுது தமிழரசுக் கட்சி இணங்கிச் சென்றமைக்கு அதன் தரப்பில் ஏதும் பலவீனம் இருந்தது என்பதல்ல கருத்து. சிங்களவருடன் ஓர் இணக்கப் பாட்டுக்கு வர வேண்டும் என்று அது மனதாரவிரும்பியமைதான் காரணம்.**



நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரை இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)

தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு, தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

## வவுனியாவில் பதற்றமான சூழ்நிலையில் தமிழரசுக்கட்சியின் வருடாந்த மாநாடு




அத்தியாயம் 27

தமிழரசுக்கட்சி தன்னுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி விட்டதாக பிரதமர் பண்டாரநாயக்கா கூறியிருந்த போதிலும், அதைப்புறக்கணித்து சிங்கள ஸ்ரீ போராட்டத்தை கட்சி தொடர்ந்து முன்னெடுத்து வந்தது. இந்த இயக்கம் தீவிரமடைந்து நகரங்களிலும் பரவியது. தமிழரசுக்கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டு குறுகிய காலம் சிறையில் அடைக்கப்பட்டனர். எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மட்டக்களப்புச் சிறையில் அடைக்கப்பட்டார்.

ஒரு கட்டத்தில், சிங்கள ஸ்ரீயை தார் கொண்டு அழிப்பதானது சிங்கள மக்களின் உணர்வுகளை புண்படுத்துவதாக இருக்கும் என்பதும் சத்தியாக்கிரகத்தின் புனித நோக்கங்களுக்கும் உணர்வுகளுக்கும் இது பொருந்தாது என்பதும் கட்சியின் கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டது. எனவே சிங்கள எழுத்தை தார் கொண்டு அழிப்பது கைவிடப்பட்டு சிங்கள ஸ்ரீ எழுத்தின் பக்கத்தில் தமிழ் ஸ்ரீயைப் பொறிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. இந்த நடவடிக்கைமூலம் சிங்கள மொழிக்கு தமிழர்கள் எதிரானவர்கள் அல்லர் என்பதையும் சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்தையே கோருகிறார்கள் என்பதையும் எடுத்துக் கூற முடியும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

### தமிழ்க்காங்கிரஸும் சேர்ந்து கொண்டது

இந்த இயக்கத்தில் தமிழ் காங்கிரஸும் ஒரு கட்டத்தில் சேர்ந்து கொண்டமை நினைவு கூரத்தக்கது. சிங்கள - தமிழ் ஸ்ரீ எழுத்துக்கள் அருகருகே பொறிக்கப்பட்ட நிலையில் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் ஒன்று சேர்ந்து யாழ்ப்பாண நகர வீதிகளில் கார் பவனிக்கு தலைமை வகித்த நிகழ்வானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் உட்சாகத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

சிங்கள - தமிழ் ஸ்ரீ எழுத்துக்களை பொறித்துக்கொண்டு கார் ஓடியதாக என்மீது வழக்கு தொடரப்பட்டது. ஆனால் சட்டத்தை மீறியதாக இதில் ஒன்றும் இல்லை



சி. சுந்தரலிங்கம்

என்று கூறி நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது.

பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதை அடுத்து தமிழரசுக்கட்சி மீண்டும் சதுரங்கத்தின் முதல் கட்டத்துக்கு வந்து விட்டது. அதாவது திருகோணமலை தீர்மானத்தை விட்ட இடத்துக்கு அது திரும்பியிருந்தது.

பிரதமர் பண்டாரநாயக்கா பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைத்தபொழுது தமிழரசுக் கட்சி இணங்கிச் சென்றமைக்கு அதன் தரப்பில் ஏதும் பலவீனம் இருந்தது என்பதல்ல கருத்து. சிங்களவருடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் என்று அது மனதாரவிரும்பியமைதான் காரணம்.

பேச்சுவார்த்தை மூலம் எட்டப்பட்ட தீர்வு அதன் இலட்சியத்திலிருந்து இறங்குமுகம் காட்டினாலும் நல்லெண்ணத்துடன் அதனை ஏற்றுக்கொண்டு அரசாங்கமும் அது பிரதிநிதித்துவம் செய்த சிங்கள மக்களும் தங்களைப் போன்றே நல்லெண்ணம் கொண்டிருப்பதாக அது நம்பிக்கை கொண்டிருந்தது.

ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதன் மூலம் வெளியான செய்தி என்னவென்றால், சிங்கள மக்களும் அவர்களின் அரசாங்கமும் தமிழ் இனத்தின் அழிவைத் தவிர வேறு எந்த வகையிலும் அவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளத் தயாராய் இல்லை என்ற ஒன்று மட்டுமே.

பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தான மூன்று நாட்களுக்குப் பிறகு தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாடு கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் மக்கள் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டார்கள். தமிழர்களும் - முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் போட்டிபோட்டு மகிழ்ச்சி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ஏதோ ஒருவித சாதனை நிகழ்த்திவிட்ட உணர்வும், பெரிதாக ஏதோ ஒன்றை எதிர்பார்க்கும் அங்கலாய்ப்பும் அவர்கள் மத்தியில் தென்பட்டன.

கிராமங்களிலிருந்து வந்திருந்த முஸ்லிம் மக்கள் மாநாட்டு மண்டபத்தின் சமையல் பகுதியை தங்கள் பிரதேசங்களின் பண்ணைகளிலிருந்து கொண்டுவந்த விளைபொருட்களாலும் பால் பொருட்களாலும் நிரப்பியிருந்தார்கள்.

அரசாங்கத்துடனான ஒரு மோதல் தவிர்க்கப்பட்டு விட்ட ஓர் உணர்வு மாநாட்டு மைதானம் முழுவதும் வியாபித்துக்காணப்பட்டது.

ஆனால் ஒப்பந்தம் கிழிக்கப்பட்ட பின் 1958 ஆம் ஆண்டு வவுனியாவில் இடம் பெற்ற மாநாட்டு நிலைமை நேர்மாறாகவிருந்தது. வவுனியா மாவட்டத்தின் இரண்டு நாள் நிகழ்வுகளும் ஒருவித பரபரப்போடும், ஏக்கத்தோடும் ஆரவாரமின்றியும் நடைபெற்றன.

### நேரடி நடவடிக்கை

தமிழரசுக்கட்சி எடுக்கப்போகும் நேரடி நடவடிக்கை தீர்மானத்தின் விளைவு எப்படி இருக்கப் பேகின்றது என்பதில் எல்லாரது மனங்களும் லயித்துப் போய் காணப்பட்டன.

இந்த நிலைமையை மேலும் மோசமாக்குவதாக இன்னொரு விடயம் அமைந்திருந்தது. தமிழர்களுக்கெதிராக வன்செயல்களை அவிழ்த்துவிட சிங்களவர்கள் ஆயத்தம் செய்து கொண்டிருப்பதாக செய்திகள் எட்டியிருந்தன.

### கொல்லப்பட்ட ரயில் ஊழியருக்கு அஞ்சலி!

மட்டக்களப்பில் சில குடியிருப்புகள் எரிக்கப்பட்டதாகவும் ஒரு தமிழ் ரயில்வே பாதுகாவலர் கொல்லப்பட்டு விட்டதாகவும் ஏற்கனவே செய்திகள் எட்டியிருந்தன. கொல்லப்பட்ட காவலரின் சடலம் ரயில் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படவிருப்பதாகவும், சடலத்தைக்கொண்டுவரும் ரயில் அன்று நள்ளிரவுக்குப் பிறகு விடியற்காலையில் வவுனியா வழியாக செல்லவிருப்பதாகவும் தகவல்கள் கிடைத்திருந்தன. எனவே வவுனியா நகரிலிருந்த தமிழர்கள் அனைவரும் அன்றிரவு விழித்திருந்தனர். ரயில் வரும் போது, கொல்லப்பட்ட காவலருக்கு அஞ்சலி செலுத்துவதற்கு காத்திருந்தனர்.

மாநாட்டின் விஷயாலோசனைக் குழு அன்று முழுவதும் ஆலோசனைகள் நடத்தியதுடன் இரவில் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுவதற்கான பல முக்கிய தீர்மானங்கள் விஷயாலோசனைக்குழுவில் விரிவாக ஆராயப்பட்டுக்கொண்டிருந்தவேளையில் அடிக்கடி குழப்பகரமான செய்திகள் மாநாட்டு அறைக்கு கிடைத்துக்கொண்டிருந்தன. இவை குழுவின் பணிகளையும் அடிக்கடி தடைசெய்வதாக இருந்தன.

வவுனியா நகரை கொள்ளையடிப்பதற்காக ஓர் ஆயுதம் தரித்த சிங்கள காடையர் கும்பல் வந்துகொண்டிருப்பதாக

தமிழில் 'பேனா'

செய்தி கிடைத்தது, எனவே உள்ளூர்க்கட்சித் தொண்டர்கள் முக்கியமான இடங்களை பாதுகாக்கும் நோக்கத்தில் நிலைகொள்ளத் தொடங்கினார்கள்.

வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர் சி.சுந்தரலிங்கம் அப்பொழுது வவுனியாவில் இருந்தார். இந்தத் தகவல் அவருக்கும் கிடைத்திருந்தது. அவரும் வெளிப்பட்டு தமது ஆட்களை நகருக்குள் வரும் நான்கு வாயில்களிலும் காவலுக்கு நிறுத்தினார். சுற்றுவட்டாரங்களில் உள்ள கிராமப்பண்ணைகளிலிருந்து சேகரித்த துப்பாக்கிகளையும் அவர்களுக்கு வழங்கியிருந்தார். அவரது கட்சியின் பெயருக்கு ஏற்ப அவரும் நகரின் முக்கிய சந்தியில் நின்றுகொண்டு நடவடிக்கைக்கு பணிப்புரைகள் வழங்கிக் கொண்டிருந்தார்.

வன்னிச் சிற்றரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் வவுனியா, அடங்காப்பற்று என்ற பிரதேச கோட்டத்துக்கு உட்பட்டதாய் இருந்தது. இதிலிருந்து தான் சுந்தரலிங்கம் தமது கட்சிக்கு அடங்காத் தமிழர் முன்னணி என்ற பெயரைத் தெரிவு செய்திருந்தார். அன்று விடியும்வரை விழிப்பும் காவலும் தளர்த்தப்படவில்லை.

விடிந்தபிறகு தான் அது வெறும் பீதி என்பது தெரியவந்தது.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலக்கல்

வதனி

## குறும்பு



தற்போதைய வாகன நெரிசலில் இருந்து தப்ப சுலபமான வழி பறக்கும் கார். ஆனால் இது சாத்தியமோ...?

## கணினி கலக்கல்

தற்போது நாளொரு மேனியும் - பொழுதொரு வண்ணமுமாக 'செல்போன்'கள் வந்து கொண்டே இருக்கின்றன. எதிர் காலத்தில் இப்படியும் வருமோ?.



## கணினி கற்பனை



மனிதன் கோட் சூட் போட்டால் எப்படி இருப்பான் என்பது எல்லோருக்கும் தெரியும். அதே போல் ஒரு மரம் கோட் சூட் போட்டால் எப்படி இருக்கும்? இப்படியா?




## வித்தியாசமான படம்



கிராமப் புறத்தில் ஒரு காதலியும், காதலனும் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். காதலன் ஒரு விவசாயி. ஒரு கையிலே பெரிய சட்டியுடனும் தோள் இடுக்கிலே ஒரு கோழிக் குஞ்சுடனும், மற்றைய கையிலே ஒரு தடியுடனும், ஒரு ஆட்டுக் குட்டியையும் இழுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தான்.

அப்போது பொழுது சாய்ந்துவிட்டது.

அவனது காதலி சொன்னாள். "இனியும் நான் உன்னுடன் நடந்து வருவது என்பது பயங்கரமானது. ஏனென்றால், பொழுது சாயும் நேரமாகிவிட்டது. இன்னும் இருண்டு விட்டால் நீ என்னை இருட்டிலே முத்தமிடப் பார்ப்பாய். எனக்கு பயமாயிருக்கிறது" என்றாள்.

அதற்குக் காதலன் "என்னிடம் இவ்வளவு சுமைகள் இருக்கின்றன. இவைகளுடன் நான் எப்படி உன்னை முத்தமிட முடியும்?" என்று கேட்டான்.

காதலி சொன்னாள். "ஏன் முடியாது தடியை நிலத்திலே நட்டுவிட்டு, ஆட்டை அதிலே கட்டுவாய். கோழிக் குஞ்சை கீழே விட்டு சட்டியைப் போட்டு மூடுவாய். அதன் பின்னர் ..." என்று இழுத்தாள் அவள்.

"அடடா இத்தனை வழிகளையும் நீயே சொல்லி கொடுத்தபின் விடுவேனா நான்..." என்று அவளைத் துரத்த தொடங்கினான் காதலன்.



ஆஹா... ரெடியாகி விட்டார் போலும் ஹயருக்கு!



இவைதான் முத்துப் பற்களோ.



"சார் நான் இந்த வழியால் போகலாமா?"

"போர்டுல கார், பஸ், லொரிதான் போகக்கூடாது என்று போட்டிருக்கு"

"அதான் [illegible] என் பேரு கார்மேகம்"

"தீயணைப்புப் படை வீரரை கல்யாணம் பண்ணினது தப்பாய்ப் போச்சு"

"ஏன்?"

"காஸ் அடுப்பை பற்ற வைச்சாக்கூட வந்து தீயை அணைச்சிடறாரு. எப்படி சமையல் பண்றது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோசப் என் சற்குரு



போராயர்

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் மறைந்துவிட்டார். ஸ்ரீலங்கா அரசின் அடக்கு முறைகளையும், சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களையும் தக்க ஆவணங்களுடன் தமது வாதத்திறமையால் உலகுக்குக் கூறிவந்த சத்தியத்தின் குரல் நசுக்கப்பட்டுவிட்டது.

ஜோசப் வைரமுடைய நெஞ்சம் கொண்டவர். கடைசியாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் அவருடைய பேச்சைக்கேட்டேன். 'உங்கள் பேச்சு செ. இராசதுரையின் சொல்லாட்சியையும், மசூர் மௌலானாவின் குரல் வளத்தையும் ஞாபகமூட்டின' என்றேன். மீன்பாடும் தேனாட்டாரின் தேனூறு சொற்களுக்கு நான் எப்பொழுதும் வாயூறி நிற்பவன்.

தந்தை செல்வா மட்டக்களப்பில் கண்டெடுத்த மாணிக்கங்களில் ஒன்று ஜோசப் பரராஜசிங்கம். தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் சற்று சோர்வடைந்திருந்த காலம் ஜோசப் அதன் தலைமையை ஏற்றார். அது பொய்யும் வழுவும் மலிந்த காலம்.

**நாலு வைத்தியரும் இனி நம்புதற்கில்லை யென்றார்**

**பாலத்து ஜோசியனும் கிரகம் படுத்தும் என்று விட்டான்**

என்று வியாகுலப்பட்ட நேரத்திலே ஜோசப் ஆபத்பாந்தனாக வந்து சேர்ந்தார். கொஞ்சு தமிழிலும், குமுறும் நடையிலும் நாம் இனிச் செய்யவேண்டியது என்ன என்பதை எடுத்து விளக்கினார். உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று மக்களின் மனச் சாட்சியைத் தட்டி எழுப்பினார். சோர்வுற்றவர்களுக்கு உற்சாகமூட்டினார். ஒரு முறை நான் மட்டக்களப்பிலிருந்த வீட்டிற்கு வந்து **''நீங்கள்முன்பு உற்சாகமாகப் பேசுவீர்களே! இப்பொழுது ஏன் அமைதியாகி விட்டீர்கள்?''** என்றார்.

ஜோசப் மறைந்து ஒரு வாரமாகிவிட்டது. தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்திற்குச் சிலர் வெளிப்படையாக ஆதரவு தெரிவிக்கின்றனர். பலர் சூசகமாக ஆதரவு நல்குகின்றனர். வெளிப்படையாக ஆதரிப்பவர்களில் முதல் வரிசையில் வைத்து எண்ணப்படவேண்டியவர் ஜோசப் அவர்கள். அவரின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்பதனை தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கின்றனர்.



ஜோசப்

எண்டிசையெல்லாம் பரந்த
ஏழைகளுக்கன்பு செய்த
பண்டிதரே உமது தேகம்
பரகதியாச்சோ பரகதியாச்சோ
எங்கள் பலமெல்லாம் போச்சோ

இது பண்டித மோதிலால் இறந்தபொழுது ஒரு தேசபக்தன் பாடிய பாடல். கவிஞர் கண்ணதாசன் இந்தப் பாடலைத் தான் கேட்கும் பொழுதெல்லாம் அழுதுவிடுவேன் என்று எழுதியுள்ளார்.

ஜோசப் பரராஜசிங்கத்தின் மரணம் நம்மைப் பலவீனப் படுத்திவிட்டதா? அவரது தியாகம் வீண்போகமாட்டாது. 1959 ஆம் ஆண்டு கோப்பாய்க் கோமான் கு. வன்னியசிங்கம் மறைந்தார். அவருடைய மரணச்சடங்குதான் தமிழரசுக்கட்சியின் கொடி உயரப் பறப்பதற்குக் காரணமாகிற்று என்று வரலாற்று ஆய்வாளர் கூறுவர். கு.வன்னியசிங்கம் என்ற தியாக மாமலைக்குப்பின்னர், ஜோசப் பரராஜசிங்கம் என்ற மாமனிதரை இழந்து நிற்கிறோம். உலகம் இனியும் தமிழர் பிரச்சினையை உதாசீனப்படுத்தாது என்று திடமாக நம்பலாம்.

**பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்**
தந்தை செல்வா அறங்காவற் குழு தலைவர்


**ஈகிள் அணி** பாதுகாப்புப்பற்றிய செய்தியினைப் பரப்புகின்றது....



.... ஏனெனில், இழந்த வாழ்க்கையை மீண்டும்பெற முடியாது.

கணப்பொழுது கவனயீனம் உங்கள் எதிர்காலத்தை இருள்மயமாக்கக்கூடும். இப்புத்தாண்டில் ஈகிள் அணியினர் பாதுகாப்புப்பற்றிய தகவலைப் பரப்புவதற்குத் தங்களை அர்ப்பணித்துள்ளனர். பாதுகாப்பு வழிமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் வீட்டிலும், பாடசாலையிலும், வேலைத் தளங்களிலும், வீதிகளிலும் விபத்துக்களைக் குறைக்கலாம் என்பதனை வலியுருத்த விரும்புகின்றனர்.

ஈகிள் அணியினர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற்ற தேர்ச்சித்திறமைனால் உங்கள் தனிப்பட்ட நிதிசார்ந்த தேவைகளை நிறைவு செய்வதற்கான தீர்வொன்றை வகுத்துத்தரும் ஆற்றல் அடைந்துள்ளனர். வாடிக்கையாளர்களுடன் சுமூகமான, நீடித்த நல்லுறவைக் கட்டியெழுப்பும் இவர்களது ஆற்றல் உலக தரத்திற்கு இணையானது. ஈகிள் நிறுவனம் பெற்றிருக்கும் நற்பெயரும் பாராட்டும் அதன் தொழில்சார் தேர்ச்சிக்கும் பண்புக்கும் கடப்பாடிற்கும் சான்றாக அமைகின்றன.

இப்புத்தாண்டில் ஈகிள் அணி உங்களை மேலும் பாதுகாப்பு உணர்வு கொண்டவர்களாக்குவதற்கு விதவிதமான கையேடுகளையும் சுவரொட்டிகளையும் துண்டுப்பிரசுரங்களையும் கைவசம் வைத்துள்ளனர். முன்னிலைப் பாடசாலைகளில் பயன்படுத்தக்கூடிய கண்கவர் கருவிகளையும் விருத்தி செய்துள்ளனர். மேலதிக விபரங்களுக்கு ஈகிள் விற்பனை முகவர்களுடன் அல்லது அருகிலுள்ள கிளை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**உங்களில் அக்கறைகொண்ட, அதிசிறந்த பயிற்சி பெற்ற பாதுகாப்பின் சிறகுகள் கொண்ட ஈகிள் அணி இப்பொழுது பாதுகாப்பின் செய்தியைப் பரப்புவதற்குத் தயார் நிலையில் உள்ளது.**

ஈகிள் இன்சூரன்ஸ்
எங்கள் சிறகின் கீழ் வாருங்கள்

தொலைபேசி 231 0310 www.eagle.com.lk



ஈகிள் சிறகினைக் கொண்ட அணி

Best trained world-class professionals

© THOMPSON ASSOCIATES

ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி லிமிற்றெட் வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவடுகள்

இளைய அப்துல்லாஹ்

இந்த வார சுவடுகளை எழுத ஆரம்பிக்கும் போது கொழும்பில் இருந்து 25ஆம் திகதி இரவு ஒரு மணிக்கு TEXT மெசேஜ் ஒன்று வந்தது. ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியை சுட்டுப் போட்டாங்கள். கொலை எனக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

உண்மையில் பழகுவதற்கு ஒரு நல்ல மனிதனின் மரணம் இது.

கொழும்பிலுள்ள அவரின் வீட்டுக்கு அடிக்கடி போயிருக்கிறேன். நானும் எனது நண்பர்களும். நான் சார்ந்த தொலைக்காட்சி பேட்டிகளுக்காக.

கமராமென், திறிவீலர் றைவர், லைட் மென், என்று யார் போனாலும் எல்லோரையும் அன்போடு வரவேற்று உபசரிப்பதில் அவரின் பாரியார் என் மனதினிலே நிற்கிறார். வேற்று புறிப்பு எதுவும் பாராமல் போனவுடன் அன்பான சுவையான தேனீர் உடனே கொண்டு வருவார்.

கனிவான பேச்சு சுகுணாவிடம் எப்பொழுதும் இருக்கும்.

அன்பான தம்பதியினராக அவர்களைக் கண்டு மனம் பூரித்திருக்கிறேன். வயதான காலத்தில் இளம் உணர்வுகளோடு அவர்கள் இருந்தார்கள். 71 வயது என்று சொன்னால் தான் தெரியும் அவருக்கு. ஜோசப் அண்ணாவைப் பிரிந்த துயரம் அவரது மனைவியை விட்டகல மாட்டாது.

திரு. பரராஜசிங்கம் தெளிவான கருத்துகளை முன்வைக்கூடியவர்.

நெருக்கடியான ஒரு அரசியலுக்குள் கத்தி முனையில் நடப்பதைப் போல ஒவ்வொரு அடியையும் மிக அவதானமாகத்தான் எடுத்து வைத்தார் அவர்.

உயிரின் மீது கடைசி காலத்தில் கவனமில்லாமல் இருந்திருக்கிறார். மக்கள் என் மீது அன்பு வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுவார்.

அதிருப்தியான காலங்களில் மக்கள் தனக்கு பாதுகாப்பு கொடுத்ததை நெஞ்சுருகி நினைத்திருப்பார்.

அவர் மண்ணிலேயே, அதுவும் இறையாலயத்தில் கொல்லப்பட்டிருக்கிறார்.

பள்ளிவாசல், தேவாலயம், கோவில்கள் தான் மனிதனின் இறுதி சரணாலயங்கள்.

ஆனால் அங்கும் மரணம் தான் சூழ்ந்து போய் இருக்கிறது. மனிதன் இனி எங்கே செல்வது எமது தாய்திருநாட்டில்.

மரணம் வருவது ஒன்று தான். ஆனால் தெருவில் திரியும் மூளை பழுதாகிய நாயைக் கொல்வதற்குக் கூட முனிசிபல் கவுன்ஸிலில் அனுமதி எடுக்க வேண்டும். என்னத்தைச் சொல்வது?

ஜோசப் பரராஜசிங்கம் என்ற நல்ல மனிதனை இழந்து விட்ட துக்கம் நெஞ்சை அடைக்கிறது. எல்லோரும் சொல்வது போல சுகுணா பரராஜசிங்கத்துக்கும், அன்னாரை இழந்த குடும்பத்தாருக்கும் அனுதாபத்தை தெரிவிக்கிறேன் என்று மட்டும் சொல்ல என்னால் முடியாமல் இருக்கிறது. துக்கமாக இருக்கிறது.

❖ ❖ ❖

எப்பொழுதும் வேலை செய்து கொண்டிருக்கும் எனது கிராமத்தின் வயதாளிகள் மீது எனக்கு அளப்பரிய மதிப்பு இருக்கிறது. புல்லு செருக்குவது, வயலைப் பண்படுத்துவது நீர் பாய்ச்சுவது என்று எனது கிராமத்தை வளப்படுத்தியவர்கள் எனது பேரன்மார்கள். எழுபது வயதைத் தாண்டினாலும் அவர்களின் தோளில் முதலைமார்க் மண்வெட்டி எப்பொழுதும் இருக்கும். வயது ஒரு பொருட்டல்ல அவர்களுக்கு. வேலை வேலை - இதுவே அவர்களின் மூச்சு. மண் அவர்களின் மூலதனம். மண்ணில் காத்திருந்து பலன் எடுப்பவர்கள் அவர்கள்.

நிலைக்கடலை போட்டு அதனோடு



பிரயாசப்பட்டு மூன்றரை மாதங்கள் உழைத்து அதன் பிரயோசனத்தைப் பிடுங்கி எடுத்து மகிழ்வார்கள்.

வெங்காயம், மிளகாய் கன்று, கோவா, கிழங்கு, வாழை என்று மண்ணின் மீது போட்டு மண்ணில் இருந்து மகத்துவத்தைக் கொண்டு வரும் மாந்தர்கள் அவர்கள்.

அவர்களின் கைகளில் தான் அந்த உலகமே உட்காந்து இருக்கிறது.

எனது பேரனாரிடம் இருந்தது ஒரு சிறிய மரப்பெட்டி. அதில் மூன்று நாலுமுழம் மூன்று சால்வை, கொஞ்சம் பழைய 'தினமணி' பத்திரிகைகள் இவ்வளவு தான் அவரின் சொத்து.

நிம்மதியாக வாழ்ந்து ஆறு ஏக்கர் காணியை வளப்படுத்தி இரண்டு அறையுள்ள கல் வீடு கட்டி வாழ்ந்து முடித்தவர் அவர்.

அவர் எழுபது வயதிலும் உசாராக இருந்தவர். மிகவும் உறுதியானவர். எண்பது வயதில் மரணிக்கும் வரை உழைத்தவர்.

ஹிட்லர் வயதாளிகள் மீது எந்த மதிப்பும் வைத்திருக்கவில்லை. வயதாளிகள் இந்த உலகத்திற்கே தேவையில்லாதவர்கள், வேஸ்ற் ஆனவர்கள் அவர்களை சுட்டுத் தள்ளுங்கள் என்று உத்தரவிட்டவர். கொடூரமான கொலைகாரர் அவர்.

வயதாளிகள், அனுபவசாலிகள் இல்லாத உலகத்தை நினைத்துப்பார்க்கவே முடியாமல் இருக்கிறது. இப்பொழுது லண்டனில் ஓய்வு வயதை அதிகப்படுத்தி வருகின்றனர்.

60 வயதில் ஓய்வு பெறலாம் என்றிருந்து 65வயது என்று நீடிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து வருடம் வேலை செய்து விட்டுத்தான் ஓய்வு பெற வேண்டும் அதிகமாக.

ஓய்வூதியம், பயண இலவச முறை, கைக்காசு, வீட்டுவாடகைக்கு பணம் என்று வயதானவர்களுக்கும் ஓய்வுபெற்றவர்களுக்கும் கொடுக்கும் பணத்தை 5 வருடம் மீதப்படுத்த இந்தச் சட்டம். ஆனால், வயதாளிகள், ஊனமுற்றவர்களுக்கு அதிக சலுகைகளை வழங்கும் இடம் இங்கு தான். நிரந்தர நோயாளிகளுக்கும் வீட்டில் இருக்க வைத்து பணம் கொடுத்து மகிழ்விக்கும் இடம் ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் தான்.

ஆனாலும் இந்த வருடம் பழைய நடைமுறையோடு 60 வயதில் ஓய்வு பெறுபவர்கள் பிரித்தானியாவில் பாக்கியசாலிகள் என்று 59 வயதுக்காரர்களுக்கெல்லாம் பொறாமை.

❖ ❖ ❖

ஆய கலைகள் எல்லாமே படித்துத் தேறிவிட வேண்டும் தமது பிள்ளைகள் என்று ஊரில் இருந்ததைவிட லண்டன் பெற்றோர் அதிகமாகவே வாஞ்சைப்படுகின்றனர்.

ஆனால், அது பிள்ளைகளின் தலையில் சுமையை ஏற்றி அவர்களைப் பைத்தியமாக்கி விடுகிறது.

படி படி என்று ஒரே நச்சரிக்கும் பெற்றார் மத்தியில் பிள்ளைகள் மிரண்டு துவண்டுப் போகிறார்கள்.

மூளை குழம்பிப் போய் இருக்கும் எத்தனையோ பிள்ளைகளை நேரில் கண்டிருக்கிறேன்.

லெவன் பிளஸ் எடு எடு என்று தொந்தரவு செய்து கொண்டே இருப்பார்கள்.

"அங்கை அவரின் மகன் அப்படிப் படிக்கிறான். அவனைப் பார் அவன் கெட்டிக்காரன். நீ படித்து பாஸ் பண்ணாமல் விட்டால் என்னை சமூகம் மதிக்காது. அப்படி நீ பாஸ் பண்ணித்தான் என்ரை மதிப்பைக் காப்பாற்ற வேண்டும். சொந்தக்காரர் முகத்திலை முழிக்க முடியாது நீ பெயிலாகி விட்டால்" என்று பிள்ளைகளைப் போட்டு உலுப்புகிறார்கள்.

பெருமை; சமூகத்தில் தன்ரை பொம்பிளைப் பிள்ளைக்கும் ஆடத் தெரியும், பாடத் தெரியும் என்று பெருமை சொல்வதற்காகவே



வீணை, வாய்ப்பாட்டு, மிருதங்கம், புல்லாங்குழல் பரதநாட்டியம் என்று படிப்போடு சேர்த்து பிள்ளைகளுக்கு சுமை, சுமை.

அரங்கேற்றங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. 10ஆயிரம் 13ஆயிரம் பவுண்ஸ்கள் செலவு செய்து அரங்கேற்றங்கள் அமர்க்களப்படுகின்றன.

ஒரு பெண் பிள்ளையை சந்தித்தேன். அம்மாவின் ஆசைக்கு அரங்கேற்றம் செய்து வங்கியில் கடன் எடுத்து இரவு பகலாக வேலை செய்து வங்கிக் கடனை அடைக்கிறதுக்கு ஆலாய்ப் பறக்கிறது.

தமிழரான தந்தை ஒருவர் ஏறக்குறைய அழுதே விட்டார். மனைவியின் பேச்சைக் கேட்டு பிள்ளைக்குப் பரதநாட்டிய அரங்கேற்றம் செய்து ஓட்டாண்டியாகி விட்டார். மனைவி வேலை செய்ய முடியாது சுகவீனம். வீட்டு மோட்கேஜ் கட்ட வேண்டும்.

இதர செலவுகள் எல்லாம் எகிறி நிற்கின்றன. ஒன்றுமே செய்யமுடியாமல் இருக்கிறது. எல்லாம் படாடோபமும், பகட்டும் செய்யும் வேலை. நசுங்கிப் போகிறது எமது தமிழ்ச் சமூகம்.

❖ ❖ ❖

இங்கு லண்டனில் மட்டும் எட்டு விகாரைகள் இருக்கின்றன. சிங்கள சமூகமும் லண்டனில் அதிகளவில் இருக்கின்றது. கிட்டத்தட்ட எழுபதினாயிரத்துக்கும் அதிகமானவர்கள் இருக்கின்றனர்.

ஆனால், அவர்களும் தமிழ்ச் சமூகத்தைப் போலவே இருக்கின்றனர். ஆங்கிலம் பிள்ளைகள் பேசினால் பெருமை. ஆங்கிலத்தில் படிக்க வேண்டும். மற்றவர்களிடம் பெருமை பேச வேண்டும் என்பதே முழு சிந்தனையும். வசதியாகவும் சிலர் இருக்கிறார்கள். ஆனால், தமிழர்கள் கொடி கட்டிப் பறப்பது போல் இல்லை.

விகாரைகளில் ஆமத்துறுமார் இருந்து பிரித் ஓதுகிறார்கள்.

சிங்கள லோயர்மாரும் இங்கு அலுவலகங்கள் வைத்து வேலை செய்கின்றனர்.

❖ ❖ ❖

'எல்லை கடத்தல்' என்ற கவித் தொகுதியை வெளியிட்டவர் ஔவை.

கவிஞர் மகாகவியின் புதல்வி. கவிஞர் சேரனின் சகோதரி. ஆசிரியை - சிறந்த கவிஞை ஔவை. யுத்தத்தினால் பாதிப்புறும் பெண்களின் பிரச்சினை தொடர்பான ஒரு அறிவிப்புக் குரலாக ஓங்கி ஒலிக்கும் அவரது கவிதைகள். ஔவையின் கவிதை ஒன்று இந்த வாரம். யுத்த நிலைக்குள் அகப்பட்ட தாய் ஒருவரை கண்முன்னால் கொண்டு வருகிறது.

### சொல்லாமல் போன புதல்வனுக்கு

முழு நிலவு பூத்து
நட்சத்திரம் தெறித்திருக்கும் இரவுகளில்
மஞ்சளாய் சணல்
பூத்து விரிந்திருக்கும் எம் வயலில்
காற்று வாங்கியபடி
அவனும் நானும் தனித்திருக்கையில்
ஒரு நாள் அவன் கேட்டான்
அப்பா ஏன் இறந்தார்?
யுத்தம் ஏன் வருகிறது?
அக்காவுக்கு ஏன் தலை நரைத்து விட்டது?
அன்று சின்னப்பயல் அவன்.
மகனே!
சிட்டுக்குருவி போலத்தான் பறந்தாய்
ஆயினும்
காலம் உன்னை வளர்த்திருக்கும்
மனித நேயத்தை மறந்து விடாதே
மக்களை அதிகம் நேசிக்கப்பழகு.

**(இன்னும் வரும்)**

---

## ஓரங்.....

( 6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள அரசின் தலைவர் மஹிந்தவுக்கு தாம் வரவேற்பளிப்பதோ அல்லது அவரைச் சந்திப்பதோ இன்னும் ஆறு மாத காலத்தில் நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தலில் தனது வாக்கு வங்கியைப் பெருமளவில் பாதிக்கும் என நினைத்த பழுத்த அரசியல்வாதியான ஜெயலலிதா மஹிந்தவைச் சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டார்.

ஜெயலலிதாவைப் போல் ஈழப் பிரச்சினையில் மனம் உருகி நிற்கும் ஆறு கோடி தமிழ் மக்களின் உணர்வுகளை உதாசீனப்படுத்த முடியாத நிலை இருப்பதாலேயே இலங்கையின் எதிர்பார்ப்புகளுக்கு வளைந்து கொடுக்க முடியாத நிலையில் இந்தியா இருக்கின்றது.

### சர்வதேச காரணிகள்

தவிர மஹிந்தவுடன் இணக்கப்பாட்டிற்கு வரமுடியாது இந்தியாவை தடுக்கும் சர்வதேச காரணிகளும் உண்டு. இன்றைய இந்திய அரசு அமெரிக்க ரஷ்ய உறவுகளை வலுப்படுத்துவதிலேயே ஆர்வம் கொண்டுள்ளது. அதனால் தென்னாசியாவின் பிரச்சினைகள் பற்றியோ அல்லது இலங்கையின் அரசியல் பிரச்சினை பற்றியோ தன்னைக் குழப்பிக் கொள்வதற்கு அது தயாராக இல்லை. தற்போதைய உலக அரசியலின் இஸ்லாமிய எதிர்ப்பும், உலகமயமாக்கலும் இந்தியாவை மேற்குலக நாடுகள் மற்றும் அமெரிக்காவின் சிறந்த நண்பனாக மாற்றியுள்ளது. இந்த நிலையில் இலங்கைப் பிரச்சினைக்கு இணைப்பாட்சி அடிப்படையிலேயே தீர்வு காண வேண்டும் என்ற மேற்கு நாடுகளின் விருப்பத்தை புறக்கணித்து செயற்பட முடியாத நிலையிலும் இந்தியா இருக்கிறது. மேற்குலக நாடுகளின் சிந்தனைக்கேற்ப இந்தியா தனது காய்களை நகர்த்த வேண்டிய தேவை இருப்பதாலேயே சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான அனுசரணைப் பணியில் ஈடுபட்டுளன்ள நோர்வேக்கு அது தனது முழு ஆசீர்வாதத்தையும் வழங்குகின்றது.

### ஜே.வி.பி

இந்த உண்மையை மஹிந்தவிலும் பார்க்க ஜே.வி.பியால் நன்கு புரிந்து கொள்ள முடிந்துள்ளது. அதனால் தான் இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்த செல்லும் அரசாங்கத்தின் தூதுக்குழுவில் இணைந்து கொள்ள அது மறுப்புத் தெரிவித்தது. இந்தியா தம்மீது போடக்கூடிய அழுத்தங்களை தவிர்த்துக் கொள்வதற்காகவே அது மஹிந்தவின் இந்த விஜயத்தில் கலந்து கொள்ளாமல் தப்பிக் கொண்டது.

ஒரு காலத்தில் இந்தியாவின் ஆதிக்க விரிவாக்கத்திற்கு எதிராகவெகுண்டெழுந்த ஜே.வி.பி இல[illegible] தன்னை வளர்த்துக் கொண்டவுடன் தனது நிலைப்பாட்டை மாற்றி இலங்கைப் பிரச்சினையில்இந்தியத்தலையீட்டுக்கு ஆதரவாகப் பேசி வந்தது. இன்று அது தனது நிலைப்பாட்டில் இருந்து சிறிது சிறிதாக விலகிக் கொள்வதைக் காண முடிகிறது. அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தர பகைவர்களும் இல்லை என்பதற்கு இது சிறந்த தோர் சாட்சியாகும்.

### பாதுகாப்பு உறவு

இவை அனைத்தும் ஒரு புறம் இருக்க தனது பாதுகாப்பைப் பலப்படுத்தும் விடயத்தில் இந்தியா இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதை நாம் அவதானித்து வருவதாலேயே இலங்கை விடயத்தில் அது இருவழிக் கொள்கையை கடைப்பிடிக்கிறது என்று முன்னர் கூறி இருந்தோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் மக்களும் தனிநாடு ஒன்றை அமைத்து விடுவார்களோ என்ற அச்சம் இந்தியாவின் மனதில் நீண்ட காலமாக குடி கொண்டு இருக்கிறது. இலங்கை துண்டாடப்படுவதை அது அடியொடு விரும்பவில்லை.

அதனால் தான் பிளவுபடாத ஜனநாயக இலங்கைக்குள் பன்மைத்துவம் மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து இலங்கையின் சகல பிரிவினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு காணும் நடவடிக்கைக்கே தன்னால் ஆதரவு வழங்க முடியும் என [illegible] மோகன் கூட்டறிக்கையில் இந்தியா வலியுறுத்தித் தெரிவித்திருக்கிறது.

இலங்கை இரண்டாகுமானால் இந்தியாவுக்குள்ளே பிரிவினைக் கோரிக்கைகள் குறிப்பாக தமிழகத்தில் தீவிரமடையும் என இந்தியா அஞ்சுகிறது. அங்கு25க்கும் அதிகமான மாநிலங்கள் உள்ளன. இவற்றில் மொழிவாரியான மாநிலங்களின் தொகை 17 ஆகும். இன்று இங்குள்ள மாநிலம் ஒவ்வொன்றும் தனிநாடு கோரி போராடாவிடினும் தமது மாநிலங்களுக்கு அதிகளவு அதிகாரங்கள் வேண்டும் என்று கோரி போராடிக் கொண்டு இருக்கின்றன. இந்தப் பின்னணியில்இலங்கையில் ஏற்படக்கூடிய பிரிவினை மாநிலப் பிரிவினை வாதத்துக்கு உந்து சக்தியாக அமையும் என இந்தியா அஞ்சுகிறது. அதனால் தான் பட்டும் படாமலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாதுகாப்பு உறவுகளை அது இலங்கை அரசுடன் பேணி வருகிறது.

இந்தக் களநிலையில் ஒரு விடயத்தை நாம் மனதில் பதித்துக் கொள்ள வேண்டும். சமகால அரசியலை, அரசியல் பொருளாதார யதார்த்தங்களே தீர்மானிக்கின்றன. மஹிந்தவும் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு விட்டுக் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவது நிச்சயம். எனவே, இணைத் தலைமை மற்றும் இந்தியாவின் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய தீர்மானங்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு எதிர் காலத்தில் அவர் நிச்சயம் தள்ளப்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணக் கால்பந்தில் ஓர் கண்ணோட்டம்

உலகத்தர வரிசையில் தற்போது 9ஆவது இடத்தில் இருக்கும் அணி தான் 1966ஆம் ஆண்டு உலகக்கிண்ண போட்டித்தொடரை நடத்தி வெற்றிக்கொடி நாட்டிய அணியான இங்கிலாந்து. உலகத்தரவரிசையில் 30ஆவது, இடத்திலிருக்கும் பராகுவே 51ஆவது இடத்



திலிருக்கும் ட்ரினிடாட் டுபாகோ, 14ஆவது இடத்திலிருக்கும் சுவீடன் ஆகிய அணிகளை இங்கிலாந்து தனது முதல் சுற்று தகுதிகாண் ஆட்டங்களில் சந்தித்தது.

தனது தகுதிச் சுற்றுக் குழு ஆட்டம் ஒன்றில் எதிர்பாராதவிதமாக வடக்கு அயர்லாந்திடம் 0-1 என்று தோற்றுப் போன அணி இங்கிலாந்து. அது உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதி பெற பாதகம் ஏற்படக்கூடும் போல் இருந்தது.

ஆனால், செக் குடியசு அணிக்கு எதிராக ஹாலந்து பின்கள வீரர் பாரி ஒப்டாம் 37ஆவது நிமிடத்தில் அடித்த கோல் ஹாலந்து வெற்றியை பறித்துத் தந்தது மட்டும் அல்லாமல் இங்கிலாந்து உலகக்கிண்ண போட்டித் தொடருக்கு தகுதி பெறவும் உதவியது.

2002 ஆம் ஆண்டு உலகக்கிண்ண முதல் சுற்று தகுதிகாண் போட்டியில் இருமுறை (1978, 1986) உலகக்கிண்ணத்தை வென்ற

இப்படித்தான் இங்கிலாந்து மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி அடிக்கடி ஏமாற்றத்தை தந்துள்ளது. 1966இல் பாபி மூரின் காட்டிய நம்பிக்கையும், நெஞ்சுறுதியும் இங்கிலாந்தை எழுச்சிபெறச் செய்தது. கிடைத்த வாய்ப்புகளை கோல்களாக்க அவ்வணியில் ஜெப் ஹர்ஸ்ட் போன்ற கில்லாடிகள் இருந்தனர். அந்த 1966 உலகக் கிண்ணப் போட்டியின் இறுதியாட்டத்தில் இங்கிலாந்து மேற்கு ஜேர்மனியை 4-2 என்ற கோல்கணக்கில் தோற்கடித்த போது ஹார்ட்ரிக் அடித்தார் ஹாஸ்ட்.

2003 பிப்ரவரியில் 17 வயதாக இருந்த போதே இங்கிலாந்து அணிக்கு ஆட வாய்ப்பு பெற்ற வேய்ன் ருனி இங்கிலாந்திற்கு கோல்

## போட்டியை நடத்தும் இங்கிலாந்தின் நிலை!

அணியான ஆர்ஜென்ரீனாவை 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த அணி இங்கிலாந்து. அந்த ஆட்டத்தில் 'பெனால்டி கிக்' மூலம் கோல் அடித்து இங்கிலாந்திற்கு வெற்றியைப் பெற்றுத்தந்த அணித்தலைவர் டேவிட் பெக்காம்தான் இப்போது அவ்வ

கள் அடிப்பதில் ஒரு கில்லாடி வீரர். இப்படி பல சிறந்த வீரர்கள் இங்கிலாந்து அணியில் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்கள் ஒருங்கிணைந்து ஆடினால்



ஹென்ரிக் லார்ஸென்



ராவுல் கொன்ஸாலென்

அணியும் அதுவே.

1958 இல் உலகக்கிண்ண போட்டியை நடத்திய போது இறுதியாட்டத்தை எட்டிய அணி சுவீடன். இறுதியாட்டத்தில் பிரேசிலுக்கு எதிராக 4ஆவது நிமிடத்தில் கோல் அடித்து முன்நின்ற அணி ஆட்டத்தின் இறுதி நேரத்தில் 2-5 என்று தோற்றுப் போனது. அந்த ஆட்டத்தில் 17 வயது பீலி அட்டகாசமாக ஆடி கோல்கள் போட்டார். அப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் பிரான்ஸிற்கு எதிராக பிரேஸில் வெற்றிபெற்ற போது ஹட்ரிக் அடித்தார் பீலி.

1950, 1994 உலகக்கிண்ணப் போட்டிகளில் அரையிறுதிக் கட்டத்தை எட்டிய அணி சுவீடன். தற்போது உலகத் தர வரிசையில் 14ஆம் இடத்தில் இருக்கும் அணி இது. ஜுவென்டுஸ் அணி ஸ்ட்ரைக்கரான ஸ்லாடான் இப்ராஜ் ஸ்வீடனுக்கு ஆடுபவர். பார்ஸிலோனா அணி ஸ்ட்ரைக்கான ஹென்ரிக் லார்ஸனும், அர்லெனா பிரெடி எல்ஜுங்பெர்கும், சுவீடன் அணிக்கு ஆடுபவர்கள். சுவீடன் அணி தனது கடைசிக் குழு (கொலோனில், ஜூன் 20 அன்று) இங்கிலாந்தை எதிர்த்து ஆடுகிறது.

இக்குழுவில் உள்ள மற்ற அணிகள் பராகுவே (உலக நம்பர் 30) ட்ரினிடாட் டுபாக்கோ (உலக நம்பர்54) முறையாகத் தொடர்ந்து உலகக் கிண்ணப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள அணி பராகுவே. கார்லோஸ் என்ற ஆக்ரோஷமாக ஆடக்கூடிய, திராணி மிகுந்த இடைக்கள வீரர் இவ்வணியில் நட்சத்திரமாக விளங்குகின்றார் ட்ரினிடாட் டுபாக்கோவின் ஜனத்தொகை 13 லட்சம்தானாம். இருந்தும் உலகக் கிண்ண போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது அவ்வணி.

நடக்கவிருக்கும் உலகக்கிண்ண போட்டியில் 3-ஆவது ஸீடிங் பெற்றுள்ள அணி ஸ்பெயின். ஸ்லோவாக்கியாவுடன் ஆடிய 'பிளே-அப்' ஆட்டங்களில் முதல் ஆட்டத்தை

5-1 என்று அது வெல்ல லூயிகார்ஸியா ஹாட்ரிக் அடித்து உதவினார். 2ஆவது ஆட்டம் 1-1 என்று டிராவில் முடிந்தது. கோல்கீப்பர் இஸெக் காஸில்லாஸ், பின்கள வீரர் கார்லெஸ் புயோல், ஸ்பெயின் அணிக்கு மிக அதிகம் கோல்களை அடித்துள்ளவர் என்ற வரலாறு படைத்துள்ள 28 வயது ரியால் மேட்ரிட், ஸட்ரைக்கர் ராவுல் கொன்ஸாலெங்

இவ்வணியின் நட்சத்திர வீரர்கள். ராவுல்தான் அணித்தலைவர் 1950 உலகக்கிண்ணப் போட்டியில் இறுதி குழுப் போட்டியை எட்டிய அணி ஸ்பெயின்.

அமெரிக்காவில்1994இல் நடந்த உலகக் கிண்ண போட்டியில் காலிறுதி ஆட்டத்தை எட்டிய அணி ஸ்பெயின் இறுதியாட்டத்தை எட்டிய பிரேஸிலிடம் தோற்ற இத்தாலியிடம் 1-2 என்று தோற்ற அணி ஸ்பெயின். அப்போட்டியில் 'டாப் ஸ்கோரராக' ராபெர்ட் போ



வேய்ன் ரூனி

பாஜியோ ஆட்டக்கடைசியில் அடித்த கோல் மூலம் தோல்வி கண்டது ஸ்பெயின்.

ஸ்பெயின் குழுவில் அணிகள் உக்ரேய்ன் (உலக நம்பர் 40) டுனிசியா (28), சவுதி அரேபியா. இவ்வணியின் பயிற்சியாளரான ஒலெக் ப்ளாக்லின் 1975இல் மிகச் சிறந்த ஐரோப்பிய வீரருக்கான விருது பெற்றவர். சென்ற ஆண்டு இவ்விருதை பெற்ற ஏ.சி மிலான் ஸ்ட்ரைக்கர் ஆண்ட்ரிய் ஷெவ்ரேய்ன் அணியின் தலைவர்.

உக்ரேய்ன் முதல் முறையாக உலகக் கிண்ணப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

டுனிசியா இதற்கு முன் 1978,1998, 2002 உலகக்கிண்ண போட்டிகளில் பங்கேற்ற அணி. 1978 முதல் உலகக்கிண்ண ஆட்டத்தில் மெக்ஸிகோவை 3-1 என்று தோற்கடித்ததற்குப் பிறகு இந்தப் போட்டிகளில் மேலும் ஓர் வெற்றியை பெற முடியாமல் தவிக்கும் அணி. பின்கள வீரர் ஹாடெம் ட்ராபெல்ஸி இவ்வணிக்கு நட்சத்திர வீரர். 6 ஆட்டங்களில் தோல்வியடையாமல் கோல் கொடுத்து தகுதி குழுப் போட்டியில் அணியை நுழையச் செய்தனர். சென்ற உலகக்கிண்ணப் போட்டியில் அரையிறுதியை எட்டிய தென்கொரியாவுக்கு மேல், நம்பர் 1 அணியாக வந்தது சவுதி அரேபியா. ஆசியாவின் கில்லாடி கோல்கீப்பர் என கருதப்படும் மதப்ருக் சயிந் அதன் நட்சத்திர வீரர். 1994இல் உலகக்கிண்ண தொடரின் 2ஆம் சுற்றுக்கு எட்டிய நாளிலிருந்து தொடர்ந்து இப்போட்டியில் இடம் பெற்றுவரும் இந்த அணிக்கு முன்னாள் ஆர்ஜென்ரீனா வீரர் கோப்ரியெல் கால்டெரோன் பயிற்சியாளர். 34 வயது அல்ஜபேர் இதன் அனுபவமிக்க நட்சத்திர வீரர்.

## விளையாட்டுச் செய்திகள்!

— கிரிஹா —

ணிக்குத் தலைவர்.

1998 இல் பிரான்சில் நட்ந்த உலகக் கிண்ண கால் இறுதி ஆட்டத்தில் டியகோசிமி போன் அடிபட்டு சுருண்டு விழுந்தது போல் நடித்த போது சிகப்பு அட்டை காட்டப்பட்டு ஆட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார் பெக்காம். அந்த ஆட்டத்தை 'டை-பிரேக்கர்', 'பெனால்டிகிக்'குகளில் இங்கிலாந்து தோற்றுப்போனது. அந்த வேதனைக்கெல்லாம் பழிதீர்க்கும் வகையில் பெக்காம் அந்த 2002 உலகக்கிண்ண ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராக 'பெனால்டி கிக்' கோல் அடித்தார்.

அந்த 2002 உலகக்கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து-நைஜீரியாவுக்கு எதிராகவும், சுவீடனுக்கு எதிராகவும் குழு ஆட்டங்களை சமநிலைப்படுத்தியது. குழுப் போட்டியில் சுவீடனுக்கு அடுத்து 2ஆவதாக வந்து, 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது. 2 ஆவது சுற்றில் டென்மார்க்கை 3-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து கால் இறுதி ஆட்டத்தை அது எட்டியது.

5ஆவது முறையாக உலக கிண்ணத்தை கைப்பற்ற இருந்த பிரேசிலுக்கு எதிராக 23ஆவது நிமிடத்தில் மைக்கேல் ஒவென் அடித்த கோல் மூலம் முன்னுக்குச் சென்ற

இங்கிலாந்து இப்போட்டியில் இரண்டாவது சுற்றைத் தாண்ட இயலும்.


2001 ஜனவரியிலிருந்து இவ்வணிக்கு பயிற்சியாளராக இருக்கும் சுவீடிஸ்காரர் ஸ்வென் கோரன் எரிக்ஸன் அறிவுத் தெளிவோடு அமைதியான முறையில் செயல்படுவார்.

இங்கிலாந்து இடம் பெற்றுள்ள 'பி' குழுவில் உள்ள அணிகளில் ஒன்று ஸ்வென் கோரன் எரிக்ஸனின் தாய் நாடான சுவீடன். இந்த உலகக் கோப்பை கிண்ணப் போட்டிக்கான தகுதிச் சுற்றுக் குழு போட்டியில் இரு முறை குரோஷியாவிடம் தோற்றுப் போன அணி சுவீடன். ஆனால், குரோஷியா எடுத்த மொத்தப் புள்ளிகளைப் போல் சுவீடனும் எடுத்தது. குழுப் போட்டியில் 2 ஆவதாக வந்த அணி சுவீடன்.

சென்ற உலக்கிண்ணப் போட்டியிலும் இங்கிலாந்துடன் இருந்த அணி சுவீடன். அந்தக் குழு போட்டியில் முதல்தர அணியாக வந்ததும் சுவீடன்தான்.

சென்ற உலகக்கிண்ண போட்டியில் இங்கிலாந்தை 1-1 என்று சமநிலையாக்கிய அணி சுவீடன். அதேபோல் ஆர்ஜென்ரீனாவையும் 1-1 என்று சமநிலையாக்கிய அணி அது. நைஜீரியாவை 2-1 என்று தோற்கடித்த

## 'காகா' திருமணம்



பிரேசில் நாட்டின் நட்சத்திர கால்பந்து வீரர் காகா. இவர் பிரேசில் அணியில் இடம் பிடித்து விளையாடத் தொடங்கியதில் இருந்து தன்னுடைய ஆட்டத்திறன் மூலம் வெற்றிக் கொடி நாட்டி வருகிறார். இதனால் அவருக்கு ஏராளமான ரசிகர்கள் பட்டாளம் உருவாகி வருகின்றனர். அதிலும் குறிப்பாக இவருக்குப் பெண் ரசிகர்கள் அதிகம்.

இத்தாலியில் உள்ள 'ஏசிமலன்' கழகக் கால்பந்து அணியிலும் காகா இடம் பிடித்து விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

பெண் ரசிகைகள் அதிகம் என்பதால் காதல் கடிதங்களும் நிறைய குவிகிறதாம். இதனால் இவர் திருமணம் செய்ய முடிவெடுத்தார். அண்மையில் இவரது திருமணம் மிகவும் தடல்புடலாக நடந்தேறியது.

இவருக்கு மனைவியாக வாய்த்திருப்பவர் 18- வயது கல்லூரி மாணவியாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்



நாகராசா ஆனந்த், ஊர்காவற்றுறை.
கே:- தமிழை ஒழுங்காகக் கதைக்காமல் ஒரு சில ஆங்கில வார்த்தைகளைத் தமிழுடன் சேர்த்து தமிழ் மொழியைக் கொச்சைப்படுத்தும் தமிழர்களைப் பற்றி உமது கருத்து என்ன?
ப:-'தாய் மொழி கண் போன்றது. பிற மொழிகள் கண்ணாடி போன்றவை' என்று சமீபத்தில் ஒரு வாசகம் படித்தேன். எவ்வளவு பெரிய உண்மை. கண் ஊனம் உள்ளவர்களுக்குத்தான் கண்ணாடி தேவை. அது போல தமிழை சரியாகப் பேசத் தெரியாதவர்கள் தான் ஆங்கிலத்தில் அலட்டுவார்கள்.

இ. நிதர்ஷன், பூநகரி.
கே:- மைடியர் பித்து அண்ணா, உங்களை நேரில் பார்க்க ஆவலாயிருக்கிறேன். அட்லீஸ்ட் உங்கள் போட்டோவையாவது பார்க்கலாமா?
ப:- ஏன் உங்களுக்கு இந்த விபரீத ஆசை? பித்தனை பார்த்து செத்தான் என்ற வரலாறு எதற்கு? ஏன் எனக்கு இந்த பாவம்?...

ஸ்ரீ. தரன், புங்குடுதீவு.
கே:- கவிதை எழுதும் பெண்கள் பற்றி உமது கருத்து என்ன?
ப:-காகிதத்தை வீணாக்கவும் எழுதலாம். காதலன் வீணானவன் என்பதாலும் எழுதலாம். எது எப்படியோ கவிதைக்கு பொய் அழகு. பொய்யை விரும்பும் பெண்மணிகளும் அழகு என்பது எனது கருத்து.



கே.என். குருபரன்.
கே:- இனிய பித்தா, நடந்து முடிந்த விடயத்தைக் கடந்து வேறொன்றுக்கு வரும் போது என்ன நினைப்பீர்கள்?
ப:- இதுவும் கடந்து போகும்.

இ. தேவிகா, மட்டுவில் மேற்கு.
கே:- அன்பின் பித்தா, கூட்டுறவில் பணியாற்றும் பெண்களுக்கும், அரச நிறுவனத்தில் பணியாற்றும் பெண்களுக்கும் என்ன வித்தியாசம்?
ப:-முன்னவர்கள் கூட்டுக் குடும்பத்தோடு ஒட்டி உறவாடக் கற்றுக் கொள்வார்கள். பின்னவர்கள் நேரம், ஒழுங்கைக் கடைப்பிடித்து அமுல்படுத்த முடியாமல் தனிக்குடித்தனம் போய் விடுவார்கள்.

எஸ். செல்வி,ஆலங்கேணி.
கே:- எதற்கெடுத்தாலும் பயந்து பயந்து வீட்டுக்குள்ளேயே அடங்கிக் கிடக்கும் ஆண்களைப் பற்றி நீர் என்ன சொல்கிறீர்?
ப:- ஆண்கள் பயந்து போய்த்தான் வீட்டுக்குள்ளே அடங்கிக் கிடக்கிறார்கள் என்று தப்பா நினைக்க கூடாது. அவர்களுக்கு வீட்டுக்குள்ளேயே ஆயிரம் வேலை இருக்கலாம். சரி அப்படி வெளியே வந்தாலும் இப்ப நாட்டில் என்ன நடக்கிறது தெரியும் தானே!



ம. கண்ணன்,புளியங்குளம்.
கே:- அன்பின் பித்து, இன்றைய பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?
ப:- கும்முனுதான் வாசம் வீசும் குட்டி பூக்கடை, நடமாடும் நகைக்கடை, காதல் பிசாசு, அழகான இராட்சசி, ஒல்லிக்குச்சி உடம்புக்காரி இப்படி நாள் தோறும் வர்ணித்து வர்ணித்து பாட்டெழுதி மாய்பவர்கள் போதாதா? என்னையும் ஏன் இதற்குள் இழுத்து விடப்பார்க்கிறீர்?

ப. செல்வி,கல்மடுநகர்.
கே:- டியர் பித்தா, உண்மையான நட்பும், உண்மையான காதலும் அழிவதில்லை. ஆனால், நட்பு தொடர்வதைப் போல காதலும் தொடர்வதில்லையே ஏன்?
ப:- காதலில் மட்டும் தானே கல்யாண சிறைவாசம் காத்திருக்கிறது. அது தான் நிறைய பேர் பாதியிலேயே ஓடி விடுகிறார்கள்.

புவிதா, யாழ்ப்பாணம்.
கே:- பித்தா, புதிய ஜனாதிபதிப் பிரவேசத்தின் பின் நாட்டு நிலைமை பற்றி உமது கருத்து என்ன?
ப:- அரைத்த மாவை அரைக்கும் கதைதான். வேறென்ன?



நவீனன், மாவிட்டபுரம்.
கே:- சந்திரிகா அம்மையாரின் காலத்தில் இந்துக் கோவில்களைத் தூசி தட்டும் அமைச்சுப் பொறுப்பை வகித்தவருக்கு, இப்போது மஹிந்தவின் ஆட்சியில் சமூகசேவை அமைச்சு வழங்கப் பட்டுள்ளது. இவர் தமிழ் மக்களுக்கு சமூக சேவை செய்வாரா?
ப:- அப்போது கிள்ளிக் கொடுத்தவர் இப்போது அள்ளிக் கொடுத்தாலும் கொடுக்கலாம். யார் கண்டது?

வ. ராஜ்மோகன், கிளிநொச்சி.
கே:- அன்பின் பித்தா ஆணும் பெண்ணும் நட்பு கொள்வது தவறா?
ப:- நட்பு கொள்வது தவறில்லை. நாகரீகத்தின் உச்சியில் இருக்கும் நம்மவர் நட்பை கொஞ்சம் மொடிபை பண்ணி வரம்பு மீறினால் தான் தவறு. வரம்பு மீறாதவரை ஆண் பெண் நட்பு சுமுகமான உறவுதான்.

ம. கலா, அடம்பன்.
கே:- பித்து அண்ணா, என்னை விட அழகானவர்கள் இல்லை என்று திரியும் சில பெண்களைப் பற்றி உமது கருத்து என்ன?
ப:- ஒருவரைப் பார்த்து ஒருவர் கொள்ளும் நினைப்பு தான் காரணம். 'கானமயிலாட அதைக் கண்டு வான்கோழி......' அந்தப் பாடல் தான் ஞாபகம் வருகிறது.

ப.சுபா, இடைக்கட்டு.
கே:- அன்பின் பித்தா, கணவன் ஏசியதும் மனைவி உடனே அழுவது ஏன்?
ப:- ஊடலை ஆரம்பித்து வைக்கத்தான்.

ரி.கர்ணா, யாழ்ப்பாணம்.
கே:- டியர் பித்தா, லைசன்ஸ் இல்லாமல் வாகனம் ஓட்டுபவர்களை பற்றி என்ன நினைக்கிறீர்?
ப:- தட்டுப்படாமல் ஓடும்வரை தப்பில்லை. தட்டுப்பட்டால் முட்டிக்கு முட்டி தட்டுவார்கள். இது தேவையா?



கி.சுபாஸ், கிளிநொச்சி.
கே:- அன்புள்ள பித்தன் அண்ணா, விஜய் வெடித்த சிவகாசி எப்படி?
ப:-வெடித்த வெடியில் நிறைய பேர் சுக்கலாகிக் கொண்டிருக்கிறார்களாம்.

வ. மோகன், கிளிநொச்சி.
கே:- அன்பின் பித்தா காதல் வந்தால் இலைகள் கூட மலை சுமக்கும் என்கிறார்களே?
ப:- பொய் என்று நினைக்கிறேன். விளையாட்டாக சொல்லியிருப்பார்கள்.

கி.ஜெனா, உடையார்கட்டு.
கே:- பித்தா, எனக்கு ஜோக் ஒன்று தாரும்.
ப:- கணவன்:- ராகவி ஓடி வா, அம்மா மாடிப்படியில் உருண்டு விழுந்துட்டாங்க. தலையில் அடிபட்டு இரத்தம் வருகிறது.
மனைவி:- என் ராசிப்படி இன்றைக்கு இனிய அதிர்ச்சி என்று இருக்குன்னு சொன்னேனே. இப்ப பார்த்தீங்களா அது சரியாப் போச்சு.

த. இசைப்பிரியன், புளியங்குளம்.
கே:- பித்தா ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்கிறார்களே....!
ப:- அதெல்லாம் அந்தக்காலம். இந்தக் காலத்தில் 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் உன் மனைவியிடம் உதைபடுவாய்' என்பது தான் பொருந்தும்.

> **பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-**
> பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-
>
> 
>
> பித்தன் பதில்கள்
> 'சுடர் ஒளி வாரஇதழ்'
> 85,ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
> கொழும்பு - 14

வே. ஜெகன், புளியங்குளம்.
கே:- பித்தா, ஜாதகம் பார்ப்பவர்கள் சிலர் உங்களுக்கு நல்ல காலம் என்று கூறி பணம் வாங்கிக் கொள்கிறார்களே?
ப:- 'கேட்பவன் ஏமாளியென்றால் எருமைமாடும் ஏரோ பிளேன் ஓட்டும்' என்றொரு கிராமப்புற வாசகத்தைக் கேட்டிருக்கிறேன். அதற்கு இது நல்ல உதாரணம்.

அ.வசந்தன், அளம்பில்.
கே:- அன்பின் பித்தா அந்தக் காலத்தில் கம்பன் கண்ட பெண்களுக்கு, இன்றைய காலப் பெண்கள் ஈடாகுவார்களா?
ப:- கொஞ்சம் கஷ்டம் தான். கம்பன் கண்டான் அடக்க ஒடுக்கமான அடக்கப் பட்ட பெண்களை. இப்போதையவர்கள் பாரதி கண்ட புதுமைப் பெண்கள். கொஞ்சம் அதிரடியாகத்தான் இருப்பார்கள்.

தி.ஜெயா, வவுனியா.
கே:- ரணில் அடைந்த தோல்விக்கு தன் வினை தன்னைச் சுடும் ஒட்டப்பம் வீட்டைச்சுடும் என்ற நிலைதான் காரணமா?
ப:- இல்லை ஜெயா, கூட இருந்து குழி பறிக்கும் நிலை தான் காரணம்.



சி. சந்திரன், மிருசுவில் வடக்கு.
கே:- அன்பின் பித்தா! இக் காலத்தில் அதிகமான பெண்கள் திருமணமாகி ஐந்து ஆறு மாதங்களில் குழந்தையைப் பெற்றுக் கொள்கின்றனர். குழந்தையோ நல்ல ஆரோக்கியமாக இருக்கின்றது. இதற்கு என்ன காரணம்?
ப:- ஒத்திகை பார்த்து அரங்கேற்றுவதுதான் உலக வழமை.இவர்கள் விஷயத்தில் ஒத்திகையே அரங்கேற்றமாகி விட்டது போலும்...?

---

# நிழல்

குறுங்கதை

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்டு, பெற்றோரை இழந்து தவிக்கும் சுஜியைப் பார்ப்பதற்காக பேருந்து நிலையத்தை நோக்கி ராஜா நடைபிணமாகச் சென்று கொண்டிருந்தான். பேருந்தில் ஏறி அமர்ந்த வண்ணமாய் சுஜியை பற்றி சிந்திக்கத் தொடங்கினான்.

பெற்றோரை இழந்து தனது தங்கையுடன் அவள் எப்படி வாழ்க்கை நடத்துவாள்? அவளின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது? இப்படி சிந்தித்தபடி பேருந்தில் பயணத்தை தொடர்ந்தான். பயணத்தின் போது அவனுக்கு மிகவும் மனதை தொட்ட பாடல் ஒலித்தது.

'அம்மா நீ சுமந்த பிள்ளை
சிறகிழந்த கிள்ளை.
மண்ணில் என்ன தோன்றக் கூடும்.
மழையில்லாத போது மனிதனோ, மிருகமோ தாயில்லாமல் ஏது.'

இப் பாடல் வரிகளை கேட்ட போது சுஜியின் ஞாபகத்தை மீண்டும் மனதில் இருத்தியவனாக முகமாலை சோதனைச் சாவடியை நோக்கிச் சென்றான். இராணுவத்தினரும் அவனது கசிந்த விழிகளையும், வாடிய முகத்தோற்றத்தையும் பார்த்துவிட்டு பரிதாபப்பட்டவர்கள் போல் காட்சியளித்தார்கள். மீண்டும் பயணத்தை தொடர்ந்த ராஜா முல்லைத்தீவை அடைந்தான்.

முல்லைத்தீவை பார்வையுற்றதும் அவனுக்கு தலையே சுற்றியது. முல்லைத்தீவு வயல்வெளிகளுள் தூக்கி எறியப்பட்டு, சின்னாபின்னமான வள்ளங்கள், இடிந்து, உடைந்து நொறுங்கி கிடக்கும் ஆலயங்கள், கோவில்கள் அடித்தளத்துடன் இடிந்த கட்டடங்கள் இவற்றைப் பார்வையிடும் போது, இயற்கை செழிப்புடனும், சன நடமாட்டத்துடனும் விளங்கிய முல்லை நகரா இப்படி காட்சியளிக்கின்றது. இராணுவ கெடுபிடியினால் தகர்க்கப்பட்டும், உறவுகளை இழந்தும் தவித்த மக்கள் 1996 ஆம் ஆண்டுக்குப் பின் செழிப்புடனும், பெருமையுடனும் விளங்கிய முல்லை நகரா இது என்று எண்ணத் தோன்றியது. போரினால் பல உயிர்களை பலி கொடுத்து விதவைகளாகவும், அனாதைகளாகவும் தவித்த நம் உறவுகள் 1996 ஆம் ஆண்டுக்கு பின்பு ஓரளவு நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் தமது அன்றாட தொழில்களில் ஈடுபட்டு வாழ்க்கையை ஓரளவு ஓட்டினார்கள். நிம்மதி பெருமுச்சு விட்டார்கள். யாருமே எதிர்பாராத விதத்தில் சுனாமி என்ற பேரழிவினால் எத்தனை உயிர்களை பிஞ்சு உள்ளங்களை கொன்ற ஆழிப் பேரலை இன, மத பேதமின்றி சகல மக்களின் உயிரையும் சில நிமிடத்தில் பறித்தது. 3000 மக்களுக்கு மேல் பலியானதுடன் பெண்கள், குழந்தைகளின் அவல சாவும், பெற்றோர் இருவரையும் இழந்தும் பலர் கணவன்மாரை, மனைவிமாரை இழந்தும், பலர் காயமடைந்தும், காணாமல் போயும், உளரீதியாக பாதிக்கப்பட்டும் இனி என்ன வாழ்க்கை என்ற ரீதியில் இருப்பதை பார்க்கும் போதும், அத்துடன் செஞ்சோலை மாணவர்களின் விடுதி அவர்கள் ஓடி, ஆடி விளையாடிய இடங்களை பார்க்கும் போதும் ஒரு கணம் இதயம் வெடித்திடும் போல் இருந்தது.



முல்லைத்தீவில் பல இழப்புகளையும் பார்வையிட்டுக் கொண்டு சுஜியின் ஞாபகத்துடன் செல்லும் போது அவனின் உற்ற நண்பன் சுரேஷ் எதிரே வந்து அவனை கண்டு கட்டி தழுவி அழ ஆரம்பித்தான். அவனது மனைவியும் ஒரு குழந்தையும் ஆழிப் பேரலையால் இறந்து விட்டார்கள். இப்போது தானும் ஒரு குழந்தையும் அனாதைகளாக இருக்கின்றோம் என்று சொல்லி கதறி அழுதான். நீ மல்லாவியில் அல்லவா இருந்தாய் எப்போது இங்கே வந்தாய் என்று ராஜா கேட்டான். நாங்கள் நாலு, ஐந்து மாதங்களாக முல்லைத்தீவில்தான் மகிழ்ச்சியாக வாழ்ந்தோம். யாருமே எதிர்பாராத விதத்தில் ஆழிப் பேரலை சகல மக்களையும் ஒரு நிமிடத்தில் பறித்து விட்டது. 26 ஆம் திகதி பெரிய பேரிரைச்சலுடன் வருவது என்ன வென்று பார்க்க எழுந்து வீட்டுக்கு வெளியே ஓடி வந்தேன். கண்களை மூடி திறப்பதற்குள் மனைவியும், ஒரு குழந்தையும் வெள்ளத்தால் அள்ளி செல்வதையும், அலைகளால் தூக்கி எறியப்படுவதையும், அவர்கள் அவலப்படுவதையும் கண்டு என்ன செய்வது என்று அறியாது எனது மற்றைய குழந்தையை கையில் எடுத்துக் கொண்டவுடன் எங்களையும் அலை தூக்கி வீசியது. நான் குழந்தையுடன் ஒரு ஆலமர கொப்பை இறுகப் பற்றிக் கொண்டேன். பலர் சுவருடன் மோதியும், கட்டட இடிபாடுகளுக்குள் சிக்குண்டும் இருப்பதை மன வேதனையுடன் ஆல மரத்தில் தொங்கியபடியே பார்த்துக் கொண்டிருந்தேன். இயற்கை அனர்த்தம் சற்று ஓயவே வெள்ளத்தால் அள்ளுண்டு சென்ற மனைவி, குழந்தையை தேடினேன். எனது மனைவியையும் குழந்தையையும் காப்பாற்ற முடியவில்லை. அவர்களின் உடல்களை பிணமாகத்தான் பார்க்க முடிந்தது என்று சொல்லி கதறினான்.

சுரேஷின் துயரத்திலும் பங்கெடுத்து விட்டு சுஜியை பார்ப்பதற்காக இருவரும் சுஜியின் இல்லம் நோக்கி சென்று கொண்டிருந்தோம். என்னை கண்டதும் மனதை ஒருவாறு கட்டுப்படுத்திக் கொண்டு வந்தாள். ஆனால் அழுதழுது கண்கள் செத்துப் போனமாதிரி வரண்டு போய் இருந்தன. அவள் நடந்தவற்றை எனக்கு கூறத் தொடங்கினாள். "அன்றைய தினம் பெற்றோர் முதலில் ஆலயத்திற்கு சென்று விட்டு வந்து தமது அன்றாட வேலைகளை செய்வதற்கு ஆயத்தமானார்கள். நானும், தங்கையும் ஆலயத்திற்கு சென்று விட்டோம். திரும்பிவந்த போது வீடிருந்த அடையாளமேயில்லை. அத்திவாரத்தை கூட அலை அடித்து கிளப்பிக் கொண்டு போய் விட்டது. பெற்றோரின் உடல்களை கூடக் காணக் கிடைக்கவில்லை. என்ன செய்வது? எங்களுக்கு மட்டுமா நடந்தது? எல்லோருக்கும் தானே. மற்றவர்களின் இழப்பைப் பார்க்கும் போது எங்களுக்கு குறைவு என்று தான் சொல்ல வேண்டும்" என்றாள். மற்றவர்களின் இழப்பிற்காக இரங்குகின்ற அவளின் உயர்ந்த குணத்தை பார்க்கும் போது மனம் பெருமிதம் அடைந்தது. இப்போது இருக்கின்ற வீடு தனது நண்பியின் வீடு என்று கூறினாள். அவர்களுக்கு தொடர்ந்து பாரமாக நாங்கள் இருக்கக் கூடாது. இனி எங்கேயாவது அனாதைகள் இல்லத்தில் தான் இருக்க வேண்டும் என்றாள். உடனே ராஜா "இல்லை சுஜி நீங்கள் அனாதைகள் இல்லை. நீங்களும் எனது சகோதரர்கள் தான். எனது சகோதரர்களுடனும், எனது பெற்றொருடனும் வந்து இருங்கள். இப்போதே உங்களை என்னுடன் அழைத்து செல்கின்றேன். பெற்றோரும் சகோதரர்களும் உங்களுக்கு ஒரு குறையும் விடாமல் அரவணைப்பார்கள். இனி நீங்கள் ஒருபோதும் அனாதைகள் இல்லை. வாருங்கள்" என்று தன்னுடன் அழைத்துச் சென்றான்.

செ. யூலியட்,
கோவில் வீதி,யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசியில்மஹிந்தவும்-ரணிலும்

அனேகமான அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏன் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரும் கூட தமது கிறிஸ்மஸ் விடுமுறையை வெளிநாடுகளில் உல்லாசமாக அனுபவித்துவிட்டு திரும்பி இருக்கின்றனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட கிறிஸ்மஸ் விடுமுறையின் போது இந்தியாவிலேயே இருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சில நாட்களை வியட்னாமில் செலவிட விரும்பினார். புறப்படுவதற்கு முன்னர் 13 கடற்படைவீரர்கள் வடக்கில் கிளைமோர் தாக்குதலில் பலியான செய்தி அவருக்குக் கிடைத்ததாம்.

உடனே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ரணில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ''மஹிந்த, இது ஒரு பெரிய பிரச்சினை. சிலர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து நாட்டில் இனமோதலைத் தூண்டிவிடுவதற்கு முயற்சிப்பார்கள். ஐ.தே.கட்சி நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கும்''- என்று தெரிவித்தாராம்.

இதற்கு பதில் அளித்த ராஜபக்ஷ, சில பத்திரிகைகளின் பெயர்களை குறிப்பிட்டு அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு வடக்கில் இருந்து கிடைக்கும் செய்திகளை வெளியிடும்போது அவதானமாக வெளியிடுமாறு அவர்களிடம் கூறும்படி ரணிலைக் கேட்டுக் கொண்டாராம். ஏனென்றால் தாம் விரும்பியவாறு பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்படும் போது அவை இன வன்முறைகள் வெடிப்பதற்கு காரணமாக அமைந்து விடுகின்றன என்றும் கூறினாராம்.

தவிர, மஹிந்த இந்தியாவுக்கு புறப்படுவதற்கு முன்னர் அரசாங்கத்தை ஆதரிக்கும் கட்சிகளுக்கான கூட்டம் ஒன்று அவரின் தலைமையில் நடைபெற்றது.

அந்த கூட்டத்தில் தன்னுடன் ரணில் தொலைபேசியில் தொடர்புகொண்டது பற்றிக் கூறியதுடன் அவர் தன்னிடம் வடக்கில் எத்தனை கடற்படைவீரர்கள் இறந்தார்கள் என்று கேட்டதாகவும் தான் அதற்கு 13 பேர் என்று கூறியபோது இல்லை இல்லை தனது தகவல்கள் 20 அல்லது 30 என்று தெரிவிக்கின்றன என்று கூறினார் என்றும் மஹிந்த சொன்னாராம்.

அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் நிகழும் போது ஐ.தே.கட்சி இவ்வாறுதான் அவற்றைப் பார்க்கிறது என்றும் அதற்காகவே சரியான தரவுகளையும் விவரங்களையும் அறிந்துகொள்வதில் தான் அக்கறையுடன் இருப்பதாகவும் மஹிந்த கூறினாராம்.

# என்ன பார்வை இந்தப்பார்வை

மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் போது அரசாங்க தூது கோஷ்டியில் 48 பேர் இடம் பிடித்துக் கொண்டார்களாம். இவர்களுக்கு என விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஸ்ரீலங்கா எயர்லைன் விமானம் ஒன்றில் புதுடில்லிக்குப் பயணமான இவர்களை தென்னிலங்கை மக்கள் யாத்திரிகர்கள் என்று அழைத்தார்களாம்.

இவர்களது வாகனத்தொடரணி டெல்லி வீதியில் பாம்பு போல் வளைந்து வளைந்து சென்றபோது டெல்லிவாசிகள் அந்தக் காட்சியை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நின்றனராம். குறிப்பிட்ட ஓர் இடத்தை இந்த வாகனத் தொடரணி கடந்து செல்வதற்கு சுமார் 5 நிமிடத்திலிருந்து 10 நிமிடங்கள் வரை சென்றதாம்.

விமானபயணிகளுக்கான சுங்கத் தீர்வையற்ற வசதியை உபயோகித்து திருமதி ராஜபக்ஷ டெல்லியில் 5500 ரூபாவுக்கு அட்டியல் ஒன்று வாங்கினாராம். திரும்பி வரும் போது 4700 ரூபாவுக்கு முகச்சவரத்தின் பின் பாவிக்கும் லோஷன் வாங்கினாராம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்தியாவுக்குச் சென்றவர்களில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரான ரோஹித போகொல்லாகமவும் ஒருவர்.

இந்த விஜயத்துக்கு முன்னரே தனது மனைவி டீப்தியையும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் தன்னுடன் அழைத்துச் செல்வதற்கான அனுமதியை மஹிந்தவிடம் பெற்றுக்கொண்டாராம் அவர்.

மஹிந்தவும் அவரது தூதுகோஷ்டியும் புதுடில்லியை வந்தடைந்ததும் அமைச்சர் ரோஹித போகொல்லாகம அவர்களை விட்டுப் பிரிந்து தனியாக ஒரு ஹோட்டலுக்குச் சென்று விட்டாராம். அவர் இவ்வாறு வேறொரு ஹோட்டலில் தங்கி நின்றதற்கான கட்டணத்தை செலுத்துவதற்கு இந்திய அரசு மறுத்துவிட்டதாம்.

அமைச்சர் என்ன செய்தார் தெரியுமா? முதலீட்டு ஊக்குவிப்புச் சபையை(Board of Investment) அந்தக் கட்டணத்தை செலுத்தும்படி கேட்டுக் கொண்டாராம். மஹிந்த நாடுதிரும்பியதும் முதலீட்டு ஊக்கிவிப்புச் சபையால் செலுத்தப்பட்ட கட்டணத்தை அமைச்சரிடம் இருந்து மீளப் பெறும்படி தனது செயலாளர் லலித் வீரதுங்கவைக் கேட்டு இருக்கிறாராம்.

# மேவினின் சூப்

தாய்லாந்து அரசின் விருந்தாளியாக அண்மையில் அங்கு சென்று பிரதி தொழில் அமைச்சர் மேவின் சில்வா அங்குள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கிநின்றார். ஹோட்டலில் அவருக்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் உள்ள 'மினிபாரில்' மது அருந்திய அவர் அதற்கான கட்டணத்தை செலுத்த மறுத்து விட்டார்.

அதனால் தாய்லாந்தில் இருந்து புறப்படவேண்டிய தினத்தில் அவர் ஹோட்டலில் இருந்து வெளியேறுவதற்கான அனுமதியை ஹோட்டல் நிர்வாகம் வழங்க மறுத்து விட்டதாம். இந்த விடயம் தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டதும் அவர்கள் அங்கு சென்று குறிப்பிட்ட கட்டணமாக ருபா 45 000 செலுத்திய பின்னர்தான் பிரதி அமைச்சர் மேவின் சில்வா கொழும்புக்கு திரும்புவதற்கு ஹோட்டலை விட்டு வெளியேறுவதற்கு அனுமதிக்கப் பட்டாராம்.

கடந்த வருடம் ஆகஸ்ட்மாதம் இவர் விசேட செயலமர்வொன்றில் கலந்து கொள்வதற்காக சில நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பாங்கொக் சென்றார். அப்போது தாய் அரசாங்கம் இவர்களுக்கு செங்கம்பள வரவேற்பு அளித்து விமான நிலையத்தில் இவர்களை வரவேற்றது. மேவினுடன் சென்ற அவரது மகனும் நண்பனும் அதி விசேட பிரமுகர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாதையினூடாகச் செல்ல முற்பட்ட போது விமான நிலைய அதிகாரிகள் அவர்களை தடுத்து நிறுத்தினராம்.

இவர்கள் அனைவரும் அங்குள்ள ஹோட்டல் ஒன்றுக்கு தங்குவதற்குச் சென்றபோது மேவின், தனது மகனும் நண்பனும் தனது உத்தியோகத்தர்கள் எனவும் அவர்களுக்கும் ஹோட்டலில் தங்குவதற்கான வசதியை தாய்லாந்து அரசு செய்து தரவேண்டும் என்றும் கேட்டபோது அதிகாரிகள் அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டனராம். இறுதியில் அந்த ஹோட்டலில் அவர்கள் இருவரும் தங்கி நின்றதற்கான கட்டணத்தை மேவினே ஹோட்டலுக்கு செலுத்தினாராம்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 193

சொற்சிலம்பம் 193 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஜனவரி 15ஆம் திகதி ஆகும் விடைகள் ஜனவரி 22ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜனவரி 29 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.191 க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும்.பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.


**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 193



## சொற்சிலம்பம் போட்டி இல. 191

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ச் | 2 ச | 3 க | ம் | ■ | 4 உ | 5 ப |
| லை | ■ | 6 ம | டி | ■ | 7 சி | றி | து |
| 8 ம | 9 க | த் | து | 10 வ | ம் | ■ | க் |
| 11 க | ரு | து | ■ | 12 த | ம | க் | கு |
| ள் | ■ | 13 வ | 14 ச | ன | ம் | ■ | த |
| ■ | 15 க | ம் | ப | ம் | ■ | 16 வா | ல் |
| 17 வ | ட | ■ | த | ■ | 18 தா | ய் | ■ |
| 19 சி | ன் | ன | ம் | மா | ■ | 20 மை | ல் |

## சொற்சிலம்பம் போட்டி இல.193

**இடமிருந்து வலம்**

1. மகாபாரதத்தை எழுதியவர்
4. சோம்பலால் வருவது
7. விதம்
8. தூற்றல் / இகழ்தல் / பரிகாசம்
9. சதிபதி
11. தாங்கள்
12. வரவேண்டியது
15. இந்துக்கள் வணங்கும் பெண் கடவுள்
16. நீரில் வாழ்வது
17. சிங்கம்
18. ஒவ்வொரு நாளும் / நாளிதழ்
20. துக்கம்
21. மென் அல்ல
23. மூன்று / விளக்கில் எரிவது
24. [illegible]

**மேலிருந்து கீழ்**

1. நோன்பு
2. வேள்வி
3. நிகழ்ந்தது
4. ஒரு பிரபந்த வகை
5. (ரூபாயில்) நூறு
6. ஒரு தானியம்
10. திருமணமான பெண் என்பதைக் குறிக்கும் சொல்
13. அரசன்
14. தமிழ் மாதம்
15. பாலர் வகுப்பு / அரிச்சுவடி
16. ஒரு வள்ளல்
17. ஏதிலி
19. காய்ச்சல்
22. நெஞ்சு

## சொற்சிலம்பம் போட்டி இல. 188

1. க.கமலேஸ்வரன்
இல: 192, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.
2. சூசைநாயகம் றொபேக்கா
புலோப்பளை கிழக்கு,
பளை,
கிளிநொச்சி.
3. க.கமால்தீன்
புன்னைக்குடா வீதி,
ஏறாவூர்- 03.

### பாராட்டுப் பெறுவோர்

1. சிவா சண்முகலிங்கம்
71/9 காலி வீதி,
தெகிவளை.
2. வ.கதிர்காமத்தம்பி
இல. 16 1/1 மூர் வீதி,
கொழும்பு-06.
3. திருமதி.கலாராணி ரமேஷ்
உப அதிபர்,
குரு/ நொட்டிங்ஹில் த.வி,
கஹபத்வல,
மாவத்தகம.
4. ப.பத்மராதிகா
8/1 றம்ளின் மாவத்தை,
குடாப்பாடு,
நீர்கொழும்பு.
5. ஹியூபட் செலர்
இல.7, சகாயபுரம்
மாமாங்கம்,
மட்டக்களப்பு.
6. திருமதி.றஞ்சினி ஜெயரத்தினம்
21, 3/3 1ம் சப்பல் லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு-06.
7. பா.நியூட்டன் சதீஷ்
மீசாலை கிழக்கு,
மீசாலை.
8. திரு.சத்தியமூர்த்தி சதீஸ்குமார்
துளசி கட்டடதாரர்,
பள்ளமடு,
மன்னார்.
9. கு.திலகவதி
35/2 புங்கன்குளம்,
வில்வம்தெரு, யாழ்ப்பாணம்.
10. வ.யசோதா
வீரபத்திரர் கோவிலடி,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் இன்பத்துக்கு ஆணுறை தடையல்ல

**கே: பெண் வயது 18. எனது பிரச்சினை எந்த நேரமும் சதா கற்பனை செய்து கொண்டிருப்பதே. தினமும் மூன்று நான்கு மணி நேரமாவது எனது கற்பனை லோகத்தில் வாழ்கிறேன். இது கொஞ்சம் கொஞ்சமாக எனது வாழ்க்கையை, திறமைகளை பாதிப்பது எனக்கு விளங்குகின்றது. படிப்பதில் நாட்டம் குறைகின்றது. வகுப்பில் முதலாவது மாணவியாக இருந்த நான் இன்று புள்ளிகள் குறைந்து திறமை குறைந்தவளாகிவிட்டேன். தனிமை நிறையவே பிடிக்கின்றது. எனது தனிமையை குழப்பினால் பயங்கர கோபம் வருகிறது. எங்கும் செல்லவோ, நண்பிகள் சிநேகிதமோ பிடிக்கவில்லை. இப்படி இருந்தால் தலைச்சுற்று, தலைவிறைப்பு ஏற்படுகிறது. தூக்கம் குறைவு. மற்றவர்களைப் பார்த்து தாழ்வு உணர்வு வருகிறது. ஜனக்கூட்டங்களை வெறுக்கின்றேன். எனக்கு என்ன வருத்தம்? குணமாக்க வழி சொல்லவும்.**

ப: உங்களுக்கு DEPRESSION என்கின்ற மனோநிலை பிறழ்வு ஏற்பட்டிருப்பதாக நம்புகிறேன். இதனை மனச்சோர்வு என்று கூறலாம். தனிமையை விரும்பல் - யோசனையில் நீண்ட நேரம் இருத்தல் - போன்ற குணங்கள் மற்றும் உங்களுக்குள்ள குறிகள் எல்லாம் இந்த மனச்சோர்வையே சுட்டிக்காட்டுகின்றன. மனச்சோர்வு எந்த வயதினருக்கும் ஏற்படலாம் என்றாலும், வளர் இளம் பராயத்தினர் என்கின்ற 16-21 வயது பராயத்தினருக்கும் (ADOLES-CENTS) மனச்சோர்வு ஏற்படுவது அதிகம். அநேகமாக இப்படியான மனச்சோர்வு, மனச்சஞ்சலத்தைத் தரக்கூடிய உற்றார், பெற்றோர், அன்புக்குரியவர்களின் திடீர் மறைவுக்குப் பின்னர் ஏற்படுவது உண்டு.

மனதுக்கு அதிர்ச்சி தரக்கூடிய சம்பவங்கள் கூட மனச்சோர்வை ஏற்படுத்தும். அநேகமாக இந்த மனச்சோர்வு 6 மாதத்திற்கு இருந்து தானாக மறையலாம், அல்லது இரண்டு வருட காலம் தொடர்ந்தும் இருக்கலாம். அத்துடன் வாழ்நாளில் பல தடவை அடிக்கடி வந்து



போகக்கூடும்.

இளம் வயதில் ஏற்படும் இப்படியான மனச்சோர்வு தற்கொலை செய்யத் தூண்டும் எண்ணங்களை உருவாக்கும். எனவே, நீங்கள் ஒரு மனோவியல் நோய் நிபுணரை (PSY-CHIATRIST) சந்தித்து ஆலோசனை பெறுவது அவசியம். நீண்ட காலத்திற்கு மருந்துகள் உபயோகிக்க வேண்டி வரலாம். அத்துடன் வாழ்க்கை முறையில் (LIFE STYLE) மாற்றங்கள் ஏற்படுத்தி வாழ வேண்டிய அவசியமும் ஏற்படலாம்.

**கே: ஆண். வயது 26. உடலுறவின் போது ஆணுறை உபயோகிக்கின்றேன். ஆணுறை உபயோகிப்பதால் எனது மனைவி திருப்தி அடையமாட்டாள் என்று நண்பர்கள் கூறினார்கள். அது உண்மையா? தொடர்ந்து ஆணுறை உபயோகித்தால் எனக்கோ, என் மனைவிக்கோ நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா?**

ப: ஆணுறை உபயோகிப்பதால் பெண்ணுக்கு முழுமையான இன்பம் ஏற்படாது என்று எதுவித ஆய்வு முடிவுகளும் கூறவில்லை. உடலுறவின் போது இன்பம் காணுவதற்கு முக்கியமாக தேவைப்படும் விஷயம் மனோநிலை தவிர PHYSICAL ELEMENTS என்று கூறக்கூடிய உறுப்புகளின் பருமன், உறுப்புகளின் மேலே அணியப்படும் உறை, உறுப்புகளின் உள்ளே வைக்கப்படும் கருத்தடை சாதனங்கள் போன்றவைகளில் தங்கியிருக்கவில்லை.

பாலியல் இன்பத்திற்கு அவசியம் தேவை மனோநிலையே. இன்று ஆண், பெண் இரு பாலாரிடமும் பாலியல் குறைபாடுகள் எனப்படும் துரித விந்து ஸ்கலிசம் (PREMATURE EJACULATION), ஆண்மைக்குறைவு (IMPO-



TENCE), விறைப்புத் தன்மை குறைவு, உச்ச இன்பம் பெற முடியா நிலைமை - என்பவற்றிற்கு - உடலுறவின் போது ஏற்படும் மனோநிலை நிகழ்வுகள் தான் காரணம்.

உங்கள் கேள்வியில் உள்ளபடி 'ஆணுறை இன்பத்திற்குத் தடை' போன்ற தவறான கருத்துகள், பாலியல் பற்றிய சரியான விளக்கமின்மை, பாலியல் பற்றிய சரியான போதனை இல்லாமை என்பவை குடும்ப உறவின் போது மனோநிலையை சரியாக பேணுவதில்லை. உங்கள் விஷயத்தை எடுத்துக்கொண்டால், 'ஆணுறை அணிந்துள்ளேன், அதன் வழுக்கல் தன்மையால் உராய்வு உணர்ச்சி மந்தமாகிவிடும், உராய்வு உணர்ச்சிதான் இன்பத்தைத் தரும்' என்ற தவறான ஆதாரமில்லாத தகவல்கள் உங்கள் குடும்ப உறவைப் பாதிக்கலாம். இந்த மாதிரியான உங்கள் பலவீனங்களைப் பயன்படுத்தித் தான் - ஆணுறை உற்பத்தியாளர்கள் - சொரசொரப்பான STUDDED CONDOMS என்றும், வாசனை ஆணுறைகள் என்றும் வெவ்வேறு வர்ண ஆணுறைகள் என்றும் தயாரித்து கூடிய விலைகளில் விற்பனை செய்கிறார்கள். அடுத்து ஆணுறைகள் LATEX எனப்படும் செயற்கை றப்பர் போன்ற இரசாயனங்களிலிருந்து உற்பத்தியாக்கப்படுகின்றன. இவைகளை உபயோகிப்பதில் எதுவித நோய்களும் ஏற்படாது என்று தெரியப்பட்டுள்ளது. இவைகள் ஒரு சிலருக்கு அதுவும் கோடியில் ஒருத்தருக்கு ஒவ்வாமை (AL-LERGY) வகையில் பொருத்தமில்லாமல் இருக்கலாம். ஒரு முறை தொடர்ந்து பல மாதங்களுக்கு ஆணுறை அணிந்த வண்ணமே இருந்தால் பாதிப்பு ஏற்படுமோ என்னவோ, ஆனால், இம்மாதிரி எவரும் அணிவதில்லை. எனவே, ஒரு சில நிமிட நேரத்துக்கு அணிவதால் எதுவித பாதிப்பும் - உமக்கோ, மனைவிக்கோ ஏற்பட மாட்டாது.

அது சரி- கருத்தடைக்காகத்தான் ஆணுறையை அணிகிறீர்கள் என்றால் ஏன், ஆணுறைக்கு பதிலாக மற்றைய COPPER.T.IUCD என்கின்ற கருப்பையினுள் வைக்கப்படும் கருத்தடைச் சாதனம், கருத்தடை மாத்திரைகள், ஊசி மருந்துகள் என்பவற்றை உபயோகிக்கக் கூடாது? அத்துடன் - ஆணுறையை ஒரு சிறந்த கருத்தடைச் சாதனமாக வைத்தியர்கள் சிபாரிசு செய்வதில்லை. காரணம் அதை உபயோகிப்பதில் உள்ள நடைமுறை பிரச்சினைகள், கஷ்டங்கள் என்பவற்றோடு, சில பெண்களுக்கு பிற பொருள் ஒன்று தமது உறுப்புகளினுள்ளே செல்வது ஒருவித எதிர்மறை மனோநிலையை ஏற்படுத்துவதாகவும், இதனால் இயல்பான உடலுறவு பாதிக்கப்படுவதாகவும் ஆய்வுகள் கண்டறிந்துள்ளன.

**கே: பெண். வயது 32. மலம் கழிக்கும் போது மூலம் வெளியே வருகின்றது. பின்னர் அதனை உள்ளே தள்ளிவிட வேண்டியுள்ளது. எதனையும் குடித்தால், சாப்பிட்டால் மலம் கழிக்க வேண்டும் போன்ற உணர்வு ஏற்படுகிறது. மலம் கழிக்கும் உணர்வு எற்பட்டு மலம் கழித்தால் - சளி சளியாக ஏதோ வருகின்றது. பரிகாரம் கூறவும்.**

ப: உங்களுக்கு PROLAPSED HAEMORHOIDS அல்லது PROLAPSED RECTUM ஏற்பட்டிருக்கலாம். முன்னையது மூலநோய் பின்னையது- PELVIC FLOOR என்கின்ற பகுதி தளர்வடையும் போது - மலக்குடல் கீழே இறங்கி விடும்.

இது தவிர மலம் போக வேண்டும் என்ற உணர்வு, சளித்தன்மையான சுரப்பு எல்லாம் மூலநோய் காரணமாகவும் ஏற்படலாம். மற்றும் மலக்குடலின் அழற்சி, கட்டிகள் என்பவற்றாலும் ஏற்படக்கூடும். ஒரு சத்திர சிகிச்சை நிபுணரின் ஆலோசனை உங்களுக்கு அவசியம். அவர் PROCTOSCOPE என்ற சாதனம் மூலம் உங்கள் மலக்குடல் பகுதியை சோதித்து உங்கள் நோயின் தன்மையை அறிவார். கட்டிகள், அழற்சிகள் இல்லாத விடத்து, சாதாரண சத்திர சிகிச்சை மூலம், உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

**கே: பெண். வயது 14. கல்வி பயின்று கொண்டிருக்கிறேன். கடந்த மூன்று வருடங்களாகத் தலைவலி வருகின்றது. தலைவலியின் போது பார்வை மங்கலாகி**



**விடுகின்றது. எதுவும் செய்ய முடியாது, கோபம் வருகின்றது. பழைய நினைவுகள் தோன்றுகின்றன. பழிவாங்கும் உணர்வு ஏற்படுகிறது. தலைவலி ஒரு ஐந்து நிமிடம் தான் இருக்கிறது. அந்த ஐந்து நிமிடமுமே நரக வேதனைதான். என்ன செய்வது என்று ஆலோசனை கேட்கிறேன்.**

ப: உங்களுக்கு ஏற்பட்டுள்ளது MIGRAINE என்ற ஒற்றைத் தலைவலி என எண்ணுகின்றேன். என்றாலும் நீங்கள் பருவமடைய முன்னர் ஏற்பட்டதா அல்லது பருவமடைந்த பின்னர் ஏற்பட்டதா என்று எழுதவில்லை. சில வேளைகளில் பருவமடையும் காலங்களில் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்கள் ஒரு சில காலத்திற்கு இப்படியான தலைவலியைத் தரும். உணர்வுகளின் மாற்றங்கள் அநேகமாக ஹார்மோன்கள் செய்யும் குழப்பமே. எனினும், தலையில் உள்ள சில இரத்த நாளங்கள் வீங்குவதாலும் இப்படி தலைவலி ஏற்படலாம்.

கண்பார்வைக் குறைவு "கோபம் ஏற்படுதல்" பழைய நினைவுகளின் கிளறல் என்பவை மூளையில் ஏற்படும் மாற்றங்களின் பிரதிபலிப்புகளாகக் கூட இருக்கலாம். எனவே, ஒரு நரம்பு சிகிச்சை நிபுணரின் (NEU-ROLOGIST) ஆலோசனையைப் பெறுவது அவசியம். EEG, CT SCAN போன்ற பரிசோதனைகள் மூலம் உங்கள் நோயின் தன்மை அறியப்பட வேண்டும்.

**கே: வயது 29. திருமணமாகவுள்ளேன். 22வயதில் ஒரு விபத்தின் போது எனது இரு விதைகளும் பாதிக்கப்பட்டு அவை சத்திர சிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டு விட்டன. இன்ப உணர்வுகளின் போது ஆண் உறுப்பு விறைப்பு பெறுகின்றது. ஆனால், சுய இன்பத்தின் போது திருப்தி வந்தாலும், விந்து வெளியேறுவதில்லை. இதனால் எனது தாம்பத்திய வாழ்க்கை பாதிக்குமா?**

ப: உங்கள் பிரச்சினை பரிதாபமானது. விந்து அணுக்கள் உற்பத்தியாவது விதைப்பைகளில் தான். எனவே, விதைகள் அகற்றப்பட்டதால் விந்துக்கள் உருவாகவே முடியாது. விந்துக்கள் இல்லாவிடில் - கருத்தரித்தல் நடைபெற சாத்தியம் இல்லை என்பதை வருத்தத்துடன் இங்கு கூற வேண்டியுள்ளது.

ஆனால், விந்தின் ஒரு பகுதி PROSTATE சுரப்பிலிருந்து சுரக்கப்படுவதால் உணர்வின் போது விந்து போன்ற திரவம் வெளிவரலாம். ஆனால், அதில் விந்துக்கள் இல்லாததால் - கருத்தரித்தல் நடைபெறாது. குடும்ப உறவுக்கு மனோநிலையும், இடுப்பில் இருந்து வரும் நரம்புகளுமே தேவை. இவை விபத்தில் பாதிக்கப்படாததால்- ஆண் உறுப்பு விறைப்பு பெறுவதும், உறவில் திருப்தி ஏற்படுவதும் நடைபெறும். உங்கள் பிரச்சினையை திருமணத்திற்கு முன்கூட்டியே மணமகளிடம் கூறிவிடுங்கள். இதனால் தன்னை ஏமாற்றி மணந்ததாக உங்கள் மனைவி எண்ணிவிட மாட்டார். உங்களை மனதார விரும்பும் பெண் - உங்களை இந்தக் குறைபாடுடன் ஏற்றுக் கொள்வார். திருப்தியான, மகிழ்சிகரமான தாம்பத்திய வாழ்வுக்கு பாலுணர்வும், குழந்தைப் பாக்கியமும் மட்டுமே தேவை என்பதில்லை. எத்தனையோ குடும்பங்களில் MUMPS, மற்றும் சில தொற்றுக்களால் விதைகள் இருந்தாலும் விந்துக்களை உற்பத்தியாக்க இயலாத ஆண்கள், சந்தோஷமாக வாழ்க்கையை ஏற்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

குழந்தைப் பாக்கியம் இல்லாவிடிலும், ஒரு குழந்தையைத் தத்து எடுத்து உங்கள் குழந்தையாக வளர்த்தெடுக்கும் பாக்கியத்தை இறைவன் உங்களுக்கு அளித்திருக்கிறான் என்று நினைத்து - உங்கள் வருங்கால மனைவியோடு - எதையும் மறைக்காமல் கூறி - இல்வாழ்க்கையை ஆரம்பியுங்கள்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

# பசி இல்லையா?

நமது உடம்புக்கு வேண்டிய சக்தியை நாம் சாப்பிடும் உணவுதான் கொடுக்கிறது. உணவு, சக்தியாக மாறுகின்றது. எனவே, உணவு ஜீரணமாவது மிகவும் முக்கியம்.

ஆனால், சிலநேரம் நாம் சாப்பிடும் உணவு ஜீரணிக்காது வயிற்றில் தங்கி விடும். அப்போது பல கோளாறுகள் ஏற்படுகின்றன. எனவே, சாப்பிட்ட உணவு ஜீரணிக்க வேண்டியது மிகவும் முக்கியம்.

சாப்பிட்டது ஏன் ஜீரணமாவதில்லை? இதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

**அறிகுறிகள்**

சாப்பிட்ட உணவு ஜீரணமாகாத போது அது அப்படியே வயிற்றில் தங்கி விடும். வயிறு கல்லுப் போல் இருக்கும். பசி இருக்காது. வாந்தி வருவது போலிருக்கும்.

புளியேப்பம் ஏற்படும். காற்று பிரியும். வயிற்றோட்டம் வாந்தி ஏற்படக் கூடும்.

இந்த அறிகுறிகளைக் கொண்டு சாப்பிட்டது ஜீரணமாகவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

**ஏன் ஜீரணிக்கவில்லை?**

அஜீரணத்துக்கு பல காரணங்கள் இருக்கின்றன.

முக்கு முட்டச் சாப்பிடுவது ஒரு காரணம். பசியில்லாமல் சாப்பிடுவது, கண்ட நேரத்தில் சாப்பிடுவது, பொரித்த பண்டங்களை அதிகம் சாப்பிடுவது, கெட்டுப்போன உணவை சாப்பிடுவது முதலியவையே அஜீரணத்துக்கு காரணம்.

வயதானாலும் ஜீரணக் குறைவு ஏற்படும்.

**எப்படித் தடுப்பது?**

அஜீரணம் ஏற்படுவது ஏன் என்பது தெரிந்து விட்டது. இனி அந்தக் காரணங்களை நீக்க முயற்சி செய்யுங்கள்.

பசித்ததும் சாப்பிடுங்கள். சாப்பாட்டை ருசித்து சாப்பிடுங்கள். காக்கா கற்கண்டை விழுங்குவது போல விழுங்காமல், நன்கு மென்று சாப்பிடுங்கள்.

வெந்த பண்டங்களை சாப்பிடுங்கள். சூடாகச் சாப்பிடுங்கள். பொரித்த பண்டங்களை அளவோடு சாப்பிடுங்கள். அசைவத்தைக் குறைத்துக் கொண்டு, காய்கறிகள் நிறையச் சேர்த்துக் கொள்ளுங்கள்!

**பழம் சாப்பிடுங்கள்!**

சாப்பாட்டுக்கு மேல் ஏதாவது ஒரு பழம் சாப்பிடுங்கள். வாழைப்பழம் மிகவும் நல்லது. அதனால்தான் விருந்துகளில் வாழைப்பழம் வைக்கப்படுகிறது.

பழச்சாறும் ஜீரணத்தைத் தூண்டக்கூடியது. தோடம்பழச் சாறு, எலுமிச்சைச் சாறு, கரட் சாறு மிகவும் நல்லது.

தயிர் ஜீரணத்துக்கு உதவக்கூடியது. தயிர்ச்சோறு சாப்பிடுங்கள். அல்லது மோர் குடியுங்கள்.

காலையில் 30 நிமிடம் நடை போங்கள்!

**மருந்து**

எப்போதாவது அஜீரணம் ஏற்பட்டால், வயிற்றைப் பட்டினி போடுங்கள். எல்லாம் சரியாகிவிடும். தொடர்ந்து ஜீரணிக்காமல் இருந்தால், மருந்து சாப்பிட வேண்டும்.

ஜீரணத்துக்கு நல்ல மருந்துகள் இருக்கின்றன. மருத்துவரிடம் கேட்டு அந்த மருந்துகளைச் சாப்பிடுங்கள். நாட்டு மருந்துகளும் நிறைய இருக்கின்றன.

**குழந்தைகளுக்கு**

குழந்தைகளுக்கு அடிக்கடி வயிறு கெட்டுப் போகும். இதற்குக் காரணம், அஜீரணம்தான்.

குழந்தைகளுக்கு சாப்பாட்டை திணிக்கக் கூடாது. அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவுகளைக் கொடுக்க வேண்டும். முட்டைக்கோசு, பட்டாணி போன்றவற்றை அளவோடு கொடுப்பது நல்லது.

குழந்தைகளுக்கும் அஜீரணக் கோளாறுக்கு மருந்துகள் உள்ளன. வயதுக்குத் தகுந்தபடி அந்த மருந்துகளைக் கொடுத்தால் சரியாகிவிடும். மருத்துவர் கொடுக்கும் மருந்துகளையே பயன்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியை விற்கும் கனவான்கள்

மலையகத்தின் பல பகுதிகளிலும் இன்று பரவலாக விவாதிக்கப்படும் ஒரு விடயம் தான் ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசிலுக்கான பரீட்சை. இம்முறை வெளியான பரீட்சைப் பெறுபேறுகள் இரத்தினபுரி மாவட்டத்தில் மலையகக் கல்வி வளர்ச்சிக்கு ஒரு சவாலாகவே அமைந்துள்ளன.

குறிப்பாக எம்பிலிபிட்டிய, நிவித்திகல, பெல்மதுளை கல்வி வலயங்களுக்குள் வரும் தமிழ் பாடசாலைகளின் நிலைமையும், எதிர் காலமும் கேள்விக் குறிதான்.

அண்மையில் எம்பிலிப்பிட்டிய கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் ஒரு சிரேஷ்ட பாடசாலை தொடர்பாக மிகவும் இரகசிய மான முறையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டன.

2005 ஆம் ஆண்டு, மூன்றாம் ஆண்டில் படிக்கும் ஒரு மாணவியை சந்தித்து ஒரு ஆசிரியரின் முன்னிலையில் பெற்றோர்களுடன் சேர்ந்து பரீட்சித்துப் பார்த்தோம். மூன்றாம் ஆண்டில் படிக்கும் இந்த மாணவிக்கு அரிச்சுவடி தெரியவில்லை. முதலாம் ஆண்டு பாடப் புத்தகத்தை வாசிக்கமுடியவில்லை.

இந்த மாணவியின் தந்தை பாடசாலையில் இருந்து சற்று தூரத்தில் உள்ள ஒரு தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிகின்றார். தாயாரும் இல்லை. பிள்ளையின் தந்தை தனி ஒருவராக உழைத்து நான்கு பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும். அவருடைய மாத வருமானமோ ஆக மூவாயிரம் மட்டுமே.

இப்படியான நிலையில் மாதா மாதம் கஷ்டப்பட்டு பிள்ளைகளுக்கான போர்டிங் பீஸ் 4500/= ருபா கட்ட வேண்டும். எப்படியோ பிள்ளைகளைப் படிப்பிக்கவைத்து ஆளாக்கிவிட வேண்டும் என்ற நோக்கத்துடனேயே அந்தத் தந்தை நகரத்தில் இருக்கும் இந்த குறிப்பிட்ட பாடசாலையில் தனது பிள்ளைகளை சேர்த்து விட்டுள்ளார்.

ஆனால் இந்த பாடசாலையில் ஏழைப் பெற்றோர்களின் கனவுகள் சிதறடிக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் ஆண்டில் படிக்கும் அந்த மாணவிக்கு முதலாம் ஆண்டுக்கான பாடப் புத்தகத்தை வாசிக்க முடியவில்லை. ஆனா, ஆவன்னா கூடத் தெரியவில்லை. இதில் ஒரு புதுமை என்னவென்றால் அந்த மாணவி இம்முறை நான்காம் ஆண்டுக்கு வகுப்பேற்றம் செய்யப்பட்டுள்ளார். முதலாம் ஆண்டுக்கான அடிப்படைக் கல்வித் தகைமைகளே இல்லாத இம்மாணவி நான்காம் ஆண்டுக்கு வகுப்பேற்றப்பட்டது எப்படி?

மூன்றாம் ஆண்டுக்கு ஒரு ஆசிரியர் இல்லையா? அந்த ஆசிரியர் தனது வகுப்பு மாணவர்கள் தொடர்பாக அக்கறை காட்டுவது இல்லையா இந்த மாணவர்களுக்கு எந்த அடிப்படையில் மதிப்பீட்டு அல்லது கணிப்பீட்டு புள்ளிகள் வழங்கப்படுகின்றன? மாணவர்களின் கல்வி நிலை தெரியாத வகுப்பாசிரியர்கள் கட்டாய வகுப்பேற்றம் என்ற பெயரில் தன்னிடம் இருந்து தொலைந்தால் போதும் என வகுப்பேற்றம் செய்து விடுகின்றனர்.

வகுப்பாசிரியர்கள் தான் இப்படி என்றால் பிரிவுத் தலைவர்கள், உப அதிபர்கள், அதற்கும் மேல் ஒரு அதிபர் இவர்கள் எல்லாம் என்ன மட்டை அடித்துக் கொண்டா இருக்கின்றனர்.?

லீவு எடுப்பதிலும், சம்பளம் வாங்குவதிலும் காட்டும் ஆர்வத்தை பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் காட்டவில்லையே என்பது தான் வேதனை. வருடாவருடம் இப்படிக் கழித்து விடப்படும் மாணவர்கள்தான் ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப் பரீட்சையில் சிக்கிக் கொண்டு திக்குமுக்காடுகின்றனர்.

வாசிப்புத் திறனும், மொழி அறிவும் மிகவும் அவசியம். இவை இரண்டுமே இல்லாதவர்கள் தான் இந்த வகுப்பில் முடக்கி வைக்கப்படுகின்றனர். கட்டாய வகுப்பேற்றம் என்று தட்டிக் கழித்து பலவந்தமாக ஆண்டு ஐந்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்திவாரம் இல்லாமல் கட்டப்படும் கட்டடம் போல இவர்களது கல்வி வளர்ச்சியும் ஆட்டம் கண்டுள்ளது. இவர்கள் மத்தியில் துரதிஷ்டவசமாக சில படிக்கக் கூடிய மாணவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். அதனை இல்லை என்று சொல்லிவிட முடியாது. அவர்களும் கூட அப்பிள்ளைகளின் பெற்றோரின் அக்கறையினால் தேறியவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

ஐந்தாம் ஆண்டில் என்ன நடக்கின்றது? ஐந்தில் வளையாதது எப்படி ஐம்பதில் வளையும்? இந்த உவமை மொழி இங்கே சரியாகின்றது.

முதலாம் ஆண்டிலிருந்தே மொழியறிவும், வாசிப்பறிவும் ஊட்டப்படாததினால் ஐந்தாம் ஆண்டு பாடங்களை இம்மாணவர்களால் ஜீரணிக்க முடியவில்லை என்பது தான் உண்மை.

புலமைப் பரீட்சைக்கு மாணவர்களை அனுப்பாவிட்டால் பெற்றோர் கோபித்துக் கொள்வார்கள் என்பதற்காக எல்லாப் பிள்ளைகளையுமே புலமைப் பரீட்சைக்கு அனுப்பி விடுகின்றனர்.

இவ்வாறு எல்லாப் பிள்ளைகளையும் பரீட்சைக்கு அனுப்புவது ஏன்?

ஒன்று பெற்றோரின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாத நிலை. உங்களது பிள்ளைக்கு வாசிக்க முடியவில்லை. அரிச்சுவடி கூட தெரியவில்லை.எப்படி உங்கள் பிள்ளையை பரீட்சைக்கு அனுப்புவது? இதனால் தான் படிக்கக் கூடிய பிள்ளைகளை மட்டும் தெரிவு செய்து பரீட்சைக்கு அனுப்புகிறோம் என்று கூறும் துணிவும், நேர்மையும் வகுப்பாசிரியர்களுக்கோ அல்லது அதிபருக்கோ கிடையாது.

ஏன் என்றால் எனது பிள்ளைக்கு வாசிக்க முடியவில்லை, அரிச்சுவடி தெரியவில்லை என்பதை ஐந்து வருடங்களுக்குப் பின்னர் இப்போது தான் கண்டு பிடித்தீர்களா? இந்த ஐந்து வருடங்களாக இப்படி ஒரு பிள்ளை இருப்பதே உங்களுக்குத் தெரியாதா? இந்த வகுப்பாசிரியர் என்ன மட்டை அடித்துக் கொண்டா சம்பளம் வாங்கினார்?ஒரு பிள்ளையின் கல்வித் தகைமை தெரியாமல் எப்படி ஐந்தாம் வகுப்புக்கு வகுப்பேற்றி உள்ளீர்கள்? இந்தப் பிள்ளையின் எதிர்காலத்திற்கு யார் பொறுப்பு? உங்களை எல்லாம் நம்பித்தானே எங்கள் பிள்ளைகளை இங்கு அனுப்பினோம் எங்கள் பிள்ளைகளை குட்டிச்சுவராக்கிவிட்டீர்களே! இப்படி பெற்றோர் கேட்கும் கேள்விகளுக்கு இந்த அதிபரால் பதில் சொல்ல முடியாது.

இரண்டாவது, ஆசிரியர்களுக்கான மாதாந்த மேலதிக வருமானம் இல்லாது போய்விடும் என்ற பயம்.

இப்பொழுது புலமைப் பரீட்சைக்கென விசேட வகுப்பு நடத்துவதற்கு150 ருபாய் முதல் 200 ருபாய் வரை ஒவ்வொரு பிள்ளையிடமும் அறவிடுகின்றனர்.

தெரிவு செய்யப்பட்ட 20 அல்லது 25 மாணவர்களுக்கு மட்டும் விசேட வகுப்புகளை நடத்தினால் ஆசிரியர்களுக்கு மொத்தமாகக் கிடைக்கும் டியூசன் பீஸ் கிடைக்காமல் போய் விடும். வருமானத்துக்கு அடி விழும். இந்த பயம் காரணமாகவும், ஆசிரியர்களும் அதிபர்களும் பெற்றோரிடம் உண்மையைக் கூறுவதில்லை.

இவை எல்லாவற்றையும் உற்று நோக்கும் போது இந்த அதிபர்களும் ஆசிரியர்களும் தம்மிடம் கல்வி கற்கும் மாணவர்களைப் பற்றியோ அல்லது அம்மாணவர்களின் எதிர்காலம் பற்றியோ சிறிதும் சிந்திப்பதில்லை.முற்று முழுதாகக் கல்வியை ஒரு விற்பனைப் பொருளாக்கிவிட்டனர்.

ஆங்கிலத்தில் கூறுவார்கள் "MOTHER IS A FIRST TEACHER AND THE TEACHER IS A SECOND MOTHER" என்று. அதாவது 'தாயானவள் முதல் ஆசிரியை. ஆசிரியையானவள் இரண்டாவது தாய்'. ஆனால், இன்று எந்தப் பாடசாலையிலும் இதனைக் காணமுடிவதில்லை.

இந்த நிலைமை தொடர்ந்தால் இந்த அதிபர்களும், ஆசிரியர்களுமே மலையகக் கல்வியை குழி தோண்டிப் புதைத்துவிடுவார்கள் என்பது உறுதி.



## டேஸ்ட்கடை தணிகாசலம்



## மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

# இறந்தவனைச் சுமந்தவனும் இறந்துவிட்டான்

'இறந்தவனைச் சுமந்தவனும் இறந்திட்டான்-அதை இருப்பவனும் எண்ணிப் பார்க்க மறந்திட்டான்...' வானொலியில் ஒலித்த இந்தப் பாடலை மிகவும் அவதானமாகக் கேட்டுக் கொண்டே சாய் மனையில் சரிந்து படுத்தார் தணிகாசலம் அண்ணன். வன்னிக்குச் சென்று வந்ததால் அவருக்கும் ஒரே அலுப்பாக இருந்தது. அதனால் அன்று கடையையும் திறக்காமல் வீட்டில் ஓய்வாக இருந்தார். அப்போது சிவாவும், திலகாவும் வந்தனர்.

"வணக்கம் அண்ணன், மன்னிக்கணும் உங்களோட அமைதியை குழப்பி விட்டோம் போல இருக்கு"

"வணக்கம் வாங்க, வாங்க இங்கு நாட்டில் எத்தனையோ பேருடைய அமைதி குழம்பிப் போய் சித்தப்பிரமை பிடித்துள்ளது. எனது நித்திரையை குழப்பியது ஒன்றும் பெரிதில்லை. இப்படி உட்காருங்கள்." என எழுந்தார் தணி அண்ணன்.

"உண்மை தாங்க அண்ணன், எல்லாம் நாம் தமிழர்களாகப் பிறந்துவிட்ட குற்றம் என்று தானே நினைக்கின்றார்கள்"

"சிவா சொல்லுவதும் சரிதான். இரவு தான் தம்பி வன்னியில் இருந்து திரும்பினேன். ஒரே அலுப்பாக இருக்கு. உடல் களைப்பு மட்டும் அல்ல, உள்ளமும் களைப்படைந்து விட்டது"

"என்னங்க அண்ணே, மலையே சாய்ந்தாலும் மனம் தளராத நீங்க இப்படி சோர்ந்து விடலாமா?"

"என்ன செய்வது சிவா, அந்த மாமனிதர் ஜோசப் ஐயாவின் மரணத்தை இன்னும் ஜீரணிக்க முடியவில்லை. அங்கு திரண்டிருந்த லட்சோபலட்ச மக்களின் கதறல்கள் இன்னும் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன."

"ஆமாங்க அண்ணே நாங்க சென்ற முறை கல்விச்சுற்றுலாவின் போது நாடாளுமன்றம் சென்றிருந்த போது அந்த மனிதரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அன்று அவர் எங்கள் ஒவ்வொருவருடனும் எவ்வளவு அன்பாகப் பேசினார். எங்களைப் பற்றி அக்கறையுடன் விசாரித்தார். அவை எல்லாம் இன்னும் பசுமையாக பதிந்து விட்டன" என்று பழையதை நினைவு படுத்தினாள் திலகா.

"நல்லவர்களை இறைவன் விரைவாக அழைத்துக் கொள்வான் என்பார்கள். அதன் படி புனிதர் யேசு அவதரித்த அதே வேளையில், அவரது திருக்கோயிலிலேயே இந்த மாமனிதரின் உயிரும் பலி கொள்ளப்பட்டதே! அது தான் கொடுமையிலும் கொடுமை. தம்பி"

"அண்ணன் நம்மலையகத்தில் இருந்து பல ஆயிரம் கணக்கானவர்கள் மரணச் சடங்குகளில் கலந்து கொண்டனர். இது ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தி உள்ளது இல்லையா?"



"உண்மைதான் தம்பி, அதைவிட ஒரு விசேடம் என்னவென்றால் நம் மலையகத் தலைவர்களான சந்திரசேகரன், ஆறுமுகன் தொண்டமான், மனோ கணேசன் ஆகிய மூவரும் ஒட்டு மொத்தமாக வந்து கலந்து கொண்டது தமிழர்களின்-குறிப்பாக மலையகத் தமிழர்களின்-சரித்திரத்தில் புது ஒரு அத்தியாயத்தை உருவாக்கிவிட்டது என்று தான் சொல்ல வேண்டும்."

"அதுவும் சரி தான் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் வன்னிக்குப் போய் தமிழ் தலைமைகள் அனைத்தும் ஒன்றுபட்டு செயல்படுவோம். பொது விடயங்களில் ஒரே குடையின் கீழ் அணி திரள்வோம் என்று கூறிவிட்டு வந்தார் இல்லையா?"

"சரியாகத்தான் சொன்னீங்க. வடக்கு கிழக்கு தெற்கு என்று பாராமல் இந்த சுனாமி எப்படி எல்லோரையும் ஒன்றுபடச் செய்ததோ அப்படியே நம்ம ஜோசப் ஐயாவும் நம்ம தலைவர்களை ஒன்றுபட வைத்துவிட்டார் போல இருக்கு"

"ஆமாம் திலகா, இந்தப் பாட்டைக் கேட்டீங்களா, 'இறந்தவனை சுமந்தவனும் இறந்திட்டான் அதை இருப்பவனும் எண்ணிப்பார்க்க மறந்திட்டான்' என்று வாழ்க்கையின் தத்துவத்தை அந்த வரிகளில் எவ்வளவு அழகாக கூறியுள்ளார்."

"ஆமாங்க அண்ணன் நம்ம வாழ்க்கை ஒன்றும் நிரந்தரமானது அல்ல. பிறப்பவர் எல்லோரும் என்றோ ஒரு நாள் இறப்பது உறுதி. இருக்கும் அந்தக் கொஞ்சக் காலத்தில்ஏன் போட்டியும் பொறாமையும். நான் பெரியவன், அவன் யார், இவன் என்ன கொம்போ என்று போட்டி போடுவதில் எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை"

"சிவா நீ சொல்வது நூற்றுக்கு நூறு சரி. நம்ம தலைவர்கள் சுடலை ஞானம் பெற்றது போல பேப்பர்களிலும், மேடைகளிலும் முழக்கம் செய்து விட்டு மூலைகளில் முடங்கிவிடக் கூடாது. இவர்களுடைய ஒற்றுமை உணர்வையும், ஐக்கிய உணர்வையும் செயலிலும் காட்ட வேண்டும்"

"ஆமாம் இப்போது உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் வரப் போகின்றன. அந்தத் தேர்தலின் போது நம்ம தலைவர்கள் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தட்டும். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது போல் சிறுபான்மைத் தலைவர்களும் ஒன்றுபட்டால் பெரிய சாதனைகளை ஏற்படுத்த முடியும். இதனை நமது தலைவர்கள் ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு செயல்பட வேண்டும். அது தான் நாட்டுக்கும் நல்லது நமக்கும் நல்லது இதை நம் தலைவர்கள் செயலில் காட்டட்டும்" என அனைவருக்கும் விடை கொடுத்தார் தணி அண்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் போர்!



ஒரு நாட்டில் ஒரு அரசன் இருந்தான். அவன் நாடு பிடிக்கும் ஆசைகொண்டவன். அதனால் அவனிடம் போர் வெறி அதிகமாக இருந்தது.

போரிட்டு, அக்கம் பக்கத்து நாடுகளைப் பிடித்துவிட்டான். ஒரு முறை அதிக தூரமுள்ள ஒரு நாட்டைப் பிடிக்கப் புறப்பட்டான். பயங்கரப் போர் மூண்டது. இருபுறமும் பலத்த சேதம். பல நாள் போர் நீடித்தது.

திடீர் என்று அந்த நாட்டு படைகளின் கை ஓங்கியது.

அரசன் பின் வாங்க நேரிட்டது. அவனது படைகள் சிதறி ஓடின. அரசன் தனியே ஓடிவந்தான். ஓடி ஓடி களைத்து விட்டான். கடுமையான தண்ணீர் தாகம்.

அது ஒரு காடு. அங்கே தண்ணீர் தேடி அலைந்தான். கிடைக்கவில்லை. தாகத்தில் அவனது உயிரே போய்விடும் போலிருந்தது.

அப்போது எதிரில் ஒரு முனிவர் வந்தார். அவரது கமண்டலத்தில் தண்ணீர் இருந்தது.

''முனிவர் பெருமானே! எனக்கு கடுமையான தாகம். உயிர் போய்விடும் போலிருக்கிறது. ஒரு வாய் தண்ணீர் கொடுங்கள்'' என்று அரசன் கேட்டான்.

''தண்ணீர் தந்தால், எனக்கு என்ன கொடுப்பாய்?'' என்று முனிவர் கேட்டார்.

''எனது நாட்டையே தருகிறேன்''என்றான், அரசன்.


''உன் நாட்டின் மதிப்பு ஒரு வாய்த் தண்ணீர் தானா? அந்த நாட்டை வைத்துக் கொண்டா அடுத்த நாடுகளைப் பிடிக்கப் போர் புரிகிறாய்? போரில் எவ்வளவு இரத்தம் தண்ணீராக ஓடுகிறது'' என்று முனிவர் சொன்னார்.

அப்போதுதான் அரசன் தனது தவறை உணர்ந்தான். ''முனிவர் பெருமானே! இனி நான் எந்த நாட்டோடும் போர் புரியமாட்டேன்'' என்று, இடுப்பிலிருந்த வாளை எடுத்துக் கீழே போட்டான். முனிவர் அவனுக்கு தண்ணீர் கொடுத்தார்!

# சிறுவர் பக்கம்



கே. சோமா
சிதம்பரம் முன்பள்ளி
கறுக்காய்த்தீவு, பூநகரி



கே. நதியா
சித்தன் குறிச்சி
பூநகரி




த. கீர்த்தனா
மன்னார் அடம்பன் மத்திய ம.வி
தரம் 07.



த. சசிகரன்
ஞானிமடம்
பூநகரி



க. சர்மினி
தரம் 11
அக்கராயன் ம. வி



அ. தமலிகா
இரணைப்பாலை
முல்லைத்தீவு



ம. உதயகலா
தரம் -6
கிளி/ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை



ம. சுகந்தினி
ஜயந்திநகர்
கிளிநொச்சி

## பொது அறிவு

- உலகிலேயே மிகநீளமான புகையிரதப் பாதை விளாடிவெஸ்டொக்கிலிருந்து மொஸ்கோவரையுள்ள குறுக்குத் தண்டவாளப்பாதை. இது ரஷ்யாவிலுள்ளது. அதன் நீளம் 9332 கி.மீ.
- உலகில் மிகவும் உயரமான மலை இமயமலை. அதன் உயரம்8848 மீற்றர். உலகில் மிக நீளமான மலை அந்தீஸ். அதன் நீளம், 724 கிலோ மீற்றர்.
- ஆபிரிக்காவின் சாம்பசி நதியில் விக்டோரியா நீர் வீழ்ச்சியுள்ளது. டேவிட் லிவிங்ஸ்ரன் என்ற பிரதேசஆராய்ச்சியாளர் 1855 இல் இந்த நீர் வீழ்ச்சிக்கு விக்டோரியா என்று பெயரிட்டார்.
- பொலிவியா என்ற நாட்டின் தலை நகரமான லாபாஸ் LAPAS உலகிலேயே மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள தலை நகரமாகும். இது அந்தீஸ் மலையில் 6489 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது.

இ. ராதிகா
தர்மபுரம்.

## உலக நாடுகளின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நிர்வகிக்கப்படும் அமைப்புக்கள்

- சர்வதேசஅணுசக்தி அமைப்பு-(IAEA). தலைமையகம் -அவுஸ்திரேலியா
- ஐ.நா கல்வி அறிவியல் கலாசார அமைப்பு (UNESCO) தலைமையகம்- பாரிஸ்
- உணவுமற்றும் விவசாயஅமைப்பு- தலைமையகம்- இத்தாலி(ரோம்)
- சர்வதேசவிமான போக்குவரத்து அமைப்பு -(ICAO)
- உலக வணிக அமைப்பு- (WTO) தலைமையகம்- சுவிற்சர்லாந்து
- உலக அறிவாண்மை நிதிக்கழகம்-(WPO) தலைமையகம்- சுவிற்சர் லாந்து
- சர்வதேசவளர்ச்சி வங்கி- (IBRD) தலைமையகம்- அமெரிக்கா
- சர்வதேசநிதி நிறுவனம்- (IMF) தலைமையகம் - நியூயோர்க்

ஜெ. சுஜிதா
கிளி/மத்திய கல்லூரி, கலைப்பிரிவு




## எனது பாடசாலை...

- எனது பாடசாலையின் பெயர்- மு/அளம்பில். றோ.க.
- எனது பாடசாலை அதிபரின் பெயர்- திரு. நேவிற் ஜீவராஜா
- எனது வகுப்பாசிரியரின் பெயர்- திரு. ஜீவரட்ணம்.
- எனது பாடசாலையில் 450 மாணவர்கள் உள்ளனர்.
- எனது உயிர் நண்பர்கள்- வசந்தன், செல்வா, விஜயகுமார், பிரகாஸ், கபிலன், றஜீவன், வாணி.
- எனக்குப் பிடித்த பாடம்- தமிழ், விவசாயம், சமூகக்கல்வி.
- எனக்கு பிடித்த விளையாட்டு- கிறிக்கெட்.
- எனக்கு எல்லா ஆசிரியர்களையும் பிடிக்கும்.
- எனது பாடசாலை மிகவும் அழகானது.

இராமசாமி றமேஸ்
தரம் 10, மு/அளம்பில்.றோ.க.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்சுவைக் கதம்பம்

ஆக்கம்: ஜூலியட்

## பச்சைநிறக் கண் அழகி




அண்மையில் சீனாவின் உல்லாசத்தீவான ஹய்னானில் இடம்பெற்ற இவ்வாண்டிற்கான உலக அழகிப்போட்டியில் (Miss World 2005) 21 வயதுடைய ஐஸ்லாந்து அழகி உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தான் உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை தெரிந்து கொண்டதும் ஐஸ்லாந்து அழகியான Vnnur Birna Vilhjalmsdottir அதிர்ச்சிக்குள்ளானார். உலக அழகி 2005 என பொறிக்கப்பட்ட பட்டை அவருக்கு அணிவிக்கப்பட்ட போது கண்களில் இருந்து பெருக் கெடுத்த ஆனந்தக் கண்ணீரைக் கட்டப்படுத்த அவரால் முடியாது போயிற்று.

முன்னாள் உலக அழகிகள் ஒன்பதுபேரைக் கொண்ட குழுவொன்றே இந்தப் போட்டியில் கலந்து கொண்ட 100 இறுதிப் போட்டியாளர்கள் மத்தியில் இருந்து இவரை உலக அழகியாகத் தேர்ந் தெடுத்தது. உலகெங்கும் பரந்து வாழும் தொலைக்காட்சிப் பார்வையாளர்களே இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட இந்த 100 அழகிகளையும் தேர்ந்தெடுத்திருந்தனர். 2005 ஆம் ஆண்டுக்கான உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஐஸ்லாந்து அழகி ஒரு சட்டத் துறை மாணவி மட்டுமல்லாது பெண் பொலீஸாகவும் பணியாற்றி வருகிறார்.

இவரின் தாயார் 1983 ஆம் ஆண்டு ஐஸ்லாந்து அழகியாக வெற்றி நடை போட்டவர்.

தனது தாயாரின் ஆலோசனைக்கு இணங்கவே இந்தப் போட்டியில் கலந்து கொண்டு தான் வெற்றி பெற்றுள்ளதாக கூறியிருக்கிறார் இந்த அழகி. அத்துடன் தனது வெற்றிக் களிப்பின் போது தனது தாயாருக்கு நன்றி தெரிவிக்கவும் அவர் மறக்கவில்லை.

''எனக்குப் பெரும் அதிர்ச்சியாக இருக்கிறது. நான் விறைத்துப் போய் நிற்கிறேன்''- இப்படித் தெரிவித்த இந்த பச்சைநிறக் கண்ணழகி தனது வெற்றி பற்றி மேலும் குறிப்பிடுகையில்,

''இங்கே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் எனது தாயார் எனக்கு ஆலோசனை கூறினார். அது பயனளித் துள்ளது- நான் அழகு ராணியாக முடிசூடுவதைப் பார்க்க அவர் இங்கே வந்திருப்பது எனக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்று சொல்லி இருக்கிறார்.

உலக அழகி Vilhjalmsdottir தான் ஒரு நல்லெண்ணத் தூதுவராக செயற்படப் போவதாகவும் சிறுவர் நலனைக் கருத்தில் கொண்ட பணிக்கு நிதிசேகரிக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் 'மாடலிங்' மற்றும் திரைப்படங்களில் நடிப்பதற்கான பல ஒப்பந்தங்கள் தன்னைத் தேடி வரலாம் என்றும் இவர் எதிர்பார்க்கிறார்.




## தன் இனத் திருமணத்தை அங்கீகரித்தது பிரிட்டன்

பிரிட்டனில் பதினான்கு பேரில் ஒருவர் ஆண் அல்லது பெண் தன்னினச் சேர்க்கையாளர் என பிரிட்டிஷ் அரசாங்கம் சேகரித்த புள்ளிவிவரம் ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. அதாவது பிரிட்டனின் சனத்தொகையில் ஆறு வீதமானோர் தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டுள்ளனர் என்பதே இந்தக் கணக்கெடுப்பின் முடிவாகும்.

மணவாழ்க்கை சம்பந்தமாக பிரிட்டன் புதிய சட்டம் ஒன்றை அமல்படுத்தத் தொடங்கி இருக்கிறது. இந்தச் சட்டம் ஆண் ஆணொருவரையும் பெண் பெண்ணொருவரையும் மணம் செய்து வாழ்க்கை நடத்த அனுமதி அளிக்கிறது. ஏனைய சாதாரண தம்பதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வரி, ஓய்வூதியம், சொத்துரிமை போன்ற சகல வசதிகளும் இந்த சட்டத்தின் மூலம் இவர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளது.

இவ்வாறான வசதிகள் வழங்கப்படும் போது ஏற்படக்கூடிய சிக்கல்கள் சம்பந்தமாக ஆராய்ந்து பரிகாரம் தேடுவதற்காகத் தான் மேற்படி புள்ளி விவரம் சேகரிக்கப் பட்டது.

## நடிகையின் விநோத ஆசை!




பெண்கள், நகைக்கு ஆசைப்படுவார்கள். ஹொலிவுட் கவர்ச்சி நடிகையரன கேமருன் டயஸின் (33 வயது) ஆசைவித்தியாசமானது. வித்விதமான சப்பாத்து, செருப்பு அணிவதை விரும்புகிறார்.

இவர், 'அவளது ஷூ' என்ற படத்தில் நடிக்கிறார். ''எனக்கு புதுரக செருப்பு, ஷூ என்றால் அலாதிப் பிரியம். எனது வீட்டில் எத்தனை ஷூக்கள் இ நக்கின்றன என்று எனக்கே தெரி நு. எங்கேயாவது வித்திய சமான காலணிகளை பார்த்தாலும் உடனே வாங்கிவிடுவேன்'' என்கிறார் கேமருன்.

## தமிழ் பேசும் கிளியோபாட்ரா!

ஹொலிவுட்டில் வெற்றி பெற்ற 'பிளேட் 2' என்ற ஆங்கிலப் படத்தை 'மிருக மனிதன்' என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றம் செய்து வெளியிடப் போகிறார்கள். இதில், ஹொலிவுட்டின் கிளியோபாட்ரா என அழைக்கப்படும் கவர்ச்சிக் குயில் லினோ, தமிழ் பேசுகிறார்!

இப்படத்தில் லினோ, பாதி மிருகமாகவும், பாதி பெண்ணாகவும் நடிக்கிறார். தனது ஆங்கில உரையாடல்களை தானே தமிழில் பேசஇருக்கிறார்!



## பொலீஸ் வலையில் இளவரசர் சாள்ஸ்



இளவரசி டயான ஆம் ஆண்டு பாரிஸில் இடம் பெற்ற கார் விபத்தொன்றில் பலிய து சம்பந்தமாக அவரது முன்னாள் கணவரான இளவரசர் சாள்ஸை பி டிஷ் பொலீஸார் விசாரணக்குட்படுத்தினர்.

டயானாவின் மரணத்துக்குக் காரணமான சம்பவங்கள் தொடர்பாகவே இளவரசர் சாள்ஸை பொலீஸார் துளைத்தெடுத்தனர் என பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'தி சண்டே டைம்ஸ்'- செய்தி வெளியிட்டுள்ளது. மத்திய லண்டனில் அமைந்துள்ள இளவரசரின் மாளிகையிலேயே இந்த விசாரணைகள் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

டயானாவின் விபத்தின் பின்னணியில் பல இரகசியங்கள் மறைந்துள்ளதாக பிரிட்டிஷ் பொலீஸார் நம்புவதாகத் தெரிவித்துள்ள குறிப்பிட்ட பத்திரிகை அரசமரணவிசாரணை அதிகாரியான 'மைக்கேல் பேகெஸ்' இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் விசாரணைக்கான உத்தரவை விடுத்திருந்தார் என்றும் ''சண்டே டைம்ஸ்'' மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனஅழுத்தம்

முல்லை இ.கஜேந்திரா
பாரிஸிருந்து

பாரிஸில் தமிழர்கள் அதிகமாக வாழும் இடம் லா சப்பல். அங்கு போனால் ஊர் நினைவுகள் நெஞ்சைக் கரைக்கும்.

வேலை முடிந்ததும் வீடு வந்து சூடாக தேநீர் அருந்தி விட்டு நண்பர்களுடன் அரட்டை அடிப்பதற்காக நகர்ந்தேன் லா சப்பலுக்கு. வழமையை விட அன்று மக்கள் அதிகமாகவே கூடி இருந்தார்கள்.

பொலிஸ் வாகனங்கள் தாறுமாறாக ஓடிக் கொண்டிருந்தன. ஏதோ பிரச்சினை என்று ஊகிக்க முன்னர் குறுக்கிட்ட வார்த்தைகள் என் காதை அடைத்தன. "யாரோ ஒருவன் வெட்டிப் போட்டானாம். ஒருவன் இறந்திட்டான். மற்றவனுக்குப் படுகாயம்" என்ற குரல்கள் என்னை பதற்றமடைய வைத்தன.

இருந்தாலும் ஒருக்கா அவ்விடத்துக்குப் போய்ப் பார்ப்போம் என்று என் மனம் உறுத்தியது. மெல்ல நகர்ந்து மக்களோடு மக்களாய் சென்று பார்த்தேன். வெட்டினவனின் முகம் தெரியவில்லை. பொலிஸார் பிடித்துக் கொண்டிருந்தார்கள். வாகனத்தில் ஏற்றுவதற்கு தூக்கினார்கள். இவனா இந்தக் கொலையைச் செய்தான் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. என்னையும் கண்டு விட்டான் அவன். எனக்கு நன்கு அறிமுகமானவன். என்னைப் பார்த்து அழுது கொண்டே பொலிஸ் வாகனத்தில் ஏறினான். அவன்தான் கஜன்.

பக்கத்தில் நின்ற பெரியவர்கள் எல்லோரும் அவனை வாய்க்கு வந்தபடி பேசிக் கொண்டிருந்தார்கள். "நம்ம ஆட்கள் திருந்த மாட்டார்கள். நாடு விட்டு நாடு வந்தும் புத்தி வரல்ல இவனுக்கு".

அன்று முழுவதும் அவனின் சிந்தனையாகவே இருந்தது. அவன் ஏன் இப்படிச் செய்தான் என்று என்னையே வினாவிக் கொண்டிருந்தேன்.

கஜன் என்னோடு பழகிய நாட்கள் இனிமையானவை. அவனது அறிமுகம் கிடைத்தது கொழும்பு சிறையில்தான். என்னையும் புலி என்ற சந்தேகத்தின் பேரில் பிடித்துக் கொண்டு வந்து கொழும்பில் தடுப்புக் காவலில் வைத்திருந்தார்கள்.

அன்று இரவு தான் கஜனையும் நான் இருந்த கூண்டுக்குள் கொண்டு வந்து அடைத்தார்கள். கஜன் தன்நிலை கூறினான். "வெளிநாடு போவதற்கு வந்தேன் கொழும்புக்கு. இவர்கள் என்னைப் புலி என்று பிடித்து விட்டார்கள்" என்றான். நானும் அப்படித்தான் என்றேன்.

கஜன் தன் குடும்பத்தைப் பற்றி சொல்லிக் கொண்டே இருந்தான். கண்களில் நீர் அரும்பிக் கொண்டிருந்தது. "வீட்டில் கஷ்டம். நல்லாய்ப் படிப்பேன். அப்பாவுக்கு வருத்தம். அக்காமார் இரண்டு பேர் இருக்கிறார்கள். கூடவே தங்கச்சி. இவர்களை எல்லாம் கரையேற்ற வேண்டும் என்றுதான் அப்பா கடன்பட்டு வெளிநாடு அனுப்புவதற்கு என்னைக் கூட்டிட்டு வந்தார்" அப்பொழுது இருவரையும் பொலிஸ்காரர்கள் வந்து கூட்டிக் கெண்டு போய் "இதில கையெழுத்து வையுங்கள்" என்றனர். பயத்தின் அகோரத்திலே கையெழுத்து வைத்து விட்டு நின்றோம். கஜன் அழுது கொண்டே இருந்தான்.

அவர்கள் எங்களை போகும்படி கூறினார்கள். கஜன் மெதுவாக நகர்ந்தான். "விதி இருந்தால் மீண்டும் சந்திப்போம்" என்றான்.

சில வாரங்கள் கழிந்தன. நான் பாரிஸ் வந்து சேர்ந்தேன். கஜனையும் பாரிஸில் பார்த்தபோது அளவு கடந்த சந்தோஷம் எனக்கு. ஆனால், அவனின் முகம் வாடி இருந்தது. தனது கஷ்டங்களை எனக்கு காட்டிக் கொள்ளாமல் புன்னகையுடன் வரவேற்று நலம் விசாரித்தான். 'அப்படியே இருக்கிறான் வெளிநாடு வந்தும்' என்று எனக்குள் ஒரு வித சந்தோஷம்.

இப்படியே நான் அவனின் அறிமுகங்களை நினைத்து முடிப்பதற்குள் கஜனைப் போய் பார்க்க வேண்டும் என்ற அவா ஏற்பட்டது. நண்பன் துசியையும் துணைக்குக் கூட்டிக்கொண்டு பாரிஸில் பல சிறைக்கூடங்களில் இரண்டு நாட்களாகத் தேடியும் அவன் இருக்கும் இடம் அறியவில்லை. மூன்றாவது நாள் காவலில் வைக்கப்பட்டிருந்த இடத்தைக் கண்டு பிடிக்க முடிந்தது. துசியை நான் வீட்டுக்கு அனுப்பி விட்டு அவனுடன் கதைப்பதற்காகக் காத்திருந்தேன். இரண்டு மணித்தியாலம் கழித்து வந்தான் கஜன். வாழ்க்கையையே பறி கொடுத்தவன் போல் அவன் இருந்தான். என்னைக் கண்டதும் அழத் தொடங்கி விட்டான். ஒருவாறு தேற்றிக் கொண்டு "ஏன் இப்படிச் செய்தாய்?" என்று கேட்டேன்.

கஜன் சற்றே அமைதியாக இருந்தான். "எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டதடா" என்று இழுத்தான்.

"அதற்கு இப்படியா செய்கிறது?" என்றேன்.

"நான்பட்ட வேதனைகள் உனக்குத் தெரியுமா?" என்றான் உரத்த குரலில். பாரிஸில் தனது வாழ்க்கையை அவன் மெதுமெதுவாக சொல்லத் தொடங்கினான்.

"நான் இங்கு வந்த போது எவருமே எனக்கு இல்லை. இந்த குளிருக்குள்ள மூன்று நாள் றோட்டிலதான் படுத்தனான். ஊரில என்றால் இப்படியா இருந்திருப்பேன்? அனாதையாய் யாருடைய உதவியுமின்றி நடைபிணமாய் சாப்பாடும் இல்லை. எத்தனை நாள் இந்தக் கஷ்டம் என்று உனக்குத் தெரியுமா? இதுதான் வெளிநாடு. மனவேதனையைத் தாங்க முடியவில்லை. இங்கு யாரும் உதவி செய்கிறார்கள் இல்லை. பிறகு, எங்கட ஊர் றஞ்சனைத் தற்செயலாகக் கண்டேன். அவன்தான் இருக்க இடம் தந்தான். அவனுக்கும் கஷ்டம் தான். அவனைப் பார்க்கவே பாவமாய் இருந்தது. இரவு இரண்டு மணிக்குத்தான் வேலை முடிந்து வீடு திரும்பி வருவான். அவனை கிழமைக்கு ஒருக்கால்தான் சந்திச்சு கதைப்பன். வீட்டுக்குள்ள இருக்க இருக்க பயம் தான் வரும். பிரான்ஸுக்காரர்களின் பாஷையும் தெரியாது.

சுத்தித் திரிய வேண்டிய வயதிலேயே இவ்வளவு கஷ்டமடா. என் குடும்பத்தால தான் உயிரோட இருந்தனான்" என்றவன் மீண்டும் அழத் தொடங்கி விட்டான்.

"அம்மா, என்ன செய்கிறாவோ? அப்பா, அக்கா, தங்கச்சியாக்கள் என்ன செய்கினமோ?" என்றவனின் கண்களில் தான் வாழ வே[illegible] குடும்பத்தைப் பற்றியே சொல்லி புலம்பிக் கொண்டிருந்தான். தொடர்ந்து அவனின் துயரங்களையும், அவன் பட்ட கஷ்டங்களையும் சொல்லிக் கொண்டு இருந்தவன்,

"நான் காதலித்தது உனக்குத் தெரியுமா?" என்றான்.

"நான் உனக்குச் சொல்லவில்லை. அதுவும் இன்று கைவிட்டுப் போட்டுது".

"ஏன்?" என்று வினவினேன்.

கஜன் கலாவின் பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தான்.

"யார் அது?" என்றேன்.

"என் ஊர்தான். என் முறைப் பெண். என் மாமன் மகள். அவளுடைய அப்பா வெளிநாட்டில். பல வருடங்களாய் அவளுடன் நான் கதைத்ததே இல்லை. உயர்தரம் படிக்கேக்க தான் அவளை விரும்பினேன். நான் எனது காதலைச் சொல்ல முன் கலா தன்ர காதலைச் சொன்னவள். அவளின் குண்டு மணிக்கண்கள் இன்னும் என் இதயத்தில் இருப்பிடமாய் இருக்கின்றன. உயிருக்குயிராய் அவள் என்னை நேசித்தாள். அதிக அன்பு கொண்டவள். அவள் அதிகமாகக் கோபப்படுவாள். எனக்கு அந்தக் கோபத்தை ரசிப்பதே கொள்ளைப் பிரியம்.

இங்கும் வந்து கடன்பட்டாவது பதினைந்து நாளைக்கு ஒருக்கால் தொலைபேசி எடுத்து அவளுடன் கதைப்பேன். அவளின் அன்பில் இங்கு கஷ்டங்கள் பறந்தே போய்விடும். கதைத்து முடியும் போது செல்லமாகச் சிணுங்குவாள். முந்தினமாதிரி அதிகம் கோபப்படமாட்டாள். அன்பாய் ஆறுதலாய் பேசுவாள். நாளும் போக போக கலாவின் தொலைபேசி அழைப்பு வருவதில்லை. நான் நெடுக எடுத்து கதைக்கும் வீட்டுக்காரருடன் தொடர்பு கொண்டு அவளைப் பற்றிக் கேட்டேன். அவர்கள்தான் அவளின் பிரச்சினையைக் கூறினார்கள். நான் என்ன செய்வது? அவள் எங்கள் காதலைச் சொல்ல தாய் கண்ணுக்குள்ள பச்சை மிளகாய் போட்டுட்டாவாம். 'இதற்காகவா உன்னை வளர்த்தது? என்று கேட்டுக் கேட்டு அடித்தாவாம். அப்படி நீ அவனைத்தான் செய்கிறதென்றால் எங்கள் எல்லோரையும் பிணமாகத்தான் பார்ப்பாய் என்று கூறிருக்கிறாவாம்.

கலாவும் சரியாய்ப் பயந்தவள். பிறகு அவர்கள் சொன்னார்கள் கனடா மாப்பிள்ளையாம். அங்கேயே அவன் அரசாங்க உத்தியோகம் பார்க்கிறானாம். ஒரு கோடி காசு குடுக்கிறானாம். அதனாலதான் தாய் கலாவுக்கு அடித்தே சம்மதம் வாங்கி விட்டாவாம்.

நான் யாருடா, பிச்சைக்காரன் தானேடா. நான்தான் இனி உழைச்சு எல்லோரையும் கரையேற்றி, என்னையும் பார்க்க வேண்டும். இதிலே என் ஆயுள் போயுடும். எனக்கெல்லாம் எதற்கு காதல். கலாவாவது சந்தோஷமாய் , நிம்மதியாய் வாழட்டும்" என்றவனின் கண்களில் இருந்து கண்ணீர் பொல பொல எனக் கொட்டிக் கொண்டிருந்தது. அப்போது கஜனின் காதலின் ஆழத்தையும், கலாவில் அவன் கொண்ட அன்பையும் புரிந்து கொண்டேன்.

சற்று அமைதியாக இருந்தவன் "தொடர் சங்கிலியாகவே என்னை வேதனைகள் வதைக்குதடா" என்று அழுதுக் கொண்டே கூறினான்.

"மூத்த அக்காவுக்குத் திருமணமாம். பத்து லட்சம் அனுப்பட்டுமாம். அப்பா தொலைபேசி பண்ணினார். நான் எங்கே போறது. வழி ஏதுவுமே எனக்கு தெரியவில்லை. அதனால் வாழ்க்கையிலே வெறுப்பு ஏற்பட்டு என் வாழ்க்கையும் தடம் புரண்டது.

குடிக்கப் பழகினேன். கெட்ட நண்பர்கள் என்று தெரிந்து கொண்டும் அவர்களுடன் ஊர் சுற்றினேன். என் குடும்பமே நினைவுக்கு வராதடா அவங்களோடு திரியும் போது. நான் வெளிநாடு என்றால் என்னவோ எதிர்பார்ப்புடன் வந்தன். இன்று அத்தனையிலும் மண்தானடா விழுந்தது.

கஷ்டத்தின் மேல் கஷ்டம். அடுக்கடுக்காய் அடுக்கிக் கொண்டே போகலாம். ஊரில படிச்ச மாதிரி படிச்சிருந்தாலும் இன்று உத்தியோகம் கிடைத்திருக்கும். இங்கு வந்து என் வாழ்க்கை ஏன் இப்படி ஆனதென்றே தெரியல்ல" என்றவன், உரத்த குரலில் "எல்லாத்திற்கும் தெய்வங்கள்தான் காரணம். அத்திவாரம் சரியில்லை" என்று கூறினான். என்னாலை பதில் சொல்லவே முடியல்ல.

"சரி இவ்வளவு பிரச்சினைகளும் நடந்திருக்கு. ஏன் கொலை செய்தாய். ஏன் அவனை வெட்டினாய்?" என்றேன்.

அப்பாவியாய் பார்த்தவன், "அவனை வெட்டினால் பணம் நிறையத் தருவதாகச் சொன்னாங்கள் அவன் ஒரு கள்ளன். அதனாலதான் வெட்டினேன்" என்று கூறினான்.

"என்னை எப்படியாவது வெளியில எடுத்திடுவாய்தானே!" என்று என்னைக் கண்ட நம்பிக்கையில் புலம்பிக் கொண்டிருந்தான்.

"முடிந்த வரை முயற்சி செய்கிறேன்" என்றேன்.


"நானும் இப்பதான் வந்தனான், முயற்சி செய்து பார்க்கிறன்" என்று கூறிவிட்டு பிறகு வருகிறேன் என்று ஆறுதல் கூறி நகர்ந்தேன்.

பல இடங்களில் விசாரித்ததில் கையும் மெய்யுமாக பிடித்தால் கஷ்டம் என்று கை விரித்து விட்டார்கள்.

திரும்பவும் இரண்டு கிழமை கழித்து அவனைப் பார்க்க சிறைக்குச் சென்றேன் துசியுடன். துசி சரளமாக பிரெஞ்சு கதைப்பான். அங்கு கஜன் இல்லை. அவனை விசாரித்த போது பதினைந்து வருடம் தீர்ந்திருக்காம் என்று ஒரு அதிகாரி கூறினார். என் கவலையை புரிந்து கொண்ட துசி ஆறுதல் சொல்லிக் கொண்டு, என்னை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்திட்டான்.

அன்று இரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. நம்மட உறவுகள், வன்முறையிலும் வழி தவறிப் போவதிலும் கூடுதலாய் இருக்கின்றனர் என்று ஊகித்துக் கொண்டு, வெளிநாடு என்று ஊரில் இருக்கும் உறவுகள் வந்து சேர்கிறார்கள் வந்தவுடன் கஷ்டங்களை தாங்கமாட்டாமலும், அறியா வயதாலும் வழிமாறிப் போகிறார்கள். மாற வேண்டும் இந்த நிலை. நம்பிக்கையோடு தைரியத்தோடு நடக்க வேண்டும்.

எமக்கு நாமே துணை என்றதை என்றும் நினைவில் வைத்துக் கொண்டு அவனின் வருகைக்காக காத்திருக்கிறேன். (முற்றும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

### சுடரின் சுவாலை

சுந்தரத் தமிழினிலே
சுகந்தமாய் சுதந்திரிக்கும்
சுடர் ஒளி எனும் நாமம்
சுகந்தமாய் மணம் பரப்பி
உலகெங்கும் உன் சேவை - ஓங்கி
வளர்ந்திட
ஒரு மனதாய் வாழ்த்துகிறேன்....

கயவர்களின் கங்கணமும்
காடையர்களின் போர்க்குணமும்
களங்கமில்லா உன் சேவையினை
நசுக்கி ஒடுக்கி ஆள நினைக்கின்றன.

துஷ்டர்களை துரத்தியபடி
தூயவர்களை அணைத்துப்பிடி
இனவாதியை ஏறி மிதி
இன் முகத்தை இழுத்துப்பிடி
சுடரான உன் ஒளி
சுவாலையாக மாறும் என்பதை
தைரியத்துடன் எடுத்துக்காட்டு.

எஸ்.அருள்ராஜ்
பசறை

### வா...நீ

உண்மை அன்பைத் தேடித் தேடி
உருக்குலைந்திருந்த என் மனதை
மென்மையான உன் பாசத்தால்
மெருகூட்டினாய்
உன் சுயநலமில்லாத அன்பினால்
நான் சுக்குநூறாய் சிதறிப் போனேன்
உன் கோல விழிகளின்
காந்தக் கவர்ச்சியில்
நான் கட்டுண்டு கிடக்கிறேன்
என் வாழ்க்கைப் புத்தகத்தின்
உதிர்ந்து போன பக்கங்களை
மீண்டும் ஞாபகப்படுத்த நான்
விரும்பவில்லை
அதுபோல் இனிவரும் பக்கங்களிலும்
உன்னை விட்டுப் பிரியவும் நான்
விரும்பவில்லை

வாணி
கந்தர்மடம்

### பதில் சொல்

அருகினில் நீயிருந்தாய்
உறவென நான் நினைத்து
சிரித்துப் பேசி உறவாட
தொடு தூரத்தில் இருந்த நீ
தொலைவாகப் பறந்தாய்
காரணம் கேட்கவா? – நான்
கண்ணீர் சிந்தவா?
அன்பே நீயே என்னை
யாரோ ஒருத்தியாக நினைத்தால்
வேறு யார் எனக்கு உறவு
துன்பத்தில் சிரிப்பதா
இன்பத்தில் அழுவதா
நீயே சொல்
எதை நான் செய்வது
என் வேதனை தீர்ந்திட
விரைவினில் பதில் அனுப்பு.

எஸ்.சுகந்தினி
வீசுவமடு.

### வென்றிடுவோம்

கதிரொளி கண்டிடாக் காட்டினிலே
எங்கள் உரிமை ஒளி பெற்றிட வாழுகிறோம்
எங்கள் இனத்தின் துயர் களைய
எங்கள் தூக்கத்தைக் களைந்து விட்டோம்
போரின் புழுதியில் புதைந்து கிடக்கும்
எங்கள் உரிமையை வென்றெடுப்போம்
இனவெறி கொண்ட படையதனை
எங்கள் தேசம் விட்டு விரட்டிடுவோம்.
ஓயாத அலையில் அடித்த அடி ஒன்று போதும்
எங்கள் வீரம் எதுவென அவர்கள் உணர
அப்போது ஒப்பாரி வைத்தவர்கள் இப்போது
எம்மீது சவாரி செய்கிறார்கள்
விதையான எம்மாவீரர் விழியினிலே
வேங்கைகள் நாம் வென்றிடுவோம்.
வெற்றிபல கண்ட தலைவன் பாசறையில்
பயின்று வந்த படையணி நாங்கள்
விழ விழ எழுவோம் வெற்றியும் காண்போம்
வெற்றி நிச்சயம் இது எங்கள் தலைவன் தத்துவம்.

புலேந்திரா
பாண்டியூர்.

### இனி(ள)மையான எதிர்ப்பு

காற்றலையில் சேதி சொன்ன
காவிய நாயகனே
இளமையான என் கனவுகளை
இனிமையாக்கி வசந்தகால
தென்றலாய் கவிபாடும்
கனவுக்கண்ணனே - உன்
இரு விழி உற்று நோக்கியதும்
என் மனம் உன்னை
நேசிக்கத் தொடங்கியது
உன் புன்னகையே
என்னைக் கவர்ந்தது
விழிகளால் கதை பேசி
என்னைக் கற்பனையில்
மிதக்கவைத்த
மன்மதனே - உன்
மனதை புரிந்து கொண்ட போது
என் இளமையை உணர்ந்தேன்
உன்னோடு பேசிய போது
என் எதிர்காலத்தை எண்ணினேன்
ஏனென்றால் - நாளை
என் வாழ்க்கைப் பயணம்
புனிதப் பயணமாய்
உன்னோடு தொடரவுள்ளதால்...

கன்னக்குழி
மல்லாவி

### புரியவில்லையா?

என் செய்தியை
நான் எழுதத்துடிப்பது
உன் இதயத்தில் தான்
அறிந்தும் அறியாதது போல்
நீ ஏன்
ஆட்டோக் கிராஃபை
நீட்டுகின்றாய்?

ரீ.மேரி தர்ஷினி.
யாழ்/பல்கலைக்கழகம்.

### பிரிவு

உன் பார்வையை
நீ பேசிய வார்த்தையை
மறக்க முடியவில்லை
அர்த்தம் புரியாமலே
அவை புதைந்துகிடக்கின்றன
அதற்குள்ளே - நீ
என்னை விட்டு
பிரிந்து விட்டாயே?
விடைகாணா வினாக்களாய்
உன் நினைவுகளுடன்
தவிக்கிறேன்...

எஸ்.துர்க்கா
அசாலி.

### தவிப்பு

என்னை "புலி" – என்ற
பெயரில் கைது செய்தனர்
சிங்களக் கூலிப்படையினர்
அது மட்டுமா?
பல சித்திரவதைகளும்
செய்தனர்
"தமிழன்" என்ற
காரணத்தினால்
செத்துப் பிழைத்தேன்
கூலிப்படைகளிடம் இருந்து
இப்போ சிறையில் தவியாய்
தவிக்கிறேன்
விடிவே இல்லாமல்
காலங்கள் கடந்தது
ஏழு வருடங்கள்
உருண்டோடி விட்டது
முடிவே இல்லாமல் தவிக்கிறேன்
"நீதி" மன்றத்தில்
விசாரணை என்று பெயர்
விசாரணையும் முடியவில்லை
விடுதலையும் இல்லை
தினமும் தவியாய் தவிக்கிறேன்
சிறையில்
இதை எல்லாம் கேட்பதற்கு
யார் உண்டு
என்று நினைக்கிறாயோ?
முட்டாள்
தட்டிக் கேட்டால்
நீ தாங்க மாட்டாய்
இதற்கெல்லாம் ஒரு நாள்
பதில் இருக்கு

கே.தமிழமுதன் அஜித்
களுத்துறை சிறைச்சாலை.

### தமிழினமே பொங்கி எழு!

பொங்கி எழு தமிழினமே
பொங்கி எழு
யாழ். பல்கலைக்கழகத்தில்
பொங்கி எழு தமிழினமே
பொங்கி எழு!

எங்கள் உரிமைகள் பெற
பொங்கி எழு!
புதுவரலாறு படைக்கப்
பொங்கி எழு!
வீரத் தலைவனைப் போற்றி
பொங்கி எழு!

இடர் அகற்றும் ஆணைகள் வேண்டி
பொங்கி எழு!
சர்வமே எங்களை அங்கீகரிக்க
பொங்கி எழு!
பகை கர்வம் அடங்க
பொங்கி எழு!
மானத் தமிழின மலர்ச்சிக்காய்
பொங்கி எழு!
தமிழினமே பொங்கி எழு!

கு.பா.தீபச்செல்வன்
யாழ்.பல்கலைக்கழகம்.

## சிரிக்க சிந்திக்க சிப்ஸ்



இங்கிலாந்தில் மூதாட்டி ஒருவர் உயில் எழுதி வைத்திருந்தார்.

90 வயதை தாண்டிய அந்த மூதாட்டியின் மறைவிற்குப் பிறகு உயிலை எடுத்து வாசித்துப் பார்த்தார்கள்.

உயிலில் எழுதியிருந்தது இது தான்; "என்னுடைய நீண்ட ஆயுளுக்குக் காரணம் என் குடும்ப டாக்டர். அவருக்கு நான் நிறையக் கடமைப்பட்டிருக்கிறேன். என் அறையில் மரப்பெட்டி ஒன்று உள்ளது. அந்தப் பெட்டியில் உள்ளவை முழுவதும் அவருக்குத் தான் சொந்தம்."

உடனே மருத்துவருக்குத் தகவல் அனுப்பினர். வழக்கறிஞர் முன்னிலையில் மரப்பெட்டி திறக்கப்பட்டது.

மரப்பெட்டியினுள் மருத்துவர் 20 ஆண்டுகளாக அந்த அம்மையாருக்குக் கொடுத்த மருந்து மாத்திரை, மருத்துவச் சீட்டு முதலியவை இருந்தன!

* * *



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சனின் வாட்டர்கேட் ஊழல் பற்றிய ஒரு படம் விரைவில் வெளிவர இருக்கிறது. இதில் தொலைக்காட்சியின் பிரபல நடிகையும், இரண்டு முறை ஒஸ்கார் விருது பெற்றவருமான மிரில் ஸ்ட்ரீப், நடிகை கைநித் பால்ட்ரோ மற்றும் ஒஸ்காருக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அனிட் பென்னிங் ஆகியோர் நடிக்கிறார்கள். படத்தை பாராமௌண்ட் பிக்சர்ஸ் தயாரிக்கிறது. மிரில் ஸ்ட்ரீப் முன்னாள் அமெரிக்க அட்டர்னி ஜெனரல் ஜான் மீட்செல்லின் மனைவியான மார்தா மிட்செல்லின் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். ஊழலை வெளிக்கொணர்ந்த வெள்ளை மாளிகை செய்தியாளர் ஹெலன் தோமஸ் பாத்திரத்தில் பென்னிங் நடிக்கிறார். இப்படத்தை நிப் - டக் என்ற புகழ்பெற்ற தொலைக்காட்சித் தொடர் இயக்குநர் ரியன் மர்பி இயக்குகிறார்.

* * *



அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்சுக்கு, சைக்கிள் சவாரி என்றால் கொள்ளை ஆசை. அவர் ஓய்வெடுக்கும் நேரங்களில், அடிக்கடி டெக்சாஸ் மாநிலத்திலுள்ள கிராபோர்டு மலைப்பாதைக்குச் சென்று சைக்கிள் ஓட்டுவதை வாடிக்கையாக வைத்துள்ளார். வெளிநாட்டுக்குச் சென்றால் கூட, இந்தச் சைக்கிளை கூடவே எடுத்துச் சென்று விடுவார்.

சமீபத்தில் ஜப்பான், கொரியா, சீனா, மங்கோலியா ஆகிய தூரக்கிழக்கு நாடுகளுக்குச் சென்ற போதும் அந்தச் சைக்கிளை கொண்டுசெல்ல மறக்கவில்லை. உடன் எடுத்துச் சென்றார்.

சீனாவில் புஷ் தங்கியிருந்த போது, அந்த நாட்டின் ஒலிம்பிக் பந்தைய வீரர்களுடன், [illegible] சைக்கிள் ஓட்டச் சென்றார். அவர்களுடன் சட்டை [illegible] விளையாட்டு உடையை அணிந்து கொண்டு, ஓர் இளைஞனைப் போல் அவர் சைக்கிள் ஓட்டிச் சென்றது, சீன மக்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

* * *

'சார் மன்னன் காலத்தில் ரஷ்யாவில் அரசியல் எதிரிகளுக்கு வினோதமான சிறை வாசம் தரப்பட்டது. இது சிறையல்ல, இவர்கள் சைபீரியாவில் [illegible] பகுதியில் விடப்படுவார்கள். அதற்குள் அவர்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம், வரலாம். கிடைக்கும் வேலை செய்யலாம். திருமணம் செய்து கொள்ளலாம். குடித்தனம் நடத்தலாம். ஆனால், இந்த முகாமை விட்டு வெளியே போக முடியாது. இப்படி கைதியாக இருந்த போது தான் லெனின் திருமணம் செய்து கொண்டார். அவர் துணைவியும் அங்கு கைதியாக இருந்தவர்.

* * *



இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு ஒரே ஒரு பிள்ளை மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டுமென சட்டம் கொண்டு வந்த சீனா, இப்போது அதைத் தளர்த்த யோசனை செய்து கொண்டு வருகிறது. இதன் மூலம், 300 மில்லியன் குழந்தைகள் பிறப்பது தடுக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் மிக முன்னேறிவிட்ட சீனா, தனது எதிர்கால வளர்ச்சிக்குப் பிள்ளைகள் தேவை என்பதால் குழந்தைகள் பெற்றுக் கொள்ளச் சொல்கிறது. அதிலும் பெண் குழந்தைகளே அதிகம் வேண்டும் என்று சொல்கிறது சீனா. காரணம் இப்போது [illegible] 120 ஆண் குழந்தைகளுக்கு 95 [illegible] குழந்தைகளே உள்ளனர். [illegible] பெண் குழந்தை பெற்றால் 1600 [illegible] ரூபாய்) ஊக்கத்தொகை [illegible]

* * *

நண்பர்கள், பாலியல் சி.டிக்கள், நாவல்கள், படங்கள், இணைய தளம், டிவி நிகழ்ச்சிகள், மியூசிக் வீடியோக்கள், போன்ற ஊடகங்களால் தான் பெண்கள் தமது செக்ஸ் அறிவைப் பெற்றுக்கொள்கிறார்களாம்.

பெரும்பாலான பெண்கள் அடிப்படை செக்ஸ் தகவல்களை ஆண்களை விட தங்க[illegible]மிருந்துதான் பெறுகிறார்களாம்.

கண் வீசும் விளக்கொளியில்
கற்பிழக்கும் காட்சிகாணும் -
நடிகைகளே
உங்களுக்கெல்லாம் கற்புநெறி
மறந்து போகலாம் - ஏன்
மரத்தும் போகலாம்
பெண்களுக்குத் தேவை
நான்குவகைக் குணங்கள்
நடிகையரே
ஜாக்கெட்டுகளை ஏலம் விடுங்கள்
- ஆனால்
கற்பையும் சேர்த்து அல்ல!

* * *

தராசுத்தட்டில் நிறையுள்ள பொருள் ஒன்றை வைக்கும் போது நிறை அதிகமான பக்கத்தை நோக்கியே தராசு முள் சாய்கிறது. இதைப்போல் மனதில் பெண் ஆசையும், பொருள் ஆசையும் நிறையும் போது அந்த மனம் இறைவனை விட்டு விலகி நிற்கிறது.

* * *



"எழுத்தாளரைக் காதலிச்சது தப்பா போச்சு?"
"ஏண்டி இப்படிச் சொல்றே?"
"5 பக்கத்துக்குக் காதல் கடிதம் எழுதிவிட்டு போதாததற்கு 'தொடரும்' என்று வேறு போட்டு முடிக்காமல் அனுப்பியிருக்கிறார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘டில்லி’யில் உதிப்பாரா உதயா?

‘எந்தத் தொழில் செய்பவனாக இருந்தாலும் சரி அதையே முழு மனதுடன் நேசித்தால் அந்தத் தொழிலில் முடிசூடா மன்னனாகத் திகழலாம்’ என்ற அழகான கருத்தை மையமாக வைத்து தயாரிக்கப்பட்டு வருகிறது ‘டில்லி’ திரைப்படம்.

இந்தப் படத்தில் உதயா கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக அறிமுகமாகிறார் ஏஞ்சல்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி தயாரித்து இயக்குகிறார் எஸ்.இராமச்சந்திரன். ஆதித்யனின் இசையில் பாடல்கள் உருவாகி வருகின்றன. பல படங்களில் உதிக்காமல் போன உதயாவின் மார்க்கெட் இந்தப் படத்திலாவது உதிக்கிறதா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.





# திருமண மலர்கள் தருவாயா?

‘திருமண மலர்கள் தருவாயா தோட்டத்தில் நான் வைத்த மாதுளையே’ என்று இப்போது நிஜமாகவே கண்களில் கலர் கலராக கல்யாண கனவுகளோடு வலம் வரத் தொடங்கி விட்டார் ஜோதிகா.

ஜோதிகா கெட்டிமேளம் கொட்டப் போவது சூரியாவுடன் தான் என்பது சொல்லித் தெரிய வேண்டிய விடயமல்ல. இருவரும் பூவெல்லாம் கேட்டுப்பார், காக்ககாக்க, உயிரிலேகலந்தது, மாயாவி என சில படங்களில் இணைந்து நடித்துள்ளனர். தற்போது ‘ஜில்லென்ற ஒரு காதல்’ என்ற படத்தில் நடித்துக் கொண்டுமிருக்கின்றனர்.

சூர்யா, ஜோதிகா காதலுக்கு சூர்யா வீட்டில் கடும் எதிர்ப்பு இருந்தது. சூர்யாவின் தங்கை பிருந்தாவின் திருமணத்துக்கு ஜோதிகா வராமல் போகவே அந்த சந்தேகம் வலுப் பெற்றது.

எல்லோருடைய சந்தேகங்களுக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக தெலுங்கு பத்திரிகை ஒன்றுக்கு மனம் திறந்து பேட்டி கொடுத்திருக்கிறார் ஜோதிகா.

“நான் நிறைய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன். சூர்யாவும் பிஸியாக இருக்கிறார். என்றாலும் விரைவில் எங்கள் திருமணம் நடைபெறும். திருமண அறிவிப்பை முறைப்படி நாங்கள் வெளியிடுவோம்” என கூறியிருக்கிறார். அதை சூர்யாவும் ஆமோதித்திருக்கிறார்.

மணிரத்னம் - சுஹாசினி, ராஜகுமாரன் - தேவயானி, நாகர்ஜுன் - அமலா, பாக்கியராஜ் - பூர்ணிமா, அஜித் - ஷாலினி, ரஞ்சின் - பிரியாராமன் போன்ற பல திரையுலக காதல் ஜோடிகள் இன்றுவரை திருமண வாழ்வை வெற்றிகரமாக கொண்டு செல்கின்றனர். அந்தவரிசையில் இணைந்து கொள்ளப் போகும் சூர்யா - ஜோதிகா திருமண வாழ்வும் கடைசிவரை வெற்றிகரமாக திகழ்ந்தால் சந்தோஷம் தான்.



# மணிரத்னத்தின் இயக்கத்தில் ஐஸ்வர்யாராய்

‘ஆயுத எழுத்து’க்குப் பிறகு எந்தப் படத்தையும் இயக்காமல் அமைதியாக இருந்த மணிரத்னம், தற்போது இந்தியில் ஒரு படத்தை எழுதி, இயக்க ஆயத்தமாகி விட்டாராம்.

கதாநாயகனாக அபிஷேக் பச்சன் நடிக்கிறார். கதாநாயகியாக ஐஸ்வர்யாராயைத் தெரிவு செய்துள்ளாராம் மணிரத்னம். ஏற்கனவே ‘இருவர்’ படத்தில் மணிரத்னத்தின் இயக்கத்தில் ஐஸ்வர்யாராய் நடித்திருந்தார். மீண்டும் அவரது இயக்கத்தில் நடிக்க கால்ஷீட் கொடுத்துள்ளார் ஐஸ்வர்யாராய். முழு படப்பிடிப்பையும் மும்பையில் நடத்தத் திட்டமிட்டுள்ளாராம் மணிரத்னம்.

- இன்னு… போகிற… இருக்கிற…
- கால்ஷீ… படவா…
- ‘தவமா… தினமும்… குவிகின்… என்பதா…
- “காதலி… நான் கா… விழுந்தா… விழுவே…



# பொங்கலுக்குச் சிறகடி… ‘பாசக்கிளிகள்’

‘சந்திரமுகி’யில் ரஜினியுடன் இணைந்து கலக்கிய பிரபு, முரளியுடன் ‘பாசக்கிளிகள்… கலக்கி வருகிறார். மு.கருணாநிதியின் கதை, திரைக்கதை, வசனத்தில் தயாராகவுள்ள ‘பாசக்கிளிகள்’ திரைப்படம் பொங்கலுக்கு வெளியிடப்படவுள்ளது.

இந்தப் படத்தில் பிரபு, முரளியுடன் நவ்யாநாயர், மாளவிகா, ரோஜா, நாசர், மனோர… வடிவேலு, கலாபவன் மணி என ஒரு நட்சத்திரப் பட்டாளமே இணைந்துள்…

‘பாசக்கிளிகள்’ படத்தை இயக்கிய இராமநாராயணன் இ… பற்றி கூறும்போது “ரசிகர்கள் விரும்பும் அனை… அம்சங்களையும் உள்ளடக்கிய ஒ… ஜனரஞ்சகப் படமாக இது… என்று கூறியுள்ளார்.



மு.கருணாநிதி நான்கு பாடல்களையும், வைரமுத்… பாடல்களையும் இந்தப் பட… எழுதியுள்ளனர். வித்யாசாகரி… இசையில் பாடல்கள் அனைத்… ஹிட்டாகும் என எதிர்பார்க்கப்… வடிவேலுவும் காமடியில் புது… கலக்கியுள்ளாராம்.

எது எப்படியோ ‘பாசக்கிளிக… கூண்டுக்கிளிகளா விடாமல் இரு… சரிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு பாடலுக்கு ஒரு கோடி ரூபாய் செட்

'மன்மதன்' திரைப்படத்துக்குப் பிறகு சிம்பு, ஜோதிகா இணைந்து நடித்து வரும் திரைப்படம் சரவணா. தெலுங்கில் ரவிதேஜா, மீராஜஸ்மின் நடித்து ஹிட்டான 'பத்ரா' படத்தின் ரீ மேக் தான் சரவணா.

ஆனாலும் தமிழுக்கு ஏற்ப பல மாற்றங்களைச் செய்து படமாக்கியுள்ளார் கே.எஸ்.ரவிக்குமார். விவேக்கின் கொமெடிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளார்.

இந்தப் படத்தில் சிம்பு, மேக்னா நாடும் பங்கேற்ற ஒரு பாடல் காட்சிக்காக பஞ்ச பூதங்களான நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு போன்றவற்றை மையமாக வைத்து ஒரு கோடி ரூபாய் செலவில் செட் அமைத்துள்ளார்கள். இதேபோல இன்னொரு பாடல் காட்சிக்கு 50 லட்சம் ரூபாய் செலவில் செட் போட்டிருக்கிறார்கள்.

காதல், செண்டிமெண்ட், ஆக்ஷன், காமெடி கலந்து படைக்கப்பட்டுள்ள 'சரவணா' ஜனவரிக்கு வரவுள்ளது.





## சிரிப்பழகி லைலாவின் 'சிக்'கான பதில்கள்

* எந்த நேரம் பார்த்தாலும் சிரித்துக் கொண்டே இருக்கிறீர்களே! ஞாயிற்றுக்கிழமையாவது விடுமுறை விடுவீர்களா?

நிறைய பேர் இதைத்தான் சொல்கிறார்கள். ஆனால், என்னால் சிரிக்காமல் இருக்க முடியாது.

* சினிமாவுக்கு வருவதற்கு முன் உங்கள் கனவு என்ன?

வெட்னரி டொக்டராக வேண்டும் என்பது.

* உங்களுக்குப் பிடித்த உணவு?

வீதியோர கடைகளில் இருக்கும் உணவுகள் எனக்குப் பிடிக்கும். அந்த சுவை பைவ் ஸ்டார் ஹோட்டலில் கூட கிடைக்காது.

* உங்களுடைய பொழுதுபோக்கு?

நானே காரை ட்ரைவ் பண்ணிக் கொண்டு எங்கேயாவது போவது

* உங்கள் குடும்பம் பற்றி?

அப்பா விஜயன் இந்தியன் ஏர்லைன்ஸில் பைலட்டாக இருந்தார். அம்மா ஜோனா குடும்பத் தலைவி. ஒரே ஒரு சகோதரன்.

* உங்களைப் பற்றி வரும் கிசுகிசுக்களை எப்படி எடுத்துக் கொள்வீர்கள்?

நான் அதைப்பற்றி கணக்கெடுப்பதே கிடையாது.

* நீங்கள் மிகவும் ரசிக்கும் ஒருவர்?

என் சகோதரனுடைய சுட்டிக் குழந்தை

* உங்களுக்குப் பிடித்த சூழல்?

சின்ன கிராமத்தில் அமைதியாக வாழ ஆசை

* தற்போது நீங்கள் நடித்து வெளியாகவுள்ள படம்?

'வோர் என்ட் லவ்' என்கின்ற மலையாளப் படம்.

## சி னி மி னி

இன்னும் ஏழு மாதங்களில் பிரசாந்த் அப்பாவாகப் போகிறார். அவரது மனைவி கிரஹலட்சுமி கர்ப்பமாக இருக்கிறாராம்.

கால்ஷீட் பிரச்சினை காரணமாக ராணி முகர்ஜி சிவாஜி படவாய்ப்பை தவறவிட்டதாகக் கூறப்படுகின்றது.

'தவமாய் தவமிருந்து' நாயகி பத்மபிரியாவுக்கு தினமும் பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிகின்றனவாம். அம்மா, அப்பா தமிழ் நாட்டவர்கள் என்பதால் பத்மபிரியா நன்றாகத் தமிழ் பேசுவாராம்.

"காதலில் விழுந்தால் எழ முடியாது. சாதாரணமாக நான் காதலில் விழ மாட்டேன். அப்படி காதலில் விழுந்தால் வாழ்க்கைத் துணைவரோடு சேர்ந்துதான் விழுவேன்" என்கிறாராம் பூஜா.

❖ கமலின் 'வேட்டையாடு விளையாடு' படத்தைத் தமிழ் புத்தாண்டுக்கு வெளியிட ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் நிலையில், கமல் தன் அடுத்த படமான 'தசாவதாரம்' படத்துக்கான வேலைகளில் இறங்கி விட்டாராம்.

❖ 'ஜெயம்' ரவியுடன் ஜோடி சேர்ந்து நடித்த சதா, அசின், ரேணுகா மேனன், ஸ்ரேயா எல்லோரும் இன்று பிசி நடிகைகள். அவருடன் புதிதாக 'இதயத் திருடன்' படத்தில் இணைந்துள்ள காம்னாவும் பிசியாகுவாரா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

❖ ஸ்ரேயாவின் ஒல்லிக்குச்சி உடம்புக்குக் காரணம் அவர் தினமும் வியர்வை வரும்வரை ஆடும் குச்சுப்புடி நடனம் தானாம்.

டிக்கும்

கிளிகள்' படத்தில்
வுள்ள

மனோரமா,
ணைந்துள்ளது.

ணன் இந்தப் படம்
ம் அனைத்து
க்கிய ஒரு
க இது இருக்கும்"
ர்.

ன்கு
வரமுத்து இரண்டு
தப் படத்துக்காக
பாசரகரின்
அனைத்தும்
பார்க்கப்படுகிறது.
ில் புதுமுறையில்

சக்கிளிகள்'
மல் இருந்தால்

## வெடக்கோழி

இந்தியாவில் பெண் சிசுக்கொலை அதிகரித்து வருகிறது என்றுதான் நாம் இதுவரை கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்தியாவின் மும்பை ரெட்லைட் ஏரியாவில் ஆண் குழந்தைகள் பிறந்தால் கொன்று விடுவார்களாம். அது அங்கே வழக்கத்தில் உள்ள ஒரு விடயமாகும்.

அதனை மையமாக வைத்து தயாரிக்கப்பட்டு வருகின்றது 'வெடக்கோழி' திரைப்படம். ஆண் சிசுக் கொலையிலிருந்து தப்பிய சிறுவன் தனது தாயும், சகோதரியும் விபசாரத் தொழிலில் ஈடுபடுவதைக் கண்டு மனரீதியாக பாதிப்படைகிறான். அவன் தனது வாலிப வயதில் என்ன மாதிரியான முடிவெடுக்கிறான் என்பதுதான் 'வெடக்கோழி' திரைப்படத்தின் சாராம்சம்.

விமல் என்ற புதுமுகநாயகனுடன், கௌசல்யா, மாளவிகா, மும்தாஜ், அலெக்ஸ், அபிநய ஸ்ரீ, ஷீத்தல், ஆர்.சுந்தர்ராஜன் ஆகியோர் இணைந்து நடிக்கிறார்கள்.

அரிராஜின் இயக்கத்தில், அனுமோகனின் வசனத்தில், சினேகன், பிறைசூடன் ஆகியோரது பாடல் வரிகளுடன், தேவாவின் இசையில் திரையை அலற வைக்கப் போகிறதாம் 'வெடக்கோழி'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தை கண்களில் அன்னை



காலங்காலமாக மாமியார் – மருமகள் என்றாலே கீரியும், பாம்பும் தான். என்ற பொதுப்படையான கருத்தே நிலவி வருகிறது. இதற்கு காரணம் மாமியார், மருமகளுக்கிடையில் காணப்படும் ஈகோ பிரச்சினை தான்.

பொதுவாகத் தாய்மாருக்கு மகன்மார் மீதுதான் பிரியம் அதிகம். புதிதாக வரும் மருமகள் தன் மகனை தன்னிடம் இருந்து பிரித்து விடுவாளோ என்று மாமியார் பயப்படுகிறார். அந்தப் பயம் தான் மருமகளை விரோதியாக பார்க்க வைக்கிறது.

ஆரம்பத்திலேயே கெடுபிடி செய்தால் மருமகள் பயந்து அடங்கி விடுவாள். மகனும் தன்னிடமே இருப்பான் என மாமியார் நினைக்கிறார்.

என் கணவர் தாய் மீது தானே பாசமாக இருக்கிறார். அவருக்காகத் தானே பரிந்து பேசுகிறார். தாய் என்றால் பாகாய் உருகுகிறாரே. என்று மருமகள் தனக்குள் பட்டாசாய் வெடிக்கிறார்.

இப்படி இரு வேறுபட்ட கருத்துக்கள் ஒரு வீட்டுக்குள்ளே முட்டி மோதுகையில் ஆண்தான் திக்குமுக்காடிப் போகிறான். தாயா? தாரமா? என தடுமாறுகிறான். வேலைப்பளு ஒரு புறம், வீட்டுப் பிரச்சினை மறுபுறம் என தவிக்கும் உள்ளத்திற்கு பெரும்பாலான ஆண்கள் மதுவைத் தான் ஆதரவாக நாடுகிறார்கள்.

சிந்தியுங்கள் சகோதரிகளே! உங்கள் கணவர் மதுவுக்கு அடிமையாகி நிம்மதியின்றி தவிக்க நீங்களும் காரணமாகலாமா? தாய்க்குப் பின் தாரம் என்று தான் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நீங்கள் மறந்து விடலாகாது.

கணவரின் தாயாரை உங்களின் தாயாகவே நீங்கள் பார்ப்பது தான் இந்தப் பிரச்சினைக்கு சிறந்த தீர்வு. வயதான காலத்தில் மகனின் தயவில் வாழும் தாயாரை கவனமாகத்தான் கையாள வேண்டும்.

வீட்டில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுங்கள். அவர்களுக்கு விருப்பமானதை சமையுங்கள். மருந்து மாத்திரைகளை நேரத்துக்கு கொடுங்கள். நோய்வாய்ப்பட்டு இருந்தால் பெற்ற தாயைப் போல பாசத்தோடு பராமரியுங்கள். அவர்கள் விரும்பாத விடயத்தை முடிந்த வரை செய்யாதீர்கள். பிறந்த வீட்டை எந்நேரமும் புகழ்ந்து பேசாதீர்கள்.

இவ்வாறெல்லாம் நீங்கள் செய்வதால் உங்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கை பிறக்கும். பிறகு தாய்–சேய் உறவு தான் உங்களுக்குள் இருக்கும். இதற்காக உங்களை அடிபணிந்து போகச் சொல்லவில்லை. விட்டுக் கொடுத்துப் போவதும், பொறுமையைக் காப்பதும் தான் நீங்கள் செய்ய வேண்டிய விடயம்.

தவறு மாமியாரிடமே இருந்தாலும் அனுசரித்துப் போவதுதான் நல்லது. மாமியார் யார்? ஒரு நல்ல கணவனை நல்ல துணையை நீங்கள் பெற காரணமானவர் அல்லவா? வயதில் முதிர்ந்த அவருக்கு பணிந்து போவதால் நீங்கள் எந்த விதத்திலும் குறைந்து விடப் போவது இல்லையே.

மாமியார் சரியில்லை என்றதும் கோபித்துக் கொண்டு தனிக்குடித்தனம் செய்வது குடும்பப் பெண்களுக்கு அழகல்ல. ஐந்து விரலும் ஒரே அளவிலா இருக்கிறது. ஒட்டிச் செல்வது மருமகளின் கையில்தானே இருக்கிறது.

நல்ல மருமகளாக இருந்து பாருங்கள். அத்தை கண்களில் நிச்சயம் உங்கள் அன்னை தான் தெரிவார்.

இந்து

## உடல் நலம் பெற...

- காலையில் மென்மையான உணவை உண்ணுங்கள். பச்சைக் காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- கொழுப்பு நிறைந்த இறைச்சி வகைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்
- பகலுணவில் தவறாமல் கீரை சேர்த்துக் கொள்ளுங்கள்.
- சாப்பாட்டுக்குப் பின் கட்டாயம் ஏதாவதொரு பழவகையை உண்ணுங்கள்.
- கொதித்தாறிய நீரை பருகுங்கள். தினமும் அதிகளவு நீரைப் பருகுங்கள்.
- இரவில் மென்மையான உணவையே உண்ணுங்கள்

பிறகென்ன இயற்கையாகவே உங்கள் உடலழகு வசீகரம் பெற்று விடும்.

## கரட்டின் மகிமை

வீட்டிலேயே பயிரிடக்கூடியது கரட். கரட்டை கறிவைத்தும், சம்பல் செய்தும் சாப்பிடலாம். நிறைய சகோதரிகள் கரட் உண்பதில் அக்கறை காட்டுவதில்லை. அது மிகவும் தவறு.



கரட்டை பச்சையாக உண்பதால் கண் பார்வை தெளிவாகும். வெய்யிலிருந்து சருமத்தைப் பாதுகாக்க கரட்டை அதிகம் சாப்பிட வேண்டும். கரட்டை மிக்சியில் அரைத்து ஜூஸாக பருகி வர முகம் பளபளப்பு பெறும். கரட்டை வேகவைத்து மசித்து முகத்தில் பூசி வந்தாலும் பளபளப்பு பெறும்.

உங்கள் வீட்டு மரக்கறிக் கூடையில் இனி கரட்டும் இடம் பிடிக்கும் தானே.

## வாரம் ஒரு கேள்வி-பதில்

தமது பெண் நல்ல குணமுள்ள, நல்ல நிலையிலுள்ள ஒருவரைக் காதலித்தாலும் கூட, அவர் காதலித்து விட்டார் என்பதற்காக அந்தத் திருமணத்தை மறுதலிக்கும் பெற்றோரைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

வ. யுவராணி,
புசல்லாவை.

இந்த விடயத்தில் பெற்றோரும் குழந்தைகள் போலத் [illegible] கொள்கிறார்கள். [illegible] பிடிக்கிறார்கள். [illegible] அவளுக்கு [illegible] செய்து, தாம் விரும்பிய பாடசாலையில் படிக்க வைத்து அவளுக்கு தேவையான அனைத்தையும் பார்த்துப் பார்த்து பெற்றோரே செய்கின்றனர். இப்படி ஆசை ஆசையாய் வளர்த்த பெண்ணைத் தமக்கு பிடித்த, நல்லதொரு மாப்பிள்ளைக்கு மணம் முடித்துக் கொடுக்க அவர்கள் ஆசைப்படுகிறார்கள். ஆனால், அந்த ஆசையில் மண்ணை அள்ளிப் போடுவதைப் போல பெண்ணே அந்தத் துணையை தேட முற்படுகையில் தான் அவர்கள் கொதித்துப் போகிறார்கள். அந்தக் காதலை ஜீரணிக்க மறுக்கிறார்கள். அவன் எவ்வளவு தான் நல்லவனாக இருந்தாலும் வரட்டுப் பிடிவாதத்தையும், வரட்டு கௌரவத்தையும், துணையாக வைத்துக் கொண்டு அந்த திருமணத்தை நடத்தி வைக்க விரும்புவதில்லை. அவர்களை விட்டுத் தான் பிடிக்க வேண்டும். விடயத்தை அப்படியே [illegible] போட்டால் பெற்றோர் மனமும் மாறக்கூடும். [illegible] பரிதாபமும் பிறக்கும். அவள் ஆசைப்பட்ட எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்த நாமே, அவள் ஆசைப்பட்ட வாழ்வை [illegible] விட்டோமே. அவள் மனம் [illegible]. அவள் நினைத்திருந்தால் [illegible] திருமணம் முடித்திருக்கலாம் [illegible] அவள் எங்கள் உணர்வுகளை மதித்து [illegible] அவளது உள்ளம் [illegible] என்ற பச்சாதாப உணர்வில் [illegible] பெண்ணை அவள் மனதுக்குப் பிடித்தவனுடன் சேர்த்து வைக்கவும் கூடும்.

ஒன்று தெரியுமா யுவராணி? உலகில் மனிதனைத் தவிர மற்ற எல்லா ஜீவராசிகளுக்கும் தாம் விரும்பிய துணையோடு கூடி வாழ்வதற்கு எந்தத் தடையுமே கிடையாது. அறிவு வளர்ச்சியில் சிறந்த மனிதனே தான் விரும்பிய துணையோடு வாழ முடியாமல் சூழ்நிலைக் கைதியாகி விடுகிறான் என்பது தான் மிகப்பெரிய உண்மை. இந்நிலையை நாமும் தான் மாற்ற வேண்டும்.

## சமைக்க சுவைக்க

### ஒரேஞ் ஐஸ்கிறீம்

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| ஒரேஞ் பழச்சாறு | 300 மி.லீற்றர் |
| சீனி | 75 கிராம் |
| எலுமிச்சை சாறு | 3 மே.கரண்டி |
| தண்ணீர் | |
| ஜெலட்டின் | 2 மே.கரண்டி |
| ஒரு முட்டை | |

**செய்முறை**

- சீனியுடன் எலுமிச்சை சாற்றை கலந்து அடுப்பில் வைத்து கொதிக்க விட வேண்டும். ஐந்து நிமிடங்களின் பின் இறக்கி விட வேண்டும்.
- ஜெலட்டினை [illegible] வெந்நீரில் நன்றாக கரைத்துக் கொள்ள வேண்டும்.
- முட்டையின் மஞ்சள் கருவை நன்றாக அடித்து ஜெலட்டின் கரைசலுடன் சேர்க்க வேண்டும்.
- ஒரேஞ் பழச்சாற்றை கொதித்த எலுமிச்சம் சாறுடன் சேர்த்து முட்டைக் கலவையோடு கலந்து குளிசாதனப் பெட்டியில் வைக்க வேண்டும்.
- ஒரு மணி நேரம் கழித்து [illegible] கெட்டியான [illegible] எடுத்து ருசிக்கலாம்.



# பெண்

சேலைக்குள் வாழ்ந்த உன்னை
சகதிக்குள் வீழ்த்திய காம
அரக்கர்களுக்காக
உன் வாழ்வை நீ
அழித்திடாதே
கற்பு என்பது ஆணுக்கும் தானம்மா
பெண்ணே! நீ தவறாக வீழவில்லை
காமுகர்களால் வீழ்த்தப்பட்டாய்
நீ மாதவியாய் இராதே
கண்ணகியாய் மாறிடம்மா.
உனதுயிரின் அடி நாதமே
கருவறை தான்
கருவறையின் உயிர் நீ
கல்லறையில் சங்கமிப்பதோ?
உனக்கும் ஓர் வாழ்க்கையுண்டு
அதை நீ புரிந்து கொண்டால்
உலகமே உன்னை வணங்கிடாதா!

றெ.வேஜீன் விஜிதா,
யாழ்ப்பாணம்.

## பெண் 'மணிச்' சிந்தனைகள்

- தோல்வியைக் கண்டு துவண்டு விடாதே. உன் வெற்றியின் தொடக்கமும் அதில் தான் உள்ளது.
- பிள்ளைகளின் எத்தகைய குற்றத்தையும் மன்னித்துவிடும் நீதிமன்றம் தாயின் இதயம் மட்டும் தான்.
- இறந்த காலத்தை மாற்ற முடியாது உண்மைதான். நிகழ் காலமும் எதிர் காலமும் உங்கள் கையில். அவை போதுமே!
- இலட்சியமற்ற பெண் துடுப்பற்ற படகைப் போன்றவள்.
- விட்டுக் கொடுத்தலே வாழ்வின் நியதி. அதில் தான் வாழ்வின் பொக்கிஷங்கள் நிறைந்துள்ளன.
- இழந்து விட்ட இன்பங்களை தூக்கிப் போட்டு கடக்கும் போது துயரங்களை இறுகப் பற்றிக் கொள்.
- பெண்மைக்கு மேன்மை பொறுமை. அதுதான் உன் வெற்றியின் மாபெரும் ரகசியம்.

யோ.சசிகலா
பேலியகொட.

## தீபங்கள் பேச...



மாலையில் சாமி படத்துக்கு தீபம் ஏற்று முன் திரியை ஒரு மணி நேரத்துக்கு முன்பே எண்ணெயில் ஊறவைத்து விட வேண்டும். பின் அந்தத்திரியை விளக்கில் வைத்து எண்ணெய் விட்டு சுடரேற்றினால் மனம் போல தீபமும் சுடர் விட்டு பிரகாசிக்கும்.

## கேள்வி-பதில்

அன்புக்குரிய சகோதரிகளே!

உங்களுக்காக இந்தப் பக்கத்தில் கேள்வி-பதில் பகுதி ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

[illegible] இருந்து ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

உங்கள் கேள்விகள், ஆக்கங்கள் ஆகியவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:-
பெண்
சுடர் ஒளி வார இதழ்
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றான் வீட்டு மல்லிகை

திருமணம் எப்போது நடக்கும்? எப்படி நடக்கும்? யாருடன் நடக்கும்? ஏன்பது புதிரானது. ஆனால், நன்றாக நடந்து முடிந்து, இனிமையாக தொடர்ந்த இல்லற வாழ்வில் திடீரென 'சாத்தான்' சனியனாக வந்து விட்டால் எத்தனை பேராபத்து என்பதை உணர்த்தும் உண்மைக்கதை, இது.

ஒருவனது தொல்லை நிறைந்த காதல் இச்சையால் நான், எச்சில் கனி ஆனேன். அதுவரை பிரியாத எங்கள் தாம்பத்தியக் கட்டில் அன்றோடு பிரிந்தது.

எப்படி?

நான் ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்தவள். ஆனாலும், கடவுள் எனக்கு அழகை வாரி இறைத்திருந்தான். அதனாலேயே வரதட்சணையாக எதையும் எதிர்பார்க்காத பணக்கார குடும்பத்தில் என்னை மருமகளாக ஏற்றுக் கொண்டார்கள்.

என் கணவரை எனக்கு நன்றாக பிடித்திருந்தது. அதேபோல அவரும் என் மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தார்.என் கணவர் நகரில் பெட்ரோல் ஷெட், நடத்தி வந்தார். நாங்கள் குடித்தனம் நடத்தியது கிராமத்தில். வீட்டுக்குப் பக்கத்திலேயே நிலம் இருந்தது. வீட்டையும் நிலத்தையும் கவனிக்க வேலைக்காரர்கள் இருந்தார்கள். நான் சமையல் கூட செய்வதில்லை. மேற்பார்வையிடுவதோடு என் வேலை முடியும். ஏறக்குறைய நான் குட்டி மகாராணி போல் வாழ்ந்து வந்தேன்.

அவர் காலையில் சிற்றுண்டி முடித்தவுடன் ஒன்பது மணிக்கெல்லாம் நான்கு மைல் தூரத்திலுள்ள பெட்ரோல் ஷெட்டை கவனிக்கப் போய்விடுவார். அந்த வழியே செல்லும் பேருந்தில் மதிய சாப்பாட்டை கொடுத்து அனுப்பிவிடுவேன். இரவு ஒன்பது மணிக்கு மேல் தான் என்னவர் வீடு திரும்புவார்.

எங்கள் தாம்பத்தியம் குறைவின்றி தொடர்ந்தது. ஆனால், துரதிருஷ்டம் திருமணமாகி மூன்று ஆண்டாகியும் ஒரு குழந்தை இல்லை. அந்தக் கவலையைத் தவிர நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்து வந்தோம்.

ஒருநாள் வங்கியில் பணம் போடச் சென்றேன். சனி, என்னைப் பிடிக்கப் போகிறது என்பதை நான் சற்றும் அறியவில்லை.

கல்லூரியில் என்னோடு படித்தவன், வங்கியில் காசாளராக உட்காந்திருந்தான். அவனைக் கண்டு திடுக்கிட்டுப் போனேன்.

பள்ளி நாட்களிலேயே அவனுடைய அட்டகாசம் தாங்க முடியாது. அவனால் மனம் குமுறிய பல மாணவிகள் உண்டு. என்னைக் கூட அவன் பலமுறை சீண்டிப் பார்த்து, அவமானப்பட்டிருக்கிறான்.

அவன், வக்கிரகுணம் படைத்தவன். தான் விரும்பியதை பெற எந்த மகாபாவத்தையும் செய்யத் துணிந்தவன்.

என்னைக் கண்டவுடன், அவன் மகிழ்ந்தான்... வழிந்தான். எச்சில் வடிக்காத குறைதான். மறுநிமிடம், குசலம் விசாரித்தான். சம்பந்தமில்லாத கேள்விகளைக் கேட்டான். ஒவ்வொன்றுக்கும் பிடிகொடுக்காமலே 'நறுக்'என்று பதில் சொன்னேன். பணத்தை செலுத்தி விட்டு வீடு திரும்பி விட்டேன்.

சனியன் நம்மை விட்டது என ஆறுதல் பட்டேன். ஆனால், அது ஏழரைச் சனியாக இருந்தது.

அன்று மாலை-

எங்கள் வீட்டைத் தேடி அவன் வந்து விட்டான். எனக்கு பகீரென்றது. நான் சொல்லாமலே சோபாவில் உட்கார்ந்தான். பணம் செலுத்திய படிவத்தில், நான் கையொப்பமிடவில்லை என்று காரணம் காட்டி, தான் அழையா விருந்தாளியாக வந்ததுக்கு விளக்கம் கூறினான்.

அவன் கண்கள், வீட்டையும் என்னையும் நோட்டமிட்டன.

"நாளை வந்து கையொப்பமிடுகிறேன்" எனச் சொல்லி சமாளித்து போகச் சொன்னேன். அவன் எழுந்திருக்க மனமில்லாமலே எழுந்து போனான்.

மறுநாள் காலை பதினொரு மணிக்கு வங்கிக்குச் சென்றேன். அது, கிராமப் பகுதி என்பதால் எப்போதுமே அதிக கூட்டம் இருக்காது. அதிலும் அன்று அந்த அயோக்கியனுக்கு சாதகமான நாள்போலும். வங்கி ஊழியர்களைத் தவிர வேறு யாருமில்லை.

நான், அந்தப் படிவத்தில் கையொப்பமிட்டு விட்டு திரும்புகையில், அவனும் தன் இருக்கையை விட்டு எழுந்தான். என் பின்னாலேயே வாசல் வரை வந்தான்.

"நீ நல்லபடியா வாழ்ந்துகிட்டு இருக்கேன்னு உன்னுடைய தோற்றம் சொல்லுது. மகிழ்ச்சி! ஆனா நீ பிளஸ்-2 முடித்து பள்ளியை விட்டு வெளியேறிய நாள் முதல் நான் உன்னையே நினைச்சு ஏங்கிட்டு இருக்கேன்.

இப்போ நீ மாற்றான் மனைவி. இருந்தாலும் ஒரே தடவை, உன்னை எனக்குக் கொடு. இதை மறுக்காதே! நான் ஏமாற்றமடைந்தால் எப்படி மாறுவேனோ எனக்கே தெரியாது. நல்லா யோசனை பண்ணு. இப்ப போயிட்டு வா!" என்று சொல்லி விட்டு அவன் இருக்கைக்குப் போய்விட்டான்.

எனக்கு தலை சுழன்றது. சுற்றும் முற்றும் பார்த்தேன். சற்று தள்ளி, உள்ளூரைச் சேர்ந்த சிலர் பேருந்துக்காக காத்திருந்தார்கள். அவர்களைக் கடந்து எப்படியோ வீட்டுக்கு வந்து, படுக்கையில் விழுந்தேன்... அழுதேன். இதயத்துக்குள் வண்டு ஒன்று புகுந்து குடைந்தது போல் இருந்தது.

நான்கைந்து நாள்கள் கழித்து-

ஒருநாள் மாலையில் வங்கி முடிந்தவுடன் நேரே அவன் எங்கள் வீட்டுக்கு வந்தான். வேலைக்காரிகள் வேலைகளை முடித்து விட்டு புறப்பட்டு போய் விட்டார்கள்.

வீட்டில் வேறு யாருமில்லை என்று தெரிந்து கொண்டவன், என்னை ஒரு மாதிரிப் பார்த்தான். திடீரென வாரியணைத்தான். படுக்கையில் கிடத்தினான். நான் முரண்டு பிடித்துக் கூச்சல் போட்டிருந்தால் கொல்லைப் புறத்தில் நின்ற வேலைக்காரர்கள் வந்திருப்பார்கள்.

அவனுடைய ஈமக் காரியத்துக்கு எலும்பு கூட மிஞ்சி இருக்காது. அனால், ஊர் பலவிதமாகப் பேச வாய்ப்பு கொடுத்து விடக்கூடாது என்று நான் பாறையாக்கிக் கொண்டேன்.

அந்த மிருகம் என் மீது எத்தனை நாள் வெறிகொண்டிருந்ததோ; என்னை சின்னாபின்னப்படுத்தி விட்டது. வரம்பை மீறி குதறியெடுத்து விட்டு, ஓடிவிட்டது.

எவ்வளவு நேரம் அப்படியே கிடந்தேனோ தெரியவில்லை. களைப்பு நீங்கியதும் சுதாகரித்துக் கொண்டு எழுந்தேன். ஆடைகளை சரி செய்து, முகத்தை துடைத்துக் கொண்டு வெளியே வந்த போது; என் கணவரின் குரல் கொல்லைப் புறத்தில் கேட்டது. நான் அதிர்ந்து போனேன்.

வீட்டு வாசலில் அவருடைய செருப்புகள் கிடந்தன. அவர் தொழுவத்தில் வேலை செய்பவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார்.

மாலை வேளையில் வரமாட்டார். அப்படியே வந்தாலும், வந்தவுடன் என்னைக் கூப்பிடுவார். அன்று, அவர் கூப்பிட்ட சத்தம் கேட்கவில்லை. அவர் ஏன் கொல்லைப்புறம் செல்ல வேண்டும்? 'நடந்தது எல்லாம் அவருடைய கண்களில் பட்டிருக்குமோ?' மனம் பேதலித்தேன். பூமி தலைகீழாக சுழன்றது போலிருந்தது. நெஞ்சு படபடத்தது. குப்பென்று வியர்த்துக் கொட்டியது.

"என்ன... திடீர் என்று வந்திருக்கீங்க?" நாக்கு குழறக் கேட்டேன்.

"என்னவோ நினைச்சேன்; வந்தேன், காப்பி கொண்டு வா!" என்றார் சாதாரணமாக. அன்று இரவு வரை அவருடைய நடவடிக்கைகளில் எந்த மாற்றமும் இல்லை. வழக்கம் போலவே இருந்தார்.

ஆனால், படுக்கை அறையில், விதி விளையாடி விட்டது. அதுவரை என்றும் பிரியாத எங்கள் கட்டில், பிரிந்தது. ஆமாம்... அவர் தனியாக கட்டில் போட்டுக் கொண்டார். நான் அவரின் கால்களை பிடித்துக் கொண்டு அழுதேன். அவர் எதுவுமே பேசவில்லை.

அன்று பிரிந்த கட்டில் இன்று சுமார் பத்து ஆண்டாகியும் ஒன்று சேரவில்லை, இது எங்கள் இருவருக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்.

பணம் கொடுக்கல்- வாங்கல், ஆட்களை வேலை வாங்கும் அதிகாரம், வீட்டுக்கு தேவையானவைகளை வாங்குவது எல்லாம் எப்போதும் போல நான்தான். ஆனால், கட்டில் அறையில் நான் குப்பை தொட்டி ஆகிவிட்டேன்.

வீட்டுக்குள் வந்த அந்த நாயை அன்று கூச்சல் போட்டு விரட்டாமல்; காப்பாற்றியதால் இன்று என் வாழ்க்கையே இழந்து வேதனைப்படுகிறேன்.

தாலி கட்டியவர் எனக்கு நல்ல கணவனாக இருக்கிறார். ஆனால், அவருக்கு நான் நல்ல மனைவியாக இல்லை. நான் செய்தது தவறுதான். அதுக்குத்தான் தண்டனை அனுபவிக்கிறேன்.

திருமணத்துக்குப் பிறகும் பழைய நண்பன் என்று யாரையும் வீட்டுக்குள் நுழைய விடாதீர்கள். தப்பித் தவறி வீட்டுக்குள் நுழைந்தாலும், ஒருபோதும் இசைந்து கொடுத்து விடாதீர்கள். அது உங்கள் குடும்ப வாழ்வை, கூறு போட்டுவிடும்.




# ஊதாதீங்க !

"எத்தனை தரம் சொல்லியாச்சு, ஊதுறதை நிறுத்தமாட்டீங்களா?"

"ப்ச்ச..."

"பொழுது விடிஞ்சா, உங்களோட இது தான் பிரச்சினையாய் போச்சு..."

"கொஞ்சம் சும்மா இரேன்."

"டாக்டர் என்ன சொன்னவர். கொஞ்சமாவது நினைச்சு பாத்தீங்களா?"

தலையை அலட்சியமாக ஆட்டிவிட்டு புகைவளையத்துள் புகுந்துகொண்டான், சேகர்.

"பாழப்போன இந்த பழக்கத்தாலதானே உங்கடை உடம்பே கெட்டுப்போகுது... எத்தனை முறை தான் சொல்றது ஊதாதீங்க ... ஊதாதீங்க எண்டு. இது மட்டுமா? நேத்து உங்கட மகன் என்ன செய்தான், தெரியுமா?"

"என்ன செய்தான்?"

"அப்ப மாதிரி சிக்ரெட்டுப் பிடிக்கிறேன் பாருங்க என்று சொல்லி பேப்பரை சுருட்டி குழாய் மாதிரி வாயில் வைத்து ஊதுறான்.. அவனும் கெட்டுப்போயிடுவானோ எண் எனக்குப் பயமாக இருக்கு."

இதைக்கேட்டு சிறிது அதிர்ச்சியடைந்த சேக சமாளித்தவனாக "உனக்கு டாக்டர் என்ன சொல் இருக்கிறார்?"

"என்ன சொல்லி இருக்கிறார்."

"உன்னையும் ஊதாக் கூடாது எண்டுதானே சொல் இருக்கிறார்.

"உங்களை போலவா நான்?"

"முதல்ல நீ ஊதுவதை நிறுத்து."

"சரி... நானும் இனிமே வாயை அடக்கி, மருந் மாத்திரைகளை விடாம சாப்பிட்டு, எடையைக் குறைத்து உடம்பு ஊதாம பார்க்கிறேன். நீங்களும் சிகரெட் ஊதுவதை நிறுத்துங்க."

மனைவியை ஒரு விதமாக பார்த்த சேகர், ஏதே நினைத்தவனாக பாதி ஊதிய சிகரெட்டைத் தூக் எறிந்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அறிவியல்



## பயனியர்-10

மனிதன் உருவாக்கிய விண்கலம் ஒன்று சூரிய மண்டலத்தைக் கடந்து சென்றது என்றால் அது பயனியர்-10 என்ற அமெரிக்க விண்கலம்தான்.

2.3.1972 அன்று பூமியில் இருந்து விண்ணிற்கு செலுத்தப்பட்ட பயனியர்-10 என்ற விண்கலம், 1983 ஆம் ஆண்டு சூரிய மண்டலத்தைக் கடந்து சென்றது. 19.8.2000 வரை இந்த விண்கலத்திலிருந்து ரேடியோ அன்டெனா மூலம் சிக்னல்கள் வந்தன. அதற்குப்பிறகு ஒரு சமிக்ஞையும் வரவில்லை. இந்த நிலையில் எட்டு மாதங்கள் கழித்து, 2001, ஏப்ரலில் பயனியர்-10 விண்கலத்திலிருந்து ரேடியோ சமிக்ஞைகள் வருவதைக் கேட்டு 'நாஸா'(NASA) விஞ்ஞானிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையே உள்ள குறுங்கோள்களின் பாதை வழியே சென்ற முதல் விண்கலமும் இதுதான். வியாழனுக்கு அருகில் சென்று அதை புகைப்படம் எடுத்து அனுப்பிய முதல் செயற்கைக்கோளும் இதுதான்.

இவ்வளவு பெருமைகள் உள்ள பயனியர்-10 இதுவரை 29 ஆண்டுகள் பயணம் செய்ததில் பூமியிலிருந்து 11.2 பில்லியன் கி.மீ. தூரத்திற்கு அப்பால் உள்ளது. தொடர்ந்து சென்று கொண்டே இருக்கிறது. பயணங்கள் முடிவதில்லை தான்.



## மிகச் சிறிய பறவை

கியுபா நாட்டிலுள்ள Bce Humming BIRD பறவைதான் உலகிலேயே சிறியபறவை. அதன் நிறை இரண்டு கிராம். மூக்கிலிருந்து வால் வரை இரண்டு அங்குலம் மட்டுமே. இந்தப் பறவை இனத்தில் பெண்பறவையை விட ஆண்பறவையே சிறியது. பெண்பறவை ஆண் பறவையைவிட 1/4 அங்குலம் வரை உயரமாக இருக்கும். விநாடிக்கு எண்பது முறை துடிக்கும். இறக்கைகளின் துடிப்பை கண்களால் பார்க்கமுடியாது. பெண் பறவையுடன் இனச்சேர்க்கையில் ஈடுபடும் நேரத்தை தவிர்ந்த மற்றைய நேரங்களில் தனியாகவே இந்தப்பறவை பறக்கும். சுறுசுறுப்பாக இருப்பதால் அதற்கு அதிக உணவு தேவைப்படுகிறது. சின்னச் சிலந்திகள், ஈக்கள் போன்றவற்றைச் சாப்பிட்டாலும் முக்கியமாக தேன்தான் அதன் உணவு. இந்த அதிசயப் பறவை அழிந்துவிடக்கூடிய ஆபத்தில் இருக்கிறது.

## நியர் ஷூமேக்கர்

2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி அன்று அமெரிக்கா அனுப்பிய நியர் ஷூ மேக்கர் என்ற செயற்கைக்கோள், ஈரோஸ் என்ற விண்கல் மீது இறங்கிச் சாதனை படைத்தது.



'நியர்' என்பதற்கு 'நியர் ஏர்த் அஸ்டிராய்ட் ரென்ஸ்வஸ்'(Near Earth Asteroid Rendezvos) என்பது முழு விரிவாக்கமாகும். இதன் பொருள் 'பூமிக்கு அருகே உள்ள விண்கற்கள் பற்றிய ஆய்வு' என்பதாகும். விண்கல் ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஜீன் ஷூ மேக்கர் என்பவரின் பெயரையும் சேர்த்து 'நியர் ஷூ மேக்கீர்' என்று பெயர் வைக்கப்பட்டது.

அமெரிக்கா 1,425 கோடி ரூபாய் செலவில் நியர் ஷூ மேக்கர் செயற்கைக்கோளைத் தயாரித்து 17.2.1996 இல் 'ஈரோஸ்' விண்கல்லை ஆராய அனுப்பியது.

செவ்வாய், வியாழன் ஆகிய கோள்களுக்கு இடையே ஆயிரக்கணக்கான விண்கற்கள் சுழலுகின்றன. அவற்றில் ஒன்றுதான் 'ஈரோஸ்' விண்கல்(Eros Asteroid). பூமியில் இருந்து 190 கோடி மைல் தூரத்தில் உள்ள விண்கல்லை நியர் செயற்கைக்கோள் 2000 ஆம் ஆண்டு அடைந்தது. ஓராண்டு முழுவதும் ஈரோஸை சுற்றி வந்து 60 லட்சம் புகைப்படங்களை எடுத்து பூமிக்கு அனுப்பியது.

'ஈரோஸ்' என்பது கிரேக்கர்களின் காதல் தெய்வம். இதனால், காதலர் தினமான 14.2.2001 க்கு முன்பே12.2.2001 இல் ஈரோஸ் மீது நியர் ஷூ மேக்கரை அமெரிக்க விஞ்ஞானிகள் வெற்றிகரமாக இறக்கினார்கள். 15 நாட்கள் ஈரோஸை ஆராய்ந்தது இந்த செயற்கைக்கோள்.

விண்கல் ஒன்றின் மீது செயற்கைக்கோள் இறங்கியதால் வால் நட்சத்திரங்கள் பற்றிய ஆராய்ச்சிக்கு இது புதிய வழிகளை வகுக்கும். ஈரோஸ் விண்கல் 33 x13 x 13 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டது. அது ஒரு முறை தன்னைத்தானே சுற்ற 56 மணி நேரமாகிறது. சூரியனைச் சுற்றி வர ஓராண்டு எடுத்துக்கொள்கிறது.

ஈரோஸ் விண்கல்லில் உள்ள உலோகங்களை மனிதன் பயன்படுத்திக்கொள்ள எதிர்காலத்தில் நல்ல வாய்ப்பு உள்ளது. ஈரோஸில் தொழிற்சாலைகள்கூட வந்து விடலாம்.

## அறிவியல் துணுக்குகள்

கடலில் சென்று கொண்டிருக்கும் கப்பல்கள் புத்தாண்டு பிறந்துவிட்டதைக் குறிக்க பதினாறு முறை மணிஅடித்து அறிவிக்கும்.

ஓர் அடி எடுத்து வைக்க உடலெங்கும் 54 தசைகள் பணிபுரிய வேண்டியுள்ளது.

எழுபது வயது வரை வாழும் ஒரு மனிதனின் இதயம் 250 கோடி தடவை துடிக்கிறது.

கிறிஸ்மஸ் தினத்தை டிசம்பர் 23 ஆம் திகதியே கொண்டாட ஆரம்பிக்கும் இரு நாடுகள் இத்தாலியும் ஸ்பெயினும்தான்.

நம் கையின் நடுவிரல் நகங்கள் வேகமாக வளரும்; கட்டைவிரல் நகம் மிக மெதுவாகவே வளரும்.

முதலாம் ஹென்றி அரசர்தான் யார் (Yard) என்ற அளவு முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர். கையை நீட்டினார். தன்மூக்கிலிருந்து கட்டை விரல் வரை உள்ள தூரத்தை ஒரு யார் என்று அறிவித்தார். இதுதான், இன்றுவரை உள்ள யாரின் சராசரி (Yard) அளவு.

நல்ல உடல்நிலை உள்ள ஒருமனிதன் 24 மணி நேரத்தில் மூச்சுவிடும் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?
23000 முறைகள்.

உலகின் மிகப் பெரிய சுரங்கப்பாதை ஜப்பான் நாட்டில் உள்ளது. இது கடலின் அடியில் சுமார் 55 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைந்துள்ளது. ஜப்பானில் 'டாப் பிசாகி' என்ற இடத்திற்கும் 'ஹெக்கேடோ' தீவிலுள்ள 'புகுசிமா' என்ற இடத்திற்கும் இடையே இதை அமைத்துள்ளார்கள். 100 ஆண்டுகளுக்கு முன் அமைக் கப்பட்ட மற்றொரு சுரங்கப்பாதை சுவிட்சர்லாந்து நாட்டுக்கும் இத்தாலிக்கும் இடையே அமைந்துள்ளது. இது ஆல்ப்ஸ் மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட 20 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சுரங்கப்பாதை. ஆகும்.

## உத்தரவிட்டால் பணி முடிக்கும் ரோபோ!



மனித இயக்கம், வரவர இயந்திரமயமாகிக் கொண்டிருக்கிறது. மனிதன் செய்யும் காரியங்களை இன்றைக்கு ரோபோக்களே செய்து முடித்து விடுகின்றன. கணினியின் ஆதிக்கம் மனிதனின் நினைவு ஆற்றலையும் மங்கச் செய்து வருகிறது. எந்தவொரு விஷயத்தையும் நினைவில் நிலை நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இன்றைக்கு மனிதனுக்கு தேவை இல்லாத ஒன்றாகி வருகிறது. எதையும் மனிதன் கம்ப்யூட்டரில் பதிவு செய்து விடுகிறான். தேவைப்படும் போது அதனை எடுத்தாளுகிறான். இதனால் எதிர்காலத்தில் மனிதனுக்கு நினைவாற்றல் என்பது மறந்தே போகும் என்ற அபாய எச்சரிக்கையையும் விஞ்ஞானிகள் விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் தான் ஜப்பான் அதிநவீன ரோபோ ஒன்றை கண்டு பிடித்துள்ளது. இதன் உயரம் 4 அடிதான். ஆனால் இதன் பணியோ அபாரம். உத்தரவுகளை கேட்டு, இந்த ரோபோ எடுத்து வைக்க வேண்டிய இடத்தில் கனகச்சிதமாக வைத்து விடுகிறது. இந்த ரோபோவின் அடியில் சக்கரம் பொருத்தப்பட்டிருப்பதால் எளிதாக நகர்கிறது.

மனிதன் தன் கையால் எடுத்து ஆளமுடியாத ரசாயனப் பொருட்களை இந்த ரோபோவின் உதவியால் மிக எளிதாக எடுத்து வைத்து விட முடியும் என்று இந்த ரோபோவை கண்டு பிடித்த ஜப்பானிய கணிப்பொறி வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவந்த ......

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னைப் போல தனது அடியாட்கள் அறுபது பேருடன் இந்தியாவில் சுற்றுலா செய்துவிட்டு வருகிறார்.

இவ்வாறு நாடு பற்றி எரிவதற்கு யுத்த நிறுத்தம் முறையாக அமுல் செய்யப்படாமையே காரணம் என்றும் அது அச்சொட்டாக அமுல் செய்யப்படுமானால் வன்முறைகள் வெடிப்பதற்கு காரணம் ஏதும் இல்லை என்றும் கூறியுள்ள விடுதலைப்புலிகள் இந்த குறைபாடு பற்றி அரசாங்கத்துடன் பேசுவதற்கு தாம் எந்த நேரமும் தயாராகவே இருப்பதாக சர்வதேசத்துக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் கூறி வருகிறார்கள்.

**ஒஸ்லோவில் பேச்சு**

அரசாங்கமோ பேச்சு வார்த்தை நடைபெற வேண்டிய இடத்தை பிரச்சினையாக்கி ஆசிய நாடொன்றிலேயே பேச்சு வார்த்தை என்று அடம்பிடிக்கிறது.

ஆசியாவில் மட்டும் தான் பேச்சுவார்த்தை என்ற தனது பிடியை தளர்த்த அரசாங்கம் விரும்பாமைக்கு காரணம் சர்வதேச சமூகத்திலிருந்து தம்மை ஓரங்கட்ட எடுக்கப்படும் முயற்சியே என்றும் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையை ஒஸ்லோவில் நடத்திவிட்டு ஏனைய சுற்றுகளை அரசாங்கம் விரும்பும் இடத்தில் நடத்தலாம் என்றும் விடுதலைப் புலிகள் கூறியும் அதற்கு செவிசாய்ப்பதற்கு தயாரற்ற நிலையிலேயே அரசாங்கம் இருக்கிறது.

ஆனால் அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சு வார்த்தை மேசைக்கு அழைக்கவேண்டுமானால் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதே அதற்கான வழியாகும். அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் கூட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னர் நியாயமான முறையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டால் அதில் பங்கு கொள்ள விடுதலைப் புலிகள் ஆர்வமாக உள்ளதை அறிந்து கொண்டதுடன் அவர்களின் நிலைப் பாட்டில் திருப்தியும் அடைந்துள்ளனர்.

இருப்பினும் தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவ மற்றும் அரசியல் அழுத்தங்களுக்கு தாம் வளைந்து கொடுக்கப் போவதில்லை என்பதை பல தடவைகள் இன்று வரை நிருபித்துள்ளனர். அவர்களுக்கு தம்முடைய பலத்தில் பூரண நம்பிக்கை உண்டு.

அரசாங்கம் புலிகளைத் தனிமைப் படுத்த எண்ணி பேச்சு வார்த்தைகளை தள்ளிப் போட முயற்சிக்குமானால் தீவிர வன்முறைகளுக்கும் அழிவுகளுக்கும் களம் அமைத்துக் கொடுத்த பொறுப்பை ஏற்க வேண்டிய நிலைமை எதிர்காலத்தில் அதற்கு ஏற்படலாம். பேச்சு வார்த்தையில் அரசாங்கத்துக்கு நம்பிக்கை இருக்குமானால் ஒஸ்லோவுக்கு செல்வதைத்தவிர அதனிடம் வேறு தெரிவுகள் இல்லை. பந்து இப்போது அரசாங்கத்தின் பக்கதிலேயே உள்ளது. போரா அல்லது சமாதானமா என்பதை அரசாங்கமே முடிவு செய்யவேண்டும். *



"தொட்டதுக் கெல்லாம் என் மனைவி கோபப்படறா!"
"அப்படி என்னத்தை தொட்டே?"
"என் வீட்டு வேலைக் காரியைத் தொட்டேன்!"



## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |



# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 09-01-2006 முதல் 15-01-2006வரை

பொ. சந்திரன்

**மேடம்: அச்சுவினி, பரணி,கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது நல்லதல்ல. மேலும், சனி பார்ப்பது பாதகமானது. குரு பார்ப்பதால் ஆறுதல் உண்டு. மேலும், சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். (2,7) உரிய சுக்கிரன் 9இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. (3,6) உரிய புதன் 10ல் இருப்பது நல்லது. உறவினர் அன்பு பாராட்டுவர். உடல் ஆரோக்கியம் உண்டு. தகவல் தொடர்பு சீராக இருக்கும். 4இல் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் தாய்க்கு நல்லதல்ல. இருப்பிடத்தில் பிரச்சினை உருவாகலாம். (9,12) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. பிதாநலம்,சயன சுகம் உண்டு. (10,11) உரிய சனி 4இல் இருப்பது நல்லதல்ல. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது.

**இடபம்:கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 8இல் இருப்பது நல்லது. இருப்பினும், சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் 9இல் இருப்பது நல்லதல்ல. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். 4க்கு உரிய சூரியன் 8இல் நல்ல பலனைத் தர மாட்டார். தாய்க்கு நல்லதல்ல. வீட்டால் பொருட்செலவு வரக்கூடும். (7,12) உரிய செவ்வாய் 12இல் நல்ல பலனைத் தர மாட்டார். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. (8,11) உரிய குரு, 6இல் இருப்பது பாதகமானது. நண்பர்களுக்குக் கூடாத காலம். முதலீடுகளால் லாபம் இருக்காது. (9,10) உரிய சனி மூன்றில் இருப்பது நல்லது. தொழில் துறை முன்னேற்றம் உண்டு, பிதாநலம்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 8இல் இருப்பது நல்லது. இருப்பினும், சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தாய்நலம், பிரயாண வாய்ப்பு உண்டு. வீடு, காணி லாபம் உண்டு. இரண்டாம் இடத்தில் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. (5,12) உரிய சுக்கிரன் 7ல் இருப்பது நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். தீய எண்ணங்கள் மனதில் தோன்றக்கூடும். (7,10) உரிய குரு 5இல் இருப்பது நல்லது. திருமண வாய்ப்பு உண்டு. தொழில் துறை முன்னேறும். பகை விலகும். (8,9) உரிய சனி இரண்டில் இருப்பது நல்லதல்ல. பிதாவுக்குக் கூடாது, முதலீடுகளால் லாபம் இருக்காது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசி நாதன் சந்திரன் மேடம் முதல் கடகம் வரை சஞ்சரிப்பார். ராசியில் சனி இருப்பதும், அதை செவ்வாய் பார்ப்பதும் நல்ல சகுனம் அல்ல. வார முற்பகுதியில் நல்ல பலனையும் பிற்பகுதியில் தீய பலனையும் கொடுக்கும். இரண்டுக்குரிய சூரியன் 6இல் இருப்பது விசேஷம். வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். (3,12) உரிய புதன் 7இல் இருப்பது நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. உறவினரால் பிரச்சனை உருவாகக்கூடும். தகவல் தொடர்பு சீராக இருக்காது. (4,11) உரிய சுக்கிரன் 6இல் நல்ல பலனைச் செய்யாது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. தாய் நோய்வாய்ப்படலாம். தனிப்பட்ட வாழ்க்கையில் பிரச்சினை தோன்றலாம். (5,10) உரிய செவ்வாய் 10இல் நல்ல பலனைத் தர மாட்டார். தொழிலில் முன்னேற்றம் இருக்காது. 7க்குரிய சனி ராசியில் இருப்பது திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் 5இல் நல்ல பலனைத் தர மாட்டார். இருப்பினும், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். மன அமைதி பாதிக்கலாம். (2,11) உரிய புதன் 6இல் நல்ல பலனைச் செய்யும். வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். நண்பர்களுக்கு நல்லபலன் உண்டு. (3,10) உரிய சுக்கிரன் 5இல் இருப்பது நல்லது. தொழில் துறை முன்னேற்றம் உண்டு. உறவினர் விசுவாசமாக இருப்பர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். (4,9) உரிய செவ்வாய் 9இல் நல்ல பலனைத் தரமாட்டார். பெற்றோருக்கு நல்லதல்ல. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். (5,8) உரிய குரு 3இல் இருப்பது நல்லதல்ல. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். முதலீடுகளால் லாபம் குறையலாம். (6,7) உரிய சனி 12இல் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 5இல் நல்ல பலனை தர மாட்டார். மேலும், சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. பொது வாழ்வில் அபகீர்த்தி ஏற்படலாம். (2,9) உரிய சுக்கிரன் 4இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. பிதா நலம். (3,8) உரிய செவ்வாய் 8இல் நல்ல பலனைத் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் குறையலாம். உறவினர் விலகி இருக்க விரும்புவர். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,7) உரிய குரு இரண்டில் இருப்பது நல்லது. தாய்நலம். திருமண வாய்ப்பு உண்டு. வீட்டில் வருவாய் உண்டு. பகை விலகும். (5,6) உரிய சனி 11இல் இருப்பது நல்லது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் ஆரோக்கியம் உண்டு.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 3இல் இருப்பது நல்லது. இருப்பினும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். முதலீடுகளால் லாபம் இருக்கும். (2,7) உரிய செவ்வாய் 7இல் நல்ல பலனைத் தரமாட்டார். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (3,6) உரிய குரு ராசியில் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். உறவினரால் தொல்லையுண்டு. தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,5) உரிய சனி 10இல் நல்ல பலனைத் தர மாட்டார். தாய்க்கு நல்லதல்ல. பிள்ளைகளின் செயற்பாடு திருப்தி தராது. (9,12) உரிய புதன் 4இல் நல்ல பலனைத் தருவார். பிதா நலம். சயன சுகம் உண்டு. 10ல் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் தொழிலில் முன்னேற்றம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 6இல் இருப்பது விசேஷம். இருப்பினும், சனி செவ்வாயைப் பார்ப்பது பாதகமானது. ஆனால், குரு பார்ப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய குரு, 12இல் இருப்பது பாதகமானது. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (3,4) உரிய சனி, 9இல் நல்ல பலனைத் தர மாட்டார். தாய்க்கு நல்லதல்ல. தகவல் தொடர்பு பாதிக்கலாம். உறவினர் விலகி இருக்க விரும்புவர். (7,12) உரிய சுக்கிரன் இரண்டில் நல்ல பலனைச் செய்வார். திருமண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. 10க்குரிய சூரியன் இரண்டில் நல்ல பலனைச் செய்யமாட்டார். தொழில் துறை பாதிக்கலாம்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு, 11இல் இருப்பது விசேஷம். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தாய் நலம். தனிப்பட்ட வாழ்க்கை அமைதியாக இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,3) உரிய சனி 8இல் இருப்பது தீங்கானது. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. தகவல் தொடர்பு சீராக இல்லை. (5,12) உரிய செவ்வாய் 5இல் நல்ல பலனைச் செய்யாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனம் கட்டுப்பாடு இன்றி செயல்படும். சயன சுகம் இருக்காது. (6,11) உரிய சுக்கிரன் ராசியில் நல்ல பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. நண்பர்கள் நலம். (7,10) உரிய புதன் இரண்டில் நன்மை செய்யார். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். மறைமுக எதிரிகள் பொருள் நட்டத்தை உண்டாக்குவர். தொழில் துறை பாதிக்கும்.

**மகரம்:உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 7இல் இருப்பது தீங்கானது. இருப்பினும், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. (3,12) உரிய குரு 10இல் நன்மை செய்யாது. சயன சுகம் இருக்காது. உறவினரால் தொல்லையுண்டு. தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,11) உரிய செவ்வாய் 4இல் நன்மை செய்யாது. தாய்க்குக் கூடாது. நண்பர்களுக்கும் நல்லதல்ல. தனிப்பட்ட வாழ்வும் பாதிக்கலாம். (5,10) உரிய சுக்கிரன், 12இல் நன்மை செய்வார். பொது வாழ்வில் மதிப்பு உயரும். தொழில் துறை முன்னேறும். பிள்ளைகளின் செயல்திறன் அதிகரிக்கும். (6,9) உரிய புதன், ராசியில் நன்மை செய்யாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பிதாவுக்கு கூடாது. 7இல் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். மறைமுக எதிரிகள் பல வழிகளிலும் தாக்க முற்படுவர்.

### இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | |
| | செவ்வாய் பரணி சுக்கிரன்<br>சுக்கிரன் உத்தராடம் சூரியன்<br>புதன் உத்தராடம் சூரியன்<br>சூரியன் உத்தராடம் சூரியன்<br>குரு விசாகம் குரு<br>சனி பூசம் சனி | | சனி |
| புதன் | | | |
| சூரியன் சுக்கிரன் | | குரு | கேது |

மார்கழி 25 முதல் 02 வரை

சந்திரன் மேடம் முதல் கடகம் வரை

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. (2,11) உரிய குரு 9இல் இருப்பது விசேஷம். வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். நண்பர்களுக்கு நல்ல காலம். (3,10) உரிய செவ்வாய் 3இல் நல்ல பலனைத் தரும். தொழில் துறை முன்னேறும். பொது வாழ்வில் மதிப்பு உயரும். உறவினர் அன்பு பாராட்டுவர். (4,9) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது நல்லது. பெற்றோர் நலம். வீட்டால் வருவாய் அதிகரிக்கும். தனிப்பட்ட வாழ்வு அமைதியாய் நகரும். 7க்குரிய சுக்கிரன் 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு பிரகாசமாக இருக்கும். (5,8) உரிய புதன், 12இல் இருப்பது நல்லதல்ல. முதலீடுகளால் லாபம் குறையலாம்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு, 8இல் இருப்பது தீங்கானது. இருப்பினும், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பொது வாழ்வில் உரிய மதிப்பு கிடைக்காது. (2,9) உரிய செவ்வாய் 2இல் நல்ல பலனைச் செய்ய மாட்டார். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு நல்லதல்ல. (3,8) உரிய சுக்கிரன், 10இல் நன்மை செய்யமாட்டார். உறவினரால் தொல்லையுண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,7) உரிய புதன், 11இல் நன்மை செய்வார். தாய் நலம், திருமண வாய்ப்பு உண்டு. பகைவர் நண்பராவர். வீட்டால் வருவாய் உண்டு. தனிப்பட்ட வாழ்வின் இரகசியம் பேணப்படும். 6க்குரிய சூரியன், 10இல் நன்மை செய்வார். உடல் ஆரோக்கியம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரலோவியம்





பூ வரைவதும், படம் வரைவதும் கஷ்டமா என்று கேட்டால் இல்லை என்று பதில் வரும். ஆனால், அதை நகத்துக்குள் வரைவதாக இருந்தால் கண்டிப்பாக கஷ்டமான விடயம்தான். அதையும் இந்தக் காலப் பெண்கள் மாற்றி விட்டார்கள். நாம் பார்த்து இரசிக்கின்ற பெரிய பெரிய சீனரிகளை எல்லாம் ஃபிங்கர் டிப்ஸில் கொண்டு வந்து கலக்குகிறார்கள். இதற்கென சில பியூட்டி பார்லர்களும் இயங்கி வருகின்றன.

பியூட்டி பார்லருக்குப் போய் நகம் நீளமாக இல்லாவிட்டாலும் செயற்கை நகம் பொருத்தி மனதைக் கொள்ளை கொள்ளும் படங்களைத் தெரிவு செய்து அந்த நகங்களில் பிரிண்ட் போட்டுக் கொள்கிறார்கள். பட்டாம் பூச்சி, அழகான பூக்கள், இரட்டை தென்னை மரம்... இப்படி எக்கச்சக்கமான தினிசுகளுடன் நீள்கிறது அவர்களது பட்டியல்.




**HOTEL WESTEERN (PVT) LTD**




Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிருட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்டூரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

**No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04**

T.P.: +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax : +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www. hotelwesteern.com

ஒவ்வொரு புதன்கிழமையும் 'விஜய்' உங்கள் கரங்களில் தவழும்!

வாரம் தோறும் வெளிவருகிறது

Vijey விஜய்
**விஜய்**




மாணவர்கள் - இளையவர்கள் - ஆசிரியர்கள் என அனைவருக்கும் ஏற்ற அம்சங்களை உள்ளடக்கிய ஒரே பத்திரிகை

ஜனவரி 4ஆம் திகதி இதழ்...

THE SUNDAY TIMES

T.P. - 0112 435 454, 0714 943 854


wijeyanewspapers

மாணவர்களுக்கான பன்முக அறிவுசார் பத்திரிகை

**EXPOAIR** எக்ஸ்போ எயார்

*your friend in the skies...*

வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் – கொழும்பு

விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com




இப்பத்திரிக்கை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லான்ட் மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2006, ஜனவரி 08 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org